# வாழ்வாங்கு வாழ்வியல் தேவாரத் திரட்டு

தேவார முதலிகளின் சிந்தனையில்
மனித உயிரியின் வாழ்க்கை வட்டம்

# Selected Devarams for the Upliftment of human Life / Society





மண்ணில்
10.07.1927

விண்ணில்
16.12.2005





# வாழ்வாங்கு வாழ்வியல் தேவாரத் திரட்டு

## தேவார முதலிகளின் சிந்தனையில்
## மனித உயிரியின் வாழ்க்கை வட்டம்

## Selected Devarams for the Upliftment of human Life / Society


தொகுத்தவர் : கணபதி மகேசன்

(B.A Diploma in Education, S.L.E.S Class II)



நூல்கள்: 1000 பக்கங்கள்: 100

பதிப்பு: திருவள்ளுவர் பதிப்பகம், நல்லூர். தொ.பே.021 222 2181

விலை 100.00

ஆணையாளர்,
சைவநெறித் தொண்டர் கழகம்,
இல.6, இராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

*19.03.2006*

# முகவுரை

சமர்ப்பணம் - சங்கமம்

வாழை அடி வாழை எனவந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ!

எனது மாமனார் சரவணைச்சாமி அவருடைய இல்லாள் பெரியபிள்ளை. இவர்கள் தமது நடுவயதிலே துறவறம் பூண்டு செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் ஒருமடத்திலே தங்கியிருந்து தவம் புரிந்தனர். அவர்களுடைய பக்தி நிலையைக் கண்ணுற்ற சிதம்பர நடராசப்பெருமான் தானே வந்து அவரை ஆட்கொண்டு தென்நாட்டுக்கு அழைத்துச் சென்று சிதம்பரத்திலே தங்கி வழிபடுவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து கொடுத்தார். அங்கு தன்னை முழுவதுமாய் சிவனுக்கு அர்ப்பணித்து சீவன் முத்தராய் சிலஆண்டுகள் தங்கியிருந்த அவரைச்சுற்றத்தவர் சென்று வீட்டுக்கு அழைத்துவந்தனர்.

எனது அண்ணன் பதினொரு வயதுச்சிறுவனாய் இருக்கும் போதே சிதம்பர நடராசப் பெருமானின் அருள் பெற்று திருவாதிரை நாட்களில் சிதம்பரம் சென்று தீட்சதர் ஒருவரின் அரவணைப்பிலே தங்கியிருந்து தவம் செய்து எம்பெருமானின் அருளால் சிதம்பர இரகசியத்தையும் தரிசிக்கும்பேறு பெற்றவர். அவர் தனது வாழ்க்கை முழுவதும் அளவிறந்த இறைபக்தி கொண்டவராய் சீவன் முத்தராய் வாழ்ந்து 2005 ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் திருவாதிரை நாளில் சிவபதம் அடைந்தார்.

எனது தந்தையின் மூதாதையர் திருக்கூட்ட மரபினர். எனது தந்தை ஒரு பௌராணிகராக சைவசித்தாந்தியாக இறைவழிபாட்டிலும் திருமுறைகள் திருவைந்தெழுத்தை ஓதுவதிலும் அளவிறந்த ஆர்வம் கொண்டவர். ஆலய வழிபாட்டில் மட்டுமன்றி திருவிழாச் செய்தல், அன்னதானம் கொடுத்தல், அற்றோர்க்கு உதவுதல், அடியார்களை ஆதரித்தல் முதலிய சிவபுண்ணியங்களை இயற்றி இன்புற்றவர். குங்கிலியக்கலய நாயனாரை ஒத்த கொள்கை உடையவர்.

என் தாயாரோ ஒரு அருளாளர். பல மைல்களுக்கு அப்பால் உள்ள கோயிலிலே முதல் மணியடிக்க வீட்டிலிருநது அரோகரா போடுவார். எனது தந்தையாரின் திருவைந் தெழுத்து தாயாரின் அரோகரா மந்திரம் சிவனடியார்களின் ஆசி இவையே எனது வாழ்க்கைத் துணையாய் நின்று நான் காவி உடை அணிந்து துறவு பூணவும் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தைப் பெற்றுவாழ்நாள் முழுவதும் சைவநெறித்தொண்டு செய்யவும் வைத்தது என்பதை உணர்கிறேன்.

# சைவசித்தாந்தம்

சைவசமயமே சமயம், சிவபெருமானே பெரியவர் எல்லாப்புகழும் அவருக்கே சைவசித்தாந்தம் என்பதும் சைவநெறி என்பதும் ஒன்றே. சைவநெறி தோத்திரம் சாத்திரம் என இரு வகையாய் அமையினும் அவை ஒரே பரம்பொருளின் பெருமை கூறும் இலக்கியமாகவும் இலக்கணமாகவும் அமையும்.

சைவம் நிறைமொழி மாந்தர் (திருக்குறள்) கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் (சம்பந்தர்) எனப்படும். அனுபூதிமான்களின் உள்ளத்து உதித்த உண்மைப் பொருள்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு

இவ்வகையால் நமது முன்னோர்கள் கண்டறிந்த உண்மை - சைவநெறி என்றும் சைவசித்தாந்தம் என்றும் வழங்கப்படுகிறது. இது ஒரு தூய்மையான வாழ்க்கை நெறியாக இருப்பதோடு தத்துவம் ஆகவும் வழிபாட்டு நெறியாகவும் விளங்குவதும் இதன் சிறப்புக்குச் சான்று தமிழரைப் பொறுத்தவரை சைவம் அன்புநெறியாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சட்டநெறியாகவும் விளங்குகிறது. இதற்கான விளக்கங்கள் சிறப்பாக திருக்குறள், திருமுறைகள் ஆகியநூல்களிலே சொல்லப் பெற்றுள்ளன. சைவநெறியைத் (தமிழ் வழக்கு) என்பர், சேக்கிழார் பெருமான்.

ஞாலம் ஒன்று; ஞானம் ஒன்று; வளி ஒன்று; வெளி ஒன்று; ஒளி ஒன்று; ஒலியும் ஒன்று; உண்மை ஒன்று; எண்ணும் ஒன்று; மண்ணும் ஒன்று; அங்கனமே வாழ்வாங்கு வாழ்வதற்காக; மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்காக நாம் போற்றி வழிபடும் கடவுளும் ஒன்று இந்த உண்மையை உறுதியாகவும் முடிந்த முடிவாகவும் சைவசித்தாந்தம் எமக்கு உணர்த்தி நிற்கும்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது திருமந்திரம். மறு சமயம் மாழப் பேதகம் செய்வாய் போற்றி; ஈனர்கட்கு எளியேன் அலேன் திருவாலவாய் அரன் நிற்கவே, மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்து எம்பெம்மாற்கு அற்றிலாதவரைக் கண்டால் ஆம்ம! நாம் அஞ்சுமாறே (தி-வா) இன்னோரன்ன உண்மையை உணர்ந்தவர் எவரோ அவரே உண்மைச்சமயி; சைவசமயி; தமிழர் ஆவார்.

கடவுள் இரண்டு அல்லது பல என்னும் கருத்து சைவசமய ஆதார நூல்கள் எதிலும் இடம்பெறவில்லை. மூவர்தேவாரங்களில் சிவன் உமை என இருவர் இடம்பெறுவதாயினும் வழிபாட்டிற்கு உரியவர் ஒருவரே உலகநடை முறைக்கு ஓர் வழிகாட்டியாகவே அங்கு ஆண் பெண் மக்கள் என அருளப் பெற்றுள்ளது. உதாரணமாக வேயுறுதோளி பங்கன், நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன் இவற்றில் வழிபாட்டிற்கு உரியவர் தோளிபங்கன், பெற்றவள் பங்கினன் என்று வருவதை பார்க்க. மேலும் கடவுள் பன்மையில் எங்கேனும் விழிக்கப்படவில்லை. அப்பன் நீ, அம்மை நீ, தாயும் நீயே, தந்தை நீயே என்பதால் தாய் தந்தை இருவரும் ஒருவரே என்பது புலப்படும்.

# வேற்றுமையில் ஒற்றுமை

சைவசித்தாந்த கடவுள்கொள்கை அங்ஙனம் இருக்க உலகில் வேறு வேறு சமயங்கள், தெய்வங்கள் வேறு வேறு சடங்குகள், வழிபாட்டு முறைகள் பெருவழக்காய் இருப்பதைக் காண்கிறோம். அவை புவியியல், வரலாற்று ரீதியானவை. உண்மைக்குப் புறம்பானவை;

**நிலத்தியல்பால் நீர் திருந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்பது ஆகும். அறிவு**

என்பது குறள். அவ்அப்போதைய சமூகத்தேவைகள், சுயநல அடிப்படையில் அஞ்ஞானிகளால் ஆக்கப் பெற்றவை. அதனால் அவற்றைப் புறச் சமயம் புறப்புறச் சமயம் எனச்சைவம் ஒதுக்கும்.

உண்மைச் சமயமானது இறை, உயிர், தளை ஆகிய முப்பொருளையும் ஊடுருவி நின்று என்றும் மாறாத தத்துவமாய் விளங்க வேண்டும். இத்தன்மை சைவம் தவிர்ந்த ஏனைய சமயங்களில் காணப்படுவதில்லை என்பதை சமய ஒப்பீட்டு மாணவர் அறிவர் அறம்; பொருள்; இன்பம்; வீடு ஆகிய நான்கு புருடார்த்தங்கள், பிறப்பு, இருப்பு, இறப்பு, மறுபிறப்பு, முத்தி ஆகிய உயிரின் நிலைகள், வாலிபம், இல்லறம், இல்லறத்தில் துறவறம், துறவறம் ஆகியபருவங்கள் ஒருவகை.

01. சிவசிவ என்கிலர் தீவினையாளர் - இவர் பாவிகள்- தீவினையாளர் - மாக்கள்
02. சிவசிவ என்றிடத் தீவினை மாழும் - இவர் பண்புள்ள மனிதர் - மனிதம்
03. தேவரும் ஆவர் - சீவன் முத்தர் - மாமனிதர்
04. சிவகதிதானே - முத்தி நிலை - அடைந்தவர்

இன்னோரன்ன மனிதப்பகுப்பு ஆய்வு சைவசித்தாத்தம் ஒன்றிலே மட்டும் காணப்படுகிறது. இதனால் தான் வைவநெறி உலகிலேயே அப்பழுப்பற்ற உறுதிப்பொருளாக உயர்ந்து நிற்கிறது.

# பூசை வழிபாட்டு மொழி

திருமுறைகள் மெஞ்ஞானிகளை அதிட்டித்து நின்று சிவபெருமானால் அருளப்பெற்றவை. இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு அளிப்பதற்கான மகாமந்திரங்கள் அவற்றை முறைப்படி ஓதி வழிபடுவார்க்கு எல்லா நன்மையும் உண்டாகும் இதற்கான உறுதி உரை சம்பந்தர், சுந்தரர் பாடிய திருக்கடைக் காப்புச் செய்யுளில் அருளப் பெற்றுள்ளது.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே என்பது திருமந்திரம் சொற்றமிழ் பாடு என்பது சிவன் தன் திருவாய்மொழி, தந்தை வடமொழி பூசகராகவும் காயத்திரி மந்திரப்பிரியராகவும் இருக்க தன்னைத்தமிழ் ஞானசம்பந்தன் எனப்பாடி

நம் மதத்தோடு மொழியையும் வாழவைத்தவர் திருஞான சம்பந்தர் எமது உயிர், உடல், உடை முறையே சிவன், தமிழ், பண்பாட்டுக்குநேர் சிவனை மறந்தால் தமிழ், தமிழர் அழிவர், தமிழ் அழிந்தால் சைவம் அழியும் தமிழ் சைவம் இரு கண்கள் போன்றவை ஆகையால் எமது வழிபாடுகள் அனைத்தும் தமிழாக வேண்டும். அப்போதுதான் தமிழர் வாழ்வில் நிம்மதி வரும்.

## நூல் அறிமுகம்

திருமுறைகளை ஓதுகின்றவர் அவற்றின் பொருள் உணர்ந்து சந்தர்ப்பம் தெரிந்து ஓதவேண்டும். அவை ஏன் எவரால் எச்சந்தர்ப்பத்திலே அருளிச் செய்யபபெற்றவை என்னும் விபரங்களைக் கற்போரும் கேட்போரும் அறியத்தக்க தாய் அமைதல் சிறப்பு அத்தோடு அவற்றை ஓதி வழிபாடு செய்வதால் நாம் பெறக்கூடி பயன்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும் இந்த வகையிலே பகுப்பாய்வு செய்யப்பெற்று தொகுக்கப்பெற்றதே.

**வாழ்வாங்கு வாழ்வியல் தேவாரத்திரட்டு** இவ் விடயத்தில் கவனிக்க வேண்டியது யாதெனில் நாயன்மார்கள் பஞ்சபுராணம் ஓதவில்லை அவர்கள் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஒரு பதிகம் பாடினார்கள் நினைத்த காரியம் கைகூடியது பஞ்சபுராணம் ஓத வேண்டும் என்ற நியதி இல்லை தேவாரப் பதிகம் ஒன்றை முற்றாக ஓதினாலே போது, கற்றோரும் மற்றோரும் தேவாரங்களைப் பாராயணம் செய்து கடைத்தேற வேண்டும் என்னும் விருப்பால் பாடல்களை இயன்றவரை பிரித்து எளிதாக்கியுள்ளேன்.

## நன்றியியல்

பார்வை குறைந்து, கைநொந்த நிலையிலும் சைவத்தினபால் கொண்ட ஆர்வத்தினால் பல மாதகாலம் முயன்று இந்நூலைத் தயாரித்தேன்.
இந்நிலையில் இதனை அச்சிடுவதற்கு முறபணம் வழங்கிய
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும்,
2அச்சுப் பிழைகள் திருத்தியும்
வேறு வகையாக ஆலோசனை வழங்கிய மயிலங்கூடலூர் p.நடராசன்
திரு நி.சரவணபவன் ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி.
3 இந்நூலை அச்சு வாகனம் ஏற்ற முன்வந்த நல்லூர் திருவள்ளுவர் அச்சக முதல்வருக்கும் மனம் இழையாது அச்சு வேலைகளைக் செய்து உதவிய அச்சக ஊழியருக்கும் நன்றி.

இறுதியாக என்னுடனிருந்து எனது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த சிவபெருமானுக்கு நன்றியும் வணக்கமும்.

19-03-2006 **கணபதி மகேசன்**

# உள்ளடக்கம்


| | பக்கம் இல |
|---|---|
| **1. நமச்சிவாயப் பதிகங்கள்** | |
| அ. துஞ்சலும் துஞ் | 1 |
| ஆ. காதலாகிக் கசிந்து | 2 |
| இ. சொற்றுணை வேதியன் | 3 |
| ஈ. மற்றுப் பெற்றன | 4 |
| **2. கடவுள்கொள்கை: வழிபாடு** | |
| அ. சிவன் இயல்பு | 5 |
| ஆ. அகவழிபாடு | 6 |
| இ. தவமிருத்தல் | 6 |
| ஈ. புறவணக்கம் | 6 |
| உ. திருவைந்தெழுத்து | 7 |
| ஊ. அகப்புற வழிபாடு | 8 |
| **3. திருமணம், இல்லறம், குழந்தைப்பேறு** | |
| அ. தோடுடைய செவியன் | 10 |
| ஆ. மண்ணில் நல்ல வண்ணம் | 11 |
| இ. கல்லூர் பெருமணம் | 12 |
| ஈ. பித்தாப் பிறைசூடி | 13 |
| உ. சடையாய் எனுமால் | 14 |
| ஊ. கண்காட்டு முதலானும் | 16 |
| **4. போகச் சிறப்பு** | |
| அ. இடரினும் தளரினும் | 17 |
| ஆ. வாசுதீரவே | 18 |
| இ. தம்மையே புகழ்ந்து | 19 |
| ஈ. வைத்தனன் தனக்கே | 20 |
| உ. பொன்செய்தமேனி | 22 |
| ஊ. நஞ்சியிடை இன்று | 23 |
| எ. நெய்யும் பாலும் | 24 |
| ஏ. பத்தூர் புக்கு | 25 |
| **5. காரியம் கைகூட** | |
| அ. மறையுடையாய் | 27 |
| ஆ. கொடுகு வென்சிலை | 28 |
| இ. தலையெலாம் | 29 |
| ஈ. பண்ணினேர் | 30 |
| உ. சதுரம் மறைதான் | 32 |
| ஊ. சுண்ணவெண் | 33 |
| எ. நாமார்க்கும் | 34 |
| ஏ. திருவும் மெய் | 36 |
| **6. நீரில் ஆழாதிருக்க** | |
| அ. வாழ்க அந்தணர் | 37 |
| ஆ. வன்னியும் மத்தமும் | 38 |
| இ. கொட்டமேகமழும் | 40 |
| ஈ. சொற்றுணை வேதியன் | 3 |
| **7. வழிப் பயணம்** | |
| அ. எந்தை ஈசன் | 41 |
| ஆ. பாடன் மறை | 42 |
| இ. வடிவுடை மழு | 43 |
| ஈ. பரவும் பரிசென் | 44 |
| உ. இத்தனையா | 45 |
| **8. இயற்கை வளம்** | |
| அ. பூத்தேர்ந் தாயென | 47 |
| ஆ. நீளநினைந்தடியேன் | 48 |
| இ. புலனைந்தும் | 49 |
| ஈ. காரைகள் கூவை | 50 |
| உ. முதுவாயோரி | 51 |
| **9. நோய்பிணி நீங்க** | |
| அ. மந்திரமாவது | 88 |
| ஆ. துணிவளர் | 52 |
| இ. கூற்றாயினவாறு | 54 |
| ஈ. மன்னுமாமேகங்கள் | 55 |
| உ. விங்குவிளை | 56 |
| **10. கண்ணொளி பெற** | |
| அ. அழுக்குமெய் | 57 |
| ஆ. பிழையுளன | 58 |
| இ. மீள அடிமை | 59 |
| ஈ. ஆலந்தானுகந்து | 61 |
| **11. மரித்தவர் உயிர்த்தல்** | |
| அ. சடையாய் | 14 |
| ஆ. மட்டிட்டபுன்னை | 62 |
| இ. ஒன்றுகொலா | 63 |
| ஈ. எற்றான் மறைக்கேன் | 64 |
| **12. கடும் குளிர், வெப்பம்** | |
| அ. வேயுறு தோளி | 65 |
| ஆ. மாசில் வீணையும் | 67 |
| இ. அவ்வினைக்கு இவ்வினை | 68 |
| உ. இடர்கெடுமாறு | 69 |
| ஊ. போகமார்த்த | 70 |
| எ. தளிரிள வளர்ஒளி | 71 |
| **13. உலகப்பொய்மை** | |
| அ. இன்றுநன்று | 72 |
| ஆ. ஒடுங்கும் பிணி | 73 |
| இ. பொய்மாயப்பெருங் | 74 |
| ஈ. வரைகிலேன் | 76 |
| **14. அடியார்க்கு அடியான் ஆதல்** | |
| அ. தில்லைவாழ் அந்தணர் | 77 |
| ஆ. முத்தா முத்தி | 78 |
| **15. திருவடிப் பேறு** | |
| அ. கோவாய் முடுகி | 80 |
| ஆ. நினைந்துருகி | 81 |
| இ. பொன்னார் திருவடி | 82 |
| ஈ. தம்மானை அறியாத | 83 |
| **16. முக்தி நிலை** | |
| அ. எண்ணுகேன் | 85 |
| ஆ. காதலாகி | 02 |
| இ. தலைக்குத் தலை | 86 |
| ஈ. தான் எனைமுன் | 87 |
| **17. பரசமைய இருள் நீங்க** | |
| அ. மந்திரமாவது | 88 |
| ஆ. செய்யனே | 89 |
| இ. மானினேர் விழி | 90 |
| ஈ. வீடலாலவாயிலாய் | 92 |
| **18. தனிப்பாடல்** | 93 |

# அதிகாரம் 1

## உயிருக்கு உறுதி அளிக்கும் திருவைந்தெழுத்துப் பதிகங்கள்

01. **சம்பந்தர்** **பண்: காந்தார பஞ்சமம்**

உபநயனம்

துஞ்சலும் துஞ் சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத் தனஅஞ்செ ழுத்தும்மே 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றுஅவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத் தும்மே 2

ஊனின் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதுறந்து ஏத்து வார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத் தும்மே 3

நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத் தும்மே 4

கொங்கலர் வன்மதன் வாளி ஐந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத் தும்மே 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை யடர்ந்து எய்தும் போழ்தினும்
அம்மையி னும்துணை அஞ்செழுத் தும்மே 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத் தும்மே 7

வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத் தும்மே 8

கார்வணன் நான்முகன் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்

பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செழுத் தும்மே 9

புத்தர் சமணகழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணிவார் வினைப்பகைக்கு
அத்திர மாவன அஞ்செழுத் தும்மே 10

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே. 11

## 02. நமச்சிவாயத் திருப்பதிகம் சம்பந்தன் முத்திநிலை பண்: கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே 1

நம்பு வாரவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே 2

நெக்கு ளார்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்குஇனி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே 4

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே 6

நரகம் ஏழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்

விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே 8

போதன போதன் கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி தேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாம நமச்சி வாயவே 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே 10

நந்தி நாம நமச்சி வாயஎனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந்து ஏத்தவல் லர்எலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே 11

திருச்சிற்றம்பலம்

### 03. நமச்சிவாயத் திருப்பதிகம் திருநாவுக்கரசர் பண்: காந்தார - பஞ்சமம்

**கல்லிற்கட்டிக் கடலில் இட்டமை**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே 1

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்அழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்று அறுப்பது நமச்சி வாயவே 3

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளி நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே 4

வெந்தநீறு அருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்

திங்களுக்கு அருங்கலம் திகழும் நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சி வாயவே 5

சலமிலன் சங்கரன் சாந்த வர்க்குஅலால்
நலமிலன் நாடொறும் நல்கு வான்நலன்
குலமில ராகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே 7

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசரண் ஆதல் திண்ணமே
அந்நெறி யேசென்று அடைந்த வாக்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே 9

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்தும்
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே 10

## 04. திருப்பாண்டிக்கொடுமுடி சுந்தரமூர்த்தி பண்: பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்தும் சீர்க்கறை ஊரிற்பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே 01

இட்ட னும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்டநாள் மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லாற்கரு தேன்கிளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட்வாஉனை நான்மறக் கினும் சொல்லும்நா நமச்சி வாயவே 02

ஓவுநாள்உணர் வழியுநாள்உயிர் போகும் நாள்உயர் பாடைமேல்
காவும் நாள்இவை என்ற லாற்கரு தேன்கிளர்புனற் காவிரி
பாவு தண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டடிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்மறக் கினும் சொல்லும்நா நமச்சி வாயவே 03

எல்லை யில் புகழ் எம்பி ரான்எந்தை தம்பிரான் என்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை ஊரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவாஉனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே

அஞ்சி னார்க்கு அரணாதி யென்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்சல் என்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னாயக்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே 05

ஏடுவான் இளந்திங்கள் சூடினை என்பின் கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்அரைக் கசைத்த அழகனே அந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடிச்
சேடனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே 06

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில் பெற நின்ற காவிரிக் கோட்டிடை
குரும்பைமென்முலைக் கோதை மார்குடைந் தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனே உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 07

செம்பொனேர் சடையாய் திரிபுரம் தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங் குழலாளைப் பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடை
கொம்பின்மேற் குயில்கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே 08

சாரணன் தந்தை எம்பிரான் எந்தை தம்பிரான் என்பொன் மாமணியென்று
பேரெணாயிரம் கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழும் கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
காரணா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே 09

கோணிய பிறை சூடியைக் கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியை
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனைப் படப்பாம்பரை
நாணனைத் தொண்டனூரன் சொல்லிவை சொல்லுவார்க்கு இல்லைத்துன்பமே 10

**திருச்சிற்றம்பலம்**

**நமச்சிவாயப்பதிகம் முற்றிற்று**

# அதிகாரம் 02

## திருமுறைகாட்டும் தமிழரின் கடவுள் கொள்கையும், சிவபூசை வழிபாட்டு முறையும்

### 1. சிவன்தன் இயல்பு

ஈறாய் முதலொன்றாய்இரு பெணஆண குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத்திசைதானாய்
வேறாய் உடனானான் இடம் வீழிம்மிழலையே 01

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 02

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே 03

புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று
துள்ளுவர், சூறைகொள்வர், தூநெறிவிளைய வொட்டார்
முள்ளுடை அவர்கள்தம்மை முக்கணான் பாதநீழல்
உள்ளிடை மறைந்து நின்றங்கு உணர்வினால் எய்யலாமே 04

**2. அகவழிபாடு**

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே 05

உடம்பெனு மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் ஏரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைகதாதை கழலடி காணலாமே 06

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீா அமையஆட்டிப்
பூசனை ஈசனாக்குப் போற்றவிக் காட்டினோமே 07

**3 தவமிருத்தல்**

ஊனின் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத தும்மே 08

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலாற்கடிந்தான் அடியவர்க்காய்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்றுவந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே 09

நன்னெஞ்சே உனைஇரந்தேன் நம்பெருமான் நிருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத்து ஆரமுதை எப்போதும்
பன்னுஞ்சீா வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே 10

**4. புறவணக்கம்**

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யான்உளன் நாமுளோம்
எற்றுக்கோ நமுனான் முனிவுண்பதே 11

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே 12

பூக்கைக கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே 13

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுதுபோக்கிப் புறக்கணிப பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்ப்பா ஈசனே 14

உரைசெய் நூல்வழி ஒண்மலர் எட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை திருமால்
வரைகள் வந்திழியுங் கெடிலக்கரை
விரைகள் சூழ்ந் தழகாய வீரட்டரே 15

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்தாட்ட
படம் கொண்டதோர் பாம்பு அரைஆர்த்த பரமன்
இடங்கொண் டிருந்தான்தன் இடைமருது ஈதோ 16

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவு கின்றாரே.1 7

**5 திருவைந்தெழுத்து**

ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி ஐந்தெழுத்தும் உணர்வார் கட்கு
பேதம்இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற்பெறரே 18

படைக்கலமாக உன்நாமதது எழுத்து ஐந்தும் என்நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்
துடைகினும் போகேன் தூநீறு அணிந்து உன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலதது அரனே 19

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே 20

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமைப்ப புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே 21

திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பார் ஆகில்
தீவண்ணா் திறம்ஒருக்காற் பேசா்ஆகில்
ஒருநாளுந் தீருக்கோயில் சூழா்ஆகில்
உண்பதன்முன் மலா்பறிதது இட்டு உண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாா்ஆகில்
அளியற்றாா் பிறந்தவாறு ஏதோஎன்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துச் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே. 22

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடி பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினாடு பலதளிகள் இல்லாஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லாஊரும்
அருப்போடு மலா்பறித்து இட்டு உண்ணாஊருமா
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே 23

## 06. அகப்புற வழிபாடு

### திருவங்கமாலை

இ.்.து அகப்புற வழிபாட்டுக்குரிய அருமையான மந்திரம் கனமேந்திரிய ஞானேந்திரியங்களால பூசித்து இறைவனை அடைதல், பூசை வழிபாட்டின போ்து சிறுவா் முதியவா் யாவராலும் ஓதப்பட வேண்டியது.

தலையே நீ வணங் காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனை
தலையே நீ வணங்காய் 01

கண்காள் காண்மின் களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் தனை
எண்தோள் வீசிநின்று ஆடும் பிரான்தன்னை
கண்காள் காண்மின் களோ 02

செவிகாள் கேண்மின் களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின் களோ் 03

மூக்கே நீ முர லாய் - முது
காடுறை முக் கணனை
வாக்கே நோகிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய் 04

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை உரி போர்த்து
பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய் 05

நெஞ்சே நீநினை யாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய் 06

கைகாள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய் பாம்பு அரை ஆர்த்த பரமனை
கைகாள் கூப்பித் தொழீா 07

ஆக்கையால் பயன் என்- அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால்அட்டிப் போற்றி என்னாத
ஆக்கையால் பயன் என் 08

கால்களால் பயன் என் - கறைக்
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக
கால்களால் பயன் என் 09

உற்றார் ஆர்உளரோ - உயிர்
கொண்டு போகும் பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ 10

இறுமாந்து இருப்பன் கொல்லோ - ஈசன்
பல்கணத்து எண்ணப் பட்டு
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்சென்று
இறுவமாந்து இருப்பன் கொலோ 11

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளளே
தேடிக் கண்டு கொணடேன்1 2

**திருச்சிற்றம்பலம்**

**வழிபாட்டு முறை முற்றிற்று**

# அதிகாரம் - 3

**திருமணம் நிறைவுவேற, இல்லறம் சிறக்க, மழலைச் செல்வம் கிடைக்க**

**1 திருப்பிரமபுரம் - நட்டபாடை**

சிவபெருமான் உமையம்மையோடும் காட்சி கொடுத்துதிருஞான சம்மந்த நாயனாருக்குக் ஞானப்பாலூட்டியது.

சிவனடியே சிந்திக்கும திருபெருகு சிவஞானம்; உவமையிலாக் கலைஞானம் உணாவரிய மஞ்ஞானம் வாய்க்கப் பெற்ற குழந்தை கிடைக்க; நோயினால் காரணமின்றி அழுகின்ற குழந்தையைச் சுகப்படுத்த.....

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் அன்றே 01

முற்றலாமை இளநாகமோடு ஏன முளைக் கொம்பு அவை பூண்டு
வற்றலோடு கலனாப்பலிதேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுது ஏத்த
பெற்றம் ஊர்ந்த பிரமாபுர மேவிய பெம்மான இவன்அன்றே 02

நீர்பரந்த நிமிர்புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளை சோர என்னுள்ளம் கவர் கள்வன்
ஊர்பரந்த உலகின் முதலாகிய ஓர் ஊர் இதுவென்னப்
பேர்பரந்த பிரமாபுரமேவிய பெம்மான் இவன் அன்றே 03

விண்மகிழ்ந்த மதில் எய்ததுமன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்து பலிதேரிய வந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மண்மகிழ்ந்த அரவம் மலா்க் கொன்றை மலிந்த வரைமாா்பில்
பெண்மகிழ்ந்த பிரமாபுர மேவிய மெம்மான் இவன் அன்றே 04

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடையூரும் இவனென்ன
அருமையாக வுரைசெய்ய அமா்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கருமைபெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இதுவென்னப்
பெருமைபெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 05

மறைகலந்த ஒலி பாடலோடு ஆடலராகி மழுவேந்தி
இறைகலந்த இனவெள்வளைசோர என் உள்ளங் கவர் கள்வன்
கறைகலந்த கடியார் பொழில் நீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரமேவிய பெம்மான இவன் அன்றே 06

சடைமுயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர் வெய்த
உடை முயங்கு அரவோடு உழிதந்து எனதுள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர் கானலம் பொன்னஞ் சிறகுஅன்னம்
பெடைமுயங்கு பிரமாபுரமேவிய பெம்மான் இவன் அன்றே 07

வியர் இலங்குவரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயர்இலங்கை அரையன் வலிசெற்று எனது உள்ளம் கவர்கள்வன்
துயர்இலங்கும் உலகிற் பலவூழிகள்தோன்றும் பொழுதெல்லாம்
பெயர்இலங்கும் பிரமா புரமேவிய பெம்மான் இவன் அன்றே. 08

தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டா மரையானும்
நீணுதல் செய்தொழியந் நிமிர்ந்தான் எனதுள்ளம் கவர் கள்வன்
வாணுதல் செய்மகளிர் முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல் செய் பிரமாபுரமேவிய பெம்மான் இவன அன்றே 09

புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூறந் நெறிநில்லா
ஒத்தசொல்ல உலகம்பலிதேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மத்தயானை மறுக உரிபோர்த்து ஓர் மாயம் இதுவென்ன
பித்தர்போலும் பிரமாபுரமேவிய பெம்மான் இவன் அன்றே 10

அருநெறிய மறை வல்ல முனியகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மான் இவன்தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞான சம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே 11

**2.திருப்பிரமபுரம் - கொல்லி - சம்பந்தர்**

**உணவு, உடை, குடும்ப அமைதி பெறலாம் காதல் திருமணம் கைகூடும்**

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல் அஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே 01

போதையார்பொற் கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்
காதையார் குழலினன் கழுமலவளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகையிருந்ததே 02

தொண்டணை செய்தொழில் துயரறுத்து உய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடி
கண்டுணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்டுணை ஆகவோர் பெருந்தகை இருந்ததே 03

அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல் வயல் குதிகொளும் கழுமல வளநகர்
பெயர்பல துதிசெய பெருந்தகை இருந்ததே 04

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்
பெடைநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே 05

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடை பேரல்குல் திருந்திழை அவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே 06

குறைவளைவது மொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை அவளொடும்

கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே 07

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்கு நீரவளொடும் பெருந்தகை இருந்ததே 08

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்
அடியொடு முடியறியா அழல்உருவினன்
கடிகமழ் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிடிநடையா ளொடும் பெருந்தகை இருந்ததே 09

தாருறு தட்டுடைச் சமணர்சாக்கியர் கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை அடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமலவள நகர்ப்
பேர்அரவல்குழாள் ளொடும் பெருந்தகை யிருந்ததே 10

கருந்தடந்தே தன்மல் குகழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்றணை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்பு வாரவர்கள்போய் விண்ணுல காள்வரே 11

## 3. திருநல்லூரல் பெருமணம், அந்தாளிக்குறிஞ்சி சம்பந்தர் திருமணத்தின் போது பாடப்பெற்றது

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம
பல்லூர்ப் பெருமணம் பாடுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே 01

தருமண லோதஞ்சேர் தண்கடல நித்திலம்
பருமணலாக் கொண்டு பாவை நல்லூர்கள்
வருமணங்கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத்தான் பெண்ணோர் பாகங்கொண்டானே 02

அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர் பெருமணம் மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வாரே 03

வல்லியந் தோலுடை ஆர்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத்து உரிவிரி கோவணம்
நல்வியலார் தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே 04

ஏறுஉகந்தீர் இடுகாட்டெரி யாடி வெண்
நீறுகந்தீர் நிரையார் விரிதேன் கொன்றை
நாறுகந்தீர் திருநல்லூர்ப் பெருமணம்
ஏறுகந்தீர் உமை கூறு உகந்தீரே 05

சிட்டப்பட்டார்க்கு எளியான் செங்கண் வேட்டுவப்
பட்டங்கட்டும் சென்னியான் பதியாவது
நட்டக் கொட் ஆட்டறா நல்லூர்ப் பெருமணத்து
இட்டப்பட்டால் ஒத்திரால் எம்பிரானிரே 06

மேகத்த கண்டன் எண்தோளன் வெண்ணறீரன் உமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்த நல்லூர்ப் பெருமணத்தான் நல்ல
போகத்தன் போகத்தையேபுரிந்தானே 07

தக்கிருந்தீர் அன்று தாளால் அரக்கனை
உக்கிருந்தொல்க உயர்வரைக் கீழிட்டு
நக்கிருந்தீரின்று நல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீர் எமைப் போக் கருளீரே 08

ஏலுந் தண்தாமரை யானும் இயல்புடை
மாலுந்தம் மாண்பு அறிகின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடையார்க்கே 09

ஆதர்அமணொடு சாக்கியர்தாம் சொல்லும்
பேதைமைகேட்டுப் பிணக்குறுவீர் வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதனதாள் தொழ வீடெளி தாமே 10

நறும்பொழில் காழியுள் ஞான சம்பந்தன்
பெரும்பத நல்லூர்ப் பெருமண தானை
உறும்பொரு ளாற்சொன்ன ஒண்தமிழ் வல்லார்
அறும்பழி பாவம் அவலம் இலரே 11

## 4. திருவெண்ணெய் நல்லூர் - இந்தளம்
## திருமணத்தின்போது சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட் கொண்டமை

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தால்மற வாதேநினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 01

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாஅருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 02

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 03

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தி
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ

செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 04

பாதம்பணி வார்கள்பெறும் பண்டம்அது பணியாய்
ஆதன்பொருள் ஆனேன்அறி வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
ஆதிஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 05

தண்ணார்மதி சூடிதழல் போலும்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி உண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 06

ஊனாய்உயிர் ஆனாய்உடல் ஆனாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 07

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 08

மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவார்அவர் துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
அழகாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே 09

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்எனல் ஆமே 10

## 5. திருமருகல் - இந்தளம்

**பாப்புதீண்டி மாண்ட வணிகனை திருஞானசம்மந்தர் உயிர்ப்பித்து அவருடைய காதலிக்கு மணம் செய்து வைத்தமை.**

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே 01

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்உள் மெலிவே 02

அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய

மறையார் மருகன் மகிழ்வாள் இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே 03

ஒலிநீர் சடையில் கரந்தாய் உலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வாள் இவளை
மெலிநீர் மையள் ஆகவும் வேண்டினையே 04

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீல கண்டம் உடையாய் மருகல்
கணிநீல வண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கன் அயர் வாக்கினையே 05

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறைஒன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே 06

வழுவாள் பெருமான் கழல்வாழக வெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே 07

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்க விரல் ஊன்றலுந் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலராக் கினையே 08

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாததோர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே 09

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறிஇல்லன செய்தனர் நின்று உழல்வார்
மறியேந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே 10

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞான முணர்ந்து அடி உள்குதலால்
இயன்ஞான சம்பந்தன் பாடல் வால்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே 11

6. திருவெண்காடு - சீகாமரம் - சம்பந்தர்

**அச்சுதகளப்பருக்கு மகப்பேறு அளித்தது. இரண்டு வயதிலே மெய்யுணர்வு பெற்ற சுவேதனப் பெருமாள் - மெய்கண்டதேவர் தோன்றினார். பட்டிமன்றம், கருத்தரங்கில் வெற்றி. எழுத்தாற்றல் தத்துவஞானத் தெளிவு பெறலாம்**

கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே 01

பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்ட ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே 02

மண்ணொடுநீர் அலைகாலோடு ஆகாயம் மதிஇரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்டிசையும்
பெண்ணினொடு ஆண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே 03

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண் புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர் நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக் கெண்டை தாமரையின் பூமறைய
கடல் விண்ட கதிர்முத்தம் நகை காட்டும் காட்சியதே 04

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவனதன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிற்றான் அடியார் என்றடர அஞ்சுவரே 05

தண்மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதல்உமையோர் கூறுகந்தான் உறை கோயில்
பண்மொழியால் அவன் நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும் பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே 06

சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்தஇராவதம் பணிய
மிக்க அதனுக் அருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண் உடை இறையவனே 07

பண்மொயத்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்தன் உரநெரித்தன்று அருள் செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்சை நடமாட கடல் முழங்க
விண்மொய்த்த பொழில் வரிவண்டு இசைமுரலும் வெண்காடே 08

கள்ளார் செங்கமலத்தான் கடல்கிடந்தான் என்று இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர்வர்ட்யான்
வெள்ளானை தவஞ்செய்யு மேதகுவெண்கடான் என்று
உள்ளாடி உருகாதார் உணர்வுடைமை உணரோமே

போதியர்கள் பிண்டியர்கள் விண்டுமொழி பொருளெனனும்
பேதையர்கள் அவர் பிறிமின் அறிவுடையீர் இதுகேண்மீன்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திரு வெண்காட்டான் என்று
ஓதியவர் யாதுமொரு தீதிலர் என்று உணருமினே 10

தண்பொழில்சூழ் சண்பயர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டை
பண்பொலிப் செந்தமிழ்மாலை பாடிய பத்திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்து அவர் போய் வான்பொலியப் புகுவாரே 11

## அதிகாரம் 4

**சகல சுகபோகங்களும் பெற்று, பசியும் பிணியும் இன்றிச் சிறப்புடன் வாழ இயற்கை வளம் பெருக.**

**1. திருவாவடுதுறை - பஞ்சமம்**
**சம்பந்தர் பொற்கிளி பெற்றது.**
**நல்லகாரியம் செய்ய நிதி கிடைக்கும்.**

இடறினுந் தளறினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவது ஒன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதுஇன்னருள் ஆவடுதுறை அரனே 01

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிழந் தடம்புனல் தயங்கு சென்னி
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமைஆளுமாறு ................................ 02

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதுஅணிந்த
கனலெரி அனல்புல்கு கையவனே
இதுவோ எமைஆளுமாறு ................................ 03

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால் அரற்றாது என்நா
கை மல்கு வரிசிலைக் கணைஒன்றினால்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோ எமைஆளுமாறு ........................................ 04

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலாற் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர்க் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமைஆளுமாறு ........................................... 05

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே
இதுவோ எமைஆளுமாறு ............................................ 06

வெப்பொடு விரவி ஓர் வினைவரினும்
அப்பா உன்அடியலால் அரற்றாதுஎன்நா
ஒப்புடை யொருவனை உருவழிய
அப்படி அழல்எழ விழித்தவனே
இதுவோ எமைஆளுமாறு ........................................ 07

பேரிடர் பெருகி ஓர் பிணிவருனும்
சீருடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்.
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமையாளுமாறு .......................................... 08

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடி அலால் உரையாதென்நா
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோ எமைஆளுமாறு .......................................... 09

பித்தொடு மயங்கி ஓர் பிணிவரினும்
அத்தா உன் அடியலால் அரற்றாது என்நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோ எமைஆளுமாறு .......................................... 10

அலை புனல் ஆவடுதுறை அமர்ந்த
இலை நுனை வேற்படை எம்மிறையை
நலமிகு ஞான சம்பந்தன் சொன்ன
விலையுடைஅருந்தமிழ் மாலை வல்லார்.
வினைஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலைஇலரே 11

**2. திருவீழிமிழலை - குறிஞ்சி**
**சம்பந்தர் வாசிநீங்கிய காசுபெற்றமை**
**மூத்தசகோதரர் நலம்பெற செய்தெபழிலில் இலாபம் வழக்கு வெற்றி**

1. வாசுதீரவே காசு நல்குவீர்
மாசின்மிழலையீர் ஏசவில்லையே

2. இறைவ ராயினீர்
மறைகொண்மிழலையீர்
கறைகொள் காசினை
முறைமை நல்குமே

3. செய்ய மேனியீர்
மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர்
உய்ய நல்குமே

4. நீறு பூசினீர்
ஏற தேறினீர்
கூறு மிழலையீர்
பேறு மருளுமே

5. காமன் வேவவோர்
தூமக் கண்ணிநீர்
நாமமிழலையீர்
சேம நல்குமே

6. பிணிகொள் சடையினீர்
மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர்
பணிகொண் டருளுமே

7. மங்கை பங்கினீர்
துங்க மிழலையீர்
கங்கை முடியினீர்
சங்கை தவிர்மினே

8. அரக்கன் நெரிதர
இரக்கம் எய்தினீர்
பரக்கு மிழலையீர்
கரக்கை தவிர்மினே

9. அயனும் மாலுமாய்
முயலும் முடியினீர்
இயலு மிழலையீர்
பயனும் அருளுமே

10. பறிகொள் தலையினார்
அறிவது அறிகிலார்
வெறிகொள் மிழலையீர்
பிறிவது அரியதே

11. காழி மாநகர்
வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல்
தாழும் மொழிகளே

**3. திருப்புகலூர் - கொல்லி**
**சுந்தரர், பரவையார் பொருட்டு பொன் வேண்ட செங்கட்டிகள் பொன்கட்டிகளாயின**
**கற்பவர் கேட்பவருக்கு உணவு, உடை முதலியன கிடைக்கும்**

தம்மையே புகழ்ந்து இச்சைபேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐம்புறவிலில்லையே 01

மிடுக்கிலாதானை வீமனேவிறல் விசயனே வில்லுக்கு இவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலர்வீகாள்
அடுக்குமேல் அமர் உலகம் ஆள்வதறக் யாதும் ஐயுறவில்லையே 02

காணியேற்பெரி துடையனேகற்று நல்லனேசுற்றம் நற்கிளை
பேணியே விருந்தோம்புமேஎன்று பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண் புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணியாய்அமர் உலகம் அள்வதற்கு கியாதுஐம்யுற வில்லையே 03

நரைகள்போந்து மெய்தளர்ந்து மூத்துஉடல் நடுங்கிநிற்கும் இக்கிழவனை
வரைகள்போல் திரள் தோளனேஎன்று வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புரைவெள்னேறுடைப் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலகீர்க்காள்
அரையனாய் அமருலகமாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே 04

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப் பாவியைவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவே என்று பாடினும் கொடுப்பாரிலை

பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சுபோவதற்கு கியாதும்ஐயுற வில்லையே

நலமிலாதானை நல்லனேயென்றும் நரைத்தமாந்தரை இளையனே
குலமிலாதானைக் குலவனே என்று கூறினும் கொடுப்பாரிலை
புலமெலாம் வெறிகமழும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமராதமர் உலகம் ஆள்வதற்கு யாதும்ஐயுற வில்லையே 06

நோயனைத் தடந்தோளனே என்று நொய்ய மாந்தரை விழுமிய
தாயன்றோ புலவோர்க்கெலாம் என்று சாற்றுனும் கொடுப்பாரிலை
போயுழன்று கண்குழியாதே எந்தைபுக லூரைப் பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப் போய் அண்டம் ஆள்வதற் கியாதுமையுற வில்லையே 07

எள்விழுந்திடம் பார்க்கும் ஆகிலும் ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ளலே எங்கள் மைந்தனே என்று வாழ்த்தினும் கொடுப்பாரிலை
புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்
அல்லற்பட்ட முந்தாது போவதற்கு யாதும் ஐயுறவில்லை 08

கற்றிலாதானைக் கற்றுநல்லனே காமதேவனை ஒக்குமே
முற்றிலாதானை முற்றனேஎன்று மொழியினும் கொடுப்பாரிலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டறாப்புக லூரைப் பாடுமின் புலவீர்கான்
அத்தனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும்ஐயுற வில்லையே 09

தையலாருக்கோர் காமனே என்றும் சாலநல்வழக் குடையனே
கையுலாவிய வேலனே என்று கழறினுங் கொடுப்பாரிலை
பொய்கை ஆவியின் மேதிபாய்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாய் அமருலகம் அள்வதற்கு யாதும்ஐயுறவில்லையே 10

செறுவினிற்செழுங் கமலம்ஓங்குதென் புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன் வனப்பகையப்பன் சடையன்தன்
சிறுவன்வன்றொண்டன் ஊரன்பாடிய பாடல்பத்திவை வல்லவர்
அறவனார்அடி சென்றுசேர்வதற்கு யாதும்ஐயுற வில்லையே 11

**4. திருப்பாச்சிலாச்சிராமம் - தக்கராகம்**

**இவர் அலாது இல்லையோ பிரானார் - சுந்தரர்**

வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும் நெஞ்சமும் வஞ்சம்ஒன்று இன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கடிமை உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம்பார்த்தோர் கோவணத்தோடு பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே ஒத்தோர் நச்சிலராகில் இவரலாது இல்லையோ பிரானார் 01

அன்னையே என்னேன் அத்தனே என்னேன் அடிகளே அமையுமென்றிருந்தேன்
என்னையும் ஒருவன் உளன்என்று கருதி இறைஇறை திருவருள் காட்டாய
அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சிலாச் சிராமத்துறை அடிகளே
பின்னையே அடியார்க்கு அருள் செய்வதாகில் இவரலாது
இல்லையோ பிரானார் 02

உற்றபோ தல்லால் உறுதியை உணரேன் உள்ளமே அமையும் என்றிருந்தேன்
செற்றவர் புரமூனறு எரிஎழச் செற்ற செஞ்சடை நஞ்சடை கண்டர்

அற்றவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிரமத் தடிகள்தாம் யாது சொன்னாலும்
பெற்றபோது உகந்து பெறாவிடில் இகழில் இவரலாது இல்லையோ பிரானார்

நாச்சிலபேசி நமர்பிறர்என்று நன்று தீதுஎன்கிலர் மற்றோர்
பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப் புள்ளினம் சிலம்புமாம் பொய்கை
பாச்சிலாச் சிராமத்து அடிகள் என்றுஇவர்தாம் பலரையும் ஆட்கொள்வர் பரிந்தோர்
பேச்சிலர் ஒன்றைத் தரவிலர் ஆகில் இவரலாது இல்லையோ பிரானார் 04

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத்து எயிலை வாட்டிய வகையின ரேனும்
புரிந்த இந்நாளே புகழ்தக்க அடிமை போகும்நாள் வீழும்நாளாகிப்
பரிந்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து அடிகள்தாம் யாது சொன்னாலும்
பிரிந்திறைப்போதில் பேர்வதே ஆகில் இவரலாது இல்லையோ பிரானார் 05

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன் தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன் ஆவதும் அறிவர் எம்அடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர் பாச்சிலாச்சிராமத்து எம்பரமர்
பிடித்த வெண்ணீறே பூசுவதானால் அவரலாது இல்லையோ பிரானார் 06

கையதுகபாலம் காடுறை வாழ்க்கை கட்டங்கம் எய்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல் வெண்திங்கள் சூடிய விகிர்தர்
பையரவல்குல் பாவையர்ஆடும் பாச்சிலாச்சிராமத்து எம்பரமர்
மெய்யரே ஒத்தோர் பொய் செய்வதாகில் இவரலாது இல்லையோ பிரானார் 07

நிணம்படும் உடலை நிலைமை என்றுஓரேன் நெஞ்சமே தஞ்சமென்று இருந்தேன்
கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும் கரத்தினாற் கைதொழுதெழுவேன்
பணம்படும் அரவம் பற்றிய கையர் பாச்சிலாச்சிராமத்து எம்பரமர்
பிணம்படு காட்டில் ஆடுவதாகில் இவரலாது இல்லையோ பிரானார் 08

குழைத்துவந்தோடிக் கூடுதி நெஞ்சே குற்றேவல் நாள்தோறும் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பிலரேனும் எம்பெருமான் என்று எப்போதும்
அழைத்தவர்க்கு அருள்செய் பாச்சிலாசசிராமத்து அடிகள்தாம் யாது சொன்னாலும்
பிழைத்தது பொறுத்து ஒனறீகிலராகில் இவரலாது இல்லையோ பிரானார் 09

துணிப்படும் உடையும் சுண்ணவெண் ணீறும் தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினாற் கூறி மனத்தினால் தொண்டனேன் நினைவேன்
பணிப்படும் அரவம் பற்றியகையர் பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
பிணிப்பட ஆண்டுபணிப்பில ராகில் இவரலாது இல்லையோ பிரானார் 10

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க்கு அடியனும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும் ஒண்மலர்ச்சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க்கு அருள்செயும் பாச்சிலாசசிராமத்து எம்அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில் இவரலாது இல்லையோ பிரானார் 11

ஏசினஅல்ல இகழ்ந்தனஅல்ல எம்பெருமான் என்றுஎப்போதும்
பாயின புகழான் பாச்சிலசிராமத்து அடிகளை அடிதொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினால் நினைவான் வளவயல் நாவல் ஆரூரன்
பேசின பேச்சைப் பொறுக்கிலராகில் இவரலாது இல்லையோ பிரானார் 12

**5. திருமுது குன்றம் - நட்டராகம்**

**திருமுதுகுன்றப் பெருமான் அளித்த பொன்னை சுந்தரர், மணிமுத்தாற்றிலே இட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தமை. இழந்த பொருளை மீளப் பெறலாம்**

பொன்செய்த மேனியினீர் புலித் தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் எரித்தீர் முது குன்றம் அமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேன்இட் டளங்கெடவே 01

உம்பரும் வானவரும் உட னேநிற்க வேஎனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும் முதுகுன்றம் அமர்ந்தீர்
வம்பமருங் குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர் அடியேஇட் டளங்கெடவே 02

பத்தா பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்தாருந் தடங்கண் பரவையிவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே 03

மங்கையோர் கூறமர்ந்தீர் மறை நான்கும் விரித்துகந்தீர்
திங்கள் சடைக்கணிந்தீர் திகழும் முதுகுன்றம் அமர்ந்தீர்
கொங்கை நல்லாள் பரவை குணங்கொண் டிருந்தாள் முகப்பே
அங்கணனே அருளாய் அடியேன்இட் டளங்கெடவே 04

மையாரும் மிடற்றாய் மருவார் புரமூன் றெரித்த
செய்யார் மேனியனே திகழும் முதுகுன்றம் அமர்ந்தாய்
மையாரும் அரவேர் அல்குலாள் இவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே 05

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முதுகுன்றம் அமர்ந்தவனே
படியாரும் இயலாள் பரவையிவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளீர் அடியேன்இட் டளங்கெடவே 06

கொந்தணவும் பொழில்சூழ் குளிர் மாமதில் மாளிகைமேல்
வந்தணவும் மதிசேர் சடைமாமுது குன்றுஉடையாய்
பந்தணவும் விரலாள் பாவையிவள் தன்முகப்பே
அந்தணனே அருளாய் அடியேன்இட் டளங்கெடவே 07

பரசாருங்கரவா பதினென் கணமுஞ் சூழ
முரசார் வந்ததிர முதுகுன்றம் அமர்ந்தவனே
விரைசேருங் குழலாள் பரவையிவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே 08

ஏத்தா திருந்திறியேன் இமையோர்தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தாருங் குழலாள் பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் அடியேன்இட் டளங்கெடவே 09

பிறையாருஞ் சடைஎம் பெருமான் அருளாய் என்று
முறையால் வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர் தம்மை
மறையார் தங்குரிசில் வயல் நாவல் ஆரூரன் சொன்ன
இறையார் பாடல்வல்லார்க்கு எளிதாம் சிவலோகமதே 10

**6.திருமுது குன்றம் - கொல்லி கௌவாணம்**
**ஆறறிலிட்ட பொன்னை குளத்திலே தேடியபோது உண்டான பிரச்சனை நீங்கப் பாடியது**

நஞ்சிஇடைஇன்று நாளைஎன்று உம்மை நச்சுவார்
துஞ்சியிட்டாற் பின்னைச் செய்வதென்அடி கேள் சொலீர்
பஞ்சியிடப் புட்டில் கீறுமோபணி யீர்அருள்
முஞ்சியிடைச் சங்கமார்க்கும் சீர்முது குன்றரே 01

ஏரிக்கனகக் கமல மலர்அன்ன சேவடி
ஊர்இத்தனையும் திரிந்தக் கால்அவை நோங்கலோ
வாரிக்கட் சென்று வளைக்கப்பட்டு வருந்திப்போய்
மூரிக்களிறு முழக்கறாமுது குன்றரே 02

தொண்டர்கள் பாடவிண் ணோர்கள் ஏத்த உழிதர்வீர்
பண்டகந் தோறும் பலிக்குச்செல்வதும் பாண்மையே
கண்டகர் வாளிகள் வில்லிகள்புறங் காக்குஞ்சீர்
மொண்டகை வேள்வி முழக்கறாமுது குன்றரே 03

இளைப்பறி யீர்இம்மை ஏத்துவார்க்கு அம்மை செய்வதென்
விளைப்பறி யாதவெங் காலனைஉயிர் வீட்டினீர்
அளைப்பிரி யாஅர வல்குலாளொடு கங்கைசேர்
முளைப்பிறைச் சென்னிச் சடைமுடிமுது குன்றரே 04

ஆடி அசைந்தடி யாரும்நீரும் அகந்தொறும்
பாடிப்படைத்த பொருள்எலாம் உமை யாளுக்கோ
மாட மதிலணி கோபுரமணி மண்டபம்
மூடி முகில்தவழ் சோலைசூழ்முது குன்றரே 05

இழைவளர் நுண்ணிடை மங்கையோடிடு காட்டிடைக்
குழைவளர் காதுகள் மோதநின்று குனிப்பதே
மழைவளரும் நெடுங் கோட்டிடை மதயானைகள்
முழைவளர்ஆளி முழக்கறாமுது குன்றரே 06

சென்றி லிடைச்சொடி நாய்குரைக்கச் சேடிச்சிகள்
மன்றி லிடைப்பலி தேரப்போவது வாழ்க்கையே
குன்றி லிடைக்களி றாளிகொள்ளக் குறத்திகள்
முன்றி லடைப்பிடி கன்றிடும்முது குன்றரே 07

அந்தி திரிந்துஅடி யாரும்நீரும் அகந்தொறும்
சந்திகள்தோறும் பலிக்குச் செல்வது தக்கதே
மந்திகடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்
முந்தி அடிதொழ நின்றசீர்முது குன்றரே 08

செட்டிநின் காதலி ஊர்கள்தோறும் அறஞ்செய்ய
அட்டுமின் சில்பலிக்கு என்றகங்கடை நிற்பதே
பட்டிவெள் ளேறுஉகந்து ஏறுவீர் பரிசுஎன்கொலோ
முட்டி அடிதொழ நின்றசீர்முது குன்றரே 09

எத்திசையுந் திரிந்து ஏற்றக்கால் பிறர்என் சொல்வார்
பத்தியினால் இடுவாரிடைப் பலி கொள்மினோ
எத்திசையுந் திரையேற மோதிக் கரைகள்மேல்
முத்தி முத்தாறு வலஞ்செயும்முது குன்றரே 10

முத்தி முத்தாறு வலஞ்செயும்முது குன்றரைப்
பித்தன் ஒப்பான அடித்தொண்டன் ஊரன் பிதற்றிவை
தத்துவ ஞானிகள் ஆயினார்தடு மாற்றிலார்
எத்தவத் தோர்களும் ஏத்துவார்க்கு இடர் இல்லையே 11

## 7.திருஓணகாந்தன்தளி - இந்தளம் சுந்தரர் பொன்பெற்றமை

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையில் ஒன்றும் காணவில்லைக் கழலடி தொழுது உய்யின் அல்லால்
ஐவர்கொண்டு இங்குஆட்டஆடி ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு
உய்யுமாறு ஒன்றுஅருளிச் செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே 01

திங்கள் தங்கு சடைக்கண்மேலோர் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார் கொற்றட்டியாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே 02

பெற்றபோழ்தும் பெறாதபோழ்தும் பேணிஉம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர்பற்றிலர் என்றுஇரங்கி மதியுடையவர் செய்கைசெய்வீர்
அற்றபோழ்தும் அலந்த போழ்தும் ஆபத்காலத்து அடிகேள்உம்மை
ஒற்றிவைத்திங்கு உண்ணலாமோ ஓணகாந்தன் தளியுளீரே 03

வல்லதெல்லாம் சொல்லிஉம்மை வாழ்த்தினாலும் வாய்திறந்துஒன்று
இல்லைஎன்னீர் உண்டும்என்னீர் எம்மை ஆளவான் இருப்பர்
பல்லைஉக்க படுதலையிற் பகல்எல்லாம்போய்ப் பலிதிரிந்திங்கு
கொல்லைவாழ்க்கை ஒழியமாட்டீர் ஓணகாந்தன் தளியுளீரே 04

கூடிக் கூடித் தொண்டர்தங்கள் கொண்டபாணி குறைபடாமே
ஆடிப்பாடி அழுதுநெக்கு அன்புடையவர்க்கு இன்பம் ஓரீர்
தேடித்தேடித் திரிந்தெய்த்தாலும் சித்தம்என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர் பற்றுந்தாரீர் ஓணகாநத்ன் தளியுளீரே 05

வாரிருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள் மதுவிம்முகொன்றைத்
தாரிருந்தட மார்புநீங்காத் தையலாள் உலகுஉய்ய வைத்த
காரிரும்பொழில் கச்சிமூதூர்க் காமக்கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வது என்ன ஓணகாந்தன் தளியுளீரே 06

பொய்ம்மையாலே போதுபோக்கிப் புறத்தும்இல்லை அகத்தும்இல்லை
மெய்ம்மைசொல்லி ஆளமாட்டீர் மேலைநாள்ஒன் றிடவுங்கில்லீர்

எம்மைபெற்றால் ஏதும்வேண்டீர் ஏதுந்தாரீர் ஏதுஓதீர்
உம்மைஎன்றே எம்பெருமான் ஓணகாந்தன் தளியுளீரே 07

வலையம்வைத்த கூற்றமீவான் வந்துநின்ற வார்த்தை கேட்டுச்
சிலையமைத்த சிந்தையாலே திருவடிதொழுது உய்யின்அல்லால்
கலையமைத்த காமச்செற்றக் குரோதலோப மதவருடை
உலைஅமைத்திங் கொன்றமாட்டேன் ஓணகாந்தன் தளியுளீரே 08

வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடிகேள்உந்தம்
ஊரும்காடு உடையும்தோலே ஓணகாந்தன் தளியுளீரே 09

ஓவணமேல் எருதொன்றேறும் ஓணகாந்தன் தளியுளார்தம்
ஆவணஞ்செய் தாளுங் கொண்டு வரைதுகிலொடு பட்டுவீக்கிக்
கோவணமேற் கொண்டவேடம் கோவையாக ஆரூரன்சொன்ன
பாவணத்தமிழ் பத்தும் வல்லார் புறையும்தாம் செய்த பாவந்தானே 10

**8. திருநாகைக்காரோணம் - கொல்லிகௌவாணம்**
**சுந்தரர் பொன், ஆடை, ஆபரணம், குதிரை, ஆகியன பெற்றமை**

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக்கோவை
அவைபூணத்தந்தருளி மெயக்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந்தீரே 01

வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத்தீற்றி
விருத்தி நானுமைவேண்டத் துருத்திபுக்கங் இருந்தீர்
பாம்பினொடு படர்சடைகள் அவை காட்டி வெருட்டிப்
பகட்டநான் ஒட்டுவனோ பலகாலும் உழன்றேன்
சேம்பினோடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினோடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடல்நாகை காரோண மேவியிருந்தீரே 02

பூணப்தோர் இளஆமை பொருவிடையொன் றேறிப்
பொல்லாத வேடங்கொண்டெல்லாரும் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவீரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்
வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடுவீதிக்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே 03

விட்டதோர் சடைதாழ வீணைவிடங்காக
வீதிவிடை ஏறுவீர் வீண்டிமை உகந்தீர்
துட்டராயின பேய்கள் சூடுநட மாடிச்
சுந்தரராய்த் தூமதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார்குழல் மடவார் தம்மை மயல்செய்தல்
மாதவமோ மாதிமையோ வாட்டமெல்லாந்தீர
கட்டியெமக் கீவதுதான் எப்போதுசொல்வீர்
கடனாகைக் காரோண மேவியிருந்தீரே 04

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடு பலபேசி வேண்டியவாதிரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக்கேற்றும்
சுந்தரனே கந்தமுதல் ஆடைஆபரணம்
பண்டாரத்தேஎனக்குப்பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே 05

இலவஇதழ் வாய்உமையோடு எருதேறி பூதம்
இசைபாட இடுபிச்சைக்கு கெச்சுச்சம் போது
பலஅகம்புக்கு உழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்தருளா திருக்கின்ற பரிசென்னபடிறோ
உலவுதிரைக் கடல்நஞ்சை அன்றமரர் வேண்ட
உண்டருளிச் செய்த துமக்கு இருக் கொண்ணாதிடவே
கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல்நாகைச் காரோணம் மேவியிருந்தீரே 06

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல்
தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய இலங்கையர்கோன் வரைஎடுக்க அடர்த்துத்
திப்பியகீதம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்
நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறைமறையோர் உறைவீழ் மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீர்இன் றெனக்கருள வேண்டும்
கடல்நாகைக் காரொணம் மேவியிருந்தீரே 07

மாற்றமேல் ஒன்றுரையீர் வாழாநீர் இருந்தீர்
வாழ்விப்பன் எனஆண்டீர் வழியடியேன் உமக்கு
ஆற்றவேற் றிருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணியாரூர் புகப்பெய்த அருநிதிய மதனில்
தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டும்
தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன்
காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே 08

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலிஉண் பெருவயிறன் கணபதி ஒன்றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்

திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே லாகில் திருமேனி
வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நானைக் காரோணம் மேவியிருந்தீரே 09

மறிஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மாநிதியந் தருவனென்று வல்லீராய் ஆண்டீர்
கிறிபேசிக் கீழ்வோளுர் புக்கிருந்தீர் அடிகேள்
கிறியும்மாற் படுவேனோ திருவாணை உண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே 10

பண்டயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எமக்கும்
பற்றாய் பெருமானே மற்றாரை உடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தும் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரென்று
அண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமர்உல காள்பவரே 11

## அதிகாரம் 05

**1. நினைத்த காரியம் சித்தி, வழக்கிலே நீதி வெற்றி கிடைக்க சிறைமீட்க, தீமையை விலக்க, தீயதனை ஒழிக்க, எதிலும் வெற்றியீட்ட.**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்று உன்னைப்பேசின் அல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயாந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களை மேயவனே 01

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடை நஞ்சுதன்னை
தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவநின்னைச்
மனத்தகத்தோர் பாடல்ஆடல் பேணி இராப்பகலும்
நினைத்தெழுவசு இடர்களையாய் நெடுங்கள மேயவனே 02

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 03

மலைபுரிந்த மன்னவன்தன் மகளைஓர் பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடை ஆரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின் தாள்நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 04

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கி
தாங்கிநில்லா அன்பினோடும் தலைவநின்தாள் நிழற்கீழ்
நிங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 05

விருத்தனாகிப் பாலனாகி வேதம்ஓர்நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடை மேற்கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தகீதர் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 06

கூறுகொண்டாய் மூன்றும் ஒன்றாய்க் கூட்டியோர் வெங்களையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தம் ஈதுஎன்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 07

குன்றின்உச்சிமேல் விளங்கும் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்தி இராப்பகலும்
நின்றுநைவார் இடர்களைவாய் நெடுங்கள மேயவனே 08

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான்முகனும்
சூழஎங்கும் தேடஆங்கோர் சோதியுளாகி நின்றாய்
கேழல்வெண் கொம்பு அணிந்த பெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 09

வெஞ்சொல் தஞ்சொல் லாக்கிநின்ற வேடமில்லாச் சமணும்
தஞ்சமிலாச் சாக்கியரும் தத்துவம் ஒன்றறியார்
துஞ்சலிலா வாய்மொழியால் தோத்திரம் நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 10

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோ நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம் பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 11

**2. திருமுருகன் பூண்டி - பழம்பஞ்சுரம் - சுந்தரர்**
**கள்வரால் (பூதகணங்களால்) கவரப்பெற்ற பொருள் பண்டாங்களை மீட்டல்**
**இழந்த பொருளை மீளப் பெறலாம்**

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறை கொண்டு ஆறலைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கிங்கிருந்தீர் எம்பொருமானிரே 01

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவ லாமை சொல்லிக்
கல்லினால்எறிந் திட்டும் மோதியுங் கூறை கொள்ளுமிடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லை காப்பதொன் றில்லை யாகினில்நீ எத்துக்கிங் கிருந்தீர் எம்பொருமானிரே

பசுக்களே கொன்று தின்று பாவிகள் பாவம் ஒன்றறியார்
உயிர்க்கொ லைபல நேர்ந்து நாள்தொறுங் கூறை கொள்ளுமிடம்
முசுக்கள்போற்பல வேடர்வாழ் முருகன்பூண்டி மாநகர்வாய்
இசுக்கழியப் பயிக்கங் கொண்டுநீர் எத்துக்கிங் கிருந்தீர் எம்பொருமானிரே 03

பீறற்கூறை உடுத்தோர் பத்திரம் கட்டி வெட்டனராய்ச்
சூறை பங்கிய ராகி நாள்தொறுங் கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
ஏறுகாலிற்ற தில்லை யாய்விடில் எத்துக்கிங் கிருந்தீர் எம்பொருமானிரே 04

தயங்கு தோலை உடுத்த சங்கரா சாம வேதம்ஓதீ
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும் மார்க்கம் ஒன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு முருகன் பூண்டி மாநகர்வாய்
இயங்க வும்மிடுக் குடைய ராய்விடில் எத்துக்கிங் கிருந்தீர் எம்பொருமானிரே 05

விட்டிசைப்பன கொக்கரைகொடு கொட்டித் தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
இட்ட பிச்சைகொண்டு உண்ப தாகில்நீர் எத்துக்கிங் கிருந்தீர் எம்பொருமானிரே 06

வேதம் ஓதிவெண் ணீறு பூசிவெண் கோவணத் தற்றயலே
ஓதம் மேவிய ஒற்றி யூரையும் உத்திரநீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன் பூண்டி மாநகர்வாய்
ஏது காரணம் ஏது காவல்கொண்டு எத்துக்கிங் கிருந்தீர் எம்பொருமானிரே 07

பட அரவுநுண் ணேரிடைப் பணைத்தோள் வரி நெடுங்கண்
மடவ ரல்லுமை நங்கை தன்னையொர் பாகம் வைத்துகந்தீர்
முடவர் அல்லீர் இடரிலீர் முருகன் பூண்டி மாநகர்வாய்
இடவம் ஏறியும் போவ தாகில்நீர் எத்துக்கிங் கிருந்தீர் எப்பொருமானிரே 08

சாந்த மாகவெண் ணீறு பூசிவெண் பற்றலை கலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையோர் பாகம் வைத்துகந்தீர்
மோந்தையோடு முழக்கறா முருகன் பூண்டி மாநகர்வாய்
ஏந்து பூண்முலை மங்கை தன்னொடும் எத்துக்கிங் கிருந்தீர் எப்பொருமானிரே 09

முந்தி வானவர் தாம்தொழு முருகன பூண்டி மாநகர்வாய்
பந்த ணைவிரற் பாவை தன்னையோர் பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்டன் ஊரன் உரைத்த பத்துங்கொண்டு
எந்தம் அடிகளை ஏத்து வார்இடர் ஒன்றுந் தாமிலரே 10

**3. திருப்பழையாறைவடதளி - திருக்குறுந்தொகை - அப்பர்**

**கொடிய சமணரால் மறைக்கப்பெற்ற லிங்கப்பெருமானை அப்பரின்பொருட்டு வெளிப்படுத்தியமை 1000 சமணர் அழிவுற்றனர். துயர்நீங்கும். எதிரிகள் அழிவர்.**

தலையெலாம் பறிக்குஞ்சமண் கையருள்
நிலையினான் மறைத்தான் மறைக்கொண்ணுமே
அலையினார் பொழிலாறை வடதளி
நிலையினா னடியே நினைந்து ய்மினே 01

மூக்கினான் முரன்றோதியக் குண்டிகை
தூக்கினார் குலந் தூரறுத்தே தனக்கு
ஆக்கினான் அணியாறை வடதளி
நோக்கினார்க்கு இல்லையாம் அருநோய்களே 02

குண்டரைக் குணமில்லரைக் கூறையில்
மிண்டரைத் துரந்த விமலன்தனை
அண்டரைப் பழையாறை வடதளி
கண்டரைத் தொழுது உய்ந்தன கைகளே 03

முடையரைத் தலைமுண்டிக்கு மொட்டரைக்
கடையரைக் கடிந்தார் கனல்வெண்மழுப்
படையரைப் பழையாறை வடதளி
உடையரைக் குளிர்ந்து உள்கும் என் உள்ளமே 04

ஒன்னரிக்கணார் முன்னம் அணிந்துனும்
கள்ளரைக் கடிந்த கருப்பூறவை
அன்னலம் புனலாறை வடதளி
வள்ளலைப் புகழத் துயர்வாடுமே 05

நீதியைக்கெட நின்று அமணேயுணும்
சாதியைக் கெடுமாசெய்த சங்கரன்
ஆதியைப் பழையாறை வடதளிச்
சோதியைத் தொழுவார் துயர்தீருமே 06

திரட்டிரைக் கவனந்திணிக்குஞ் சமண்
பிரட்டரைம் பிரித்த பெருமான்தனை
அரட்டிறத்து அணியாறை வடதளி
தெருட்டரைத் தொழத் தீவினை தீருமே 07

ஓதினத் தெழுத் தஞ்சுண்ராச் சமண்
வேதினைப்படுத்தானை வெங்கூற்றுதை
பாதனைப் பழையாறை வடதனி
நாதனைத் தொழ நம்வினை நாசமே 08

வாயிருந் தமிழேபடித் தாளுறா
ஆயிரம் சமணும் அழிவாக்கினான்
பாயிரும் புனலாறை வடதளி
மேயவன் என வல்வினை வீடுமே 09

செருத்தனைச் செயுஞ் சேணரக்கன் உடன்
எருத்திற விரலால் இறை யூன்றிய
அருத்தனைப் பழையாறை வடதளி
நிருத்தனைத் தொழுவார்வினை தேயுமே 10

**4. திருமறைக்காடு திருக்குறுந்தொகை - அப்பர்**
**திருமறைக்காட்டில்கதவு திறக்கப்பாடியது**

பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ
மண்ணினார் வலம்செய் மறைக்காடரோ

கண்ணினால் உமைக்காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே 01

ஈண்டு செஞ்சடையாகத்துள் ஈசரோ
மூண்டகார் முகிலின் முறிக்கண்டரோ
ஆண்டநீரே யருள் செய்திடும்
நீண்டமாக் கதவின் வலிநீக்குமே 02

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர்வான் புரஞ் சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டிய சென்னிப் பரமரோ
சட்டவிக் கதவந் திறப்பிம்மினே 03

அரியநான்மறை ஓதிய நாவரோ
பெரியவான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரியவான் கதவம் பிரிவிக்கவே 04

மலையினீ டிருக்கும் மறைக்காடரோ
கலைகள்வந்து இறைஞ்சுங் கழலேத்தரோ
விலையில் மாமணி வண்ண உருவரோ
தொலைவிலாக் கதவந்துணை நீக்குமே 05

பூக்குந்தாள் புரணி யருகெலாம்
ஆக்குந்தண் பொழில்சூழ் மறைக்காடரோ
ஆர்க்குங் காண்பரியீர் அடிகேளுமை
நோக்கிக்காணக் கதவைத் திறவுமே 06

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்தமில்லி அணிமறைக் காடரோ
எந்தைநீ அடியார்வந் திறைஞ்சிட
இந்தமாக் கதவம்பிணி நீக்குமே 07

ஆறுசூடும் அணிமறைக் காடரோ
கூறுமாதுஉமைக் கீந்த குழகரோ
ஏறதேறிய எம்பெருமானிந்த
மாறிலாக் கதவம் வலிநீக்குமே 08

சுண்ணவெண் பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ணலாதி அருமறைக் காடரோ
திண்ணமாக கதவந் திறப்பிப்பினே 09

அரக்கனை விரலால் அடர்த்திட்டநீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்கஇக் கதவந் திறப்பிப்பினே 10

## 5. திருமறைக்காடு - இந்தளம் - சம்பந்தர்
## திருமறைக்காட்டில் கதவு பூட்டப் பாடியது

சதுரம்மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்தா
இதுநன் இறைவைத் தருள் செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே 01

சங்கந்தரளம் அவைதான் கரைக்கெற்றும்
வங்கக்கடல் சூழ் மறைக்காட்டுறை மைந்தா
மங்கை உமைபாகமுமாக இதுஎன்கொல்
கங்கை சடைமேல் அடைவித்த கருத்தே 02

குரவம் குருக்கத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும் பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்தா
சிரமும்மலருந் திகழ் செஞ்சடை தன்மேல்
அரவம் மதியோடு அடைவித்தல் அழகே 03

படர்செம் பவளத்தொடு பன்மலர் முத்தம்
மடலம் பொழில் சூழ் மறைக் காட்டுறை மைந்தா
உடலம் பங்கமதாகியும் என்கொள்
கடல் நஞ்சமுதாவது உண்டகருத்தே 04

வானோர் மறைமாதவத்தோர் வழிபட்ட
தேனோர் பொழில் சூழ் மறைக்காட்டுறை செல்வா
ஏனோர் தொழுதேத்த இருந்தநீ என்கொல்
கானார்கடுவேடுவனான கருத்தே 05

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய் மாமறைக் காடா
உலகேழுடையாய் கடைதோறுமுன் என்கொல்
தலைசேர்பலி கொண்டதி லுண்டதுதானே 06

வேலா வலயத்தயலே மிளிர்வெய்தும்
சேலார் திருமாமறைக் காட்டுறை செல்வா
மாலோ டயன் இந்திரன் அஞ்சமுன் என்கொல்
காலார் சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே 07

கலங்கொள் கடலோதம் உலாவுங் கரைமேல்
வலங்கொள்பவர் வாழ்த்திசைக்கும் மறைக்காடா
இலங்கையுடையான் அடர்ப்பட்டிடச் செய்த
அலங்கல விரலூன்றி அருள் செய்தவாதே 08

கோனென்று பல்கோடி உருத்திரர் போற்றும்
தேனம் பொழில் சூழ் மறைக்காட்டுறை செவ்வா
ஏனம் கழுகானவர் உன்னைமுன் என்கொல்
வானந்தல மண்டியுங் கண்டிலா வாறே 09

வேதம்பல வோமம் வியந்தடி போற்ற
ஓதம் உலவும் மறைக்காட் டுறைவாய்

ஏதில் சமண் சாக்கியர் வாக்கிவை என்கொல்
ஆதரொடு தாம்அலர் தூற்றியவாறே 10

காழின்நகரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக்காடடுறை வாய்ந் தறிவித்த
ஏழின்னிசை மாலை யீரைந் திவை வல்லார்
வாழியுலகோர்தொழ வானடைவாரே 11

**6. திருவதிகை வீரட்டானம் - காந்தாரம் - அப்பர்**

**திருநாவுக்கரசு நாயனாரைச் கொல்லும்படி சமணர் யானையைக் கொணர்ந்து அவர் முன்விட அவர் இப்பாடலைப் பாட யானை அவரை வலஞ்செய்து சுற்றிநின்ற சமணரை கொன்றொழித்தது**

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கள் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை 01

பூண்டதோர் கேழல்எயிறும் பொன்திகழ்ஆமை புரள
நீண்டதிண் தோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கததிர் போலும் வெண்ணூலும்
காண்டகு புள்ளின் சிறகும் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டுகெடிலப் புனலும் உடையார் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவது........................................................ 02

ஒத்தவடத்திளநாகம் உருத்திரபட்டம் இரண்டும்
முத்துவடக்கண்டிகையும் முளைத்தெழு மூவிலைவேலும்
சித்தவடமும் அதிகைச் சேணுயர் வீரட்டம் சூழ்ந்து
தத்து ங்கெடிலப் புனலும் உடையார் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவது........................................................ 03

மடமான் மறிபொற்கலையும் மடப்பாமபு ஒருகையில் வீணை
குடமால் வரையதிண் தோளும்குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம் இருநிலன் ஏற்றசுவடும்
தடமார் கெடிலப்புனலும் உடையார் ஒருவர்தமர்நாம்
அஞ்சுவது.................. 04

பலபலகாமத்திராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங் கணபதியென்னுங் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான்கயிலாய மலையும்
நலமார்கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமாநாம்
அஞ்சுவது......... 05

கரந்தன கொள்ளிவிளக்கும் கறங்குதுடியின் முழக்கும்
பரந்த பதின்எண் கணமும் பயின்றுஅறியாதன பாட்டும்
அரங்கிடை நூல்அறிவாளர் அறியப்படாததோர் கூத்தும்
நிரந்தகெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமாநாம்
அஞ்சுவது.............

கொலைவரி வேங்கைஅதளும் குலவோடிலங்கு பொற்றோடும்
விலைபெறுசங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்டமார்பு மணியார்ந்து இலங்குமிடறும்
உலவுகெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது.......... 07

ஆடல்புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்
பாடல்பயின்றபல் பூதம் பல்லாயிரங்கொள் கருவி
நாடற்கரியதோர் கூத்து நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங்கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது......... 08

சூழுமரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின்மொழியள் அஞ்ச அஞ்சாது அருவரை போன்ற
வேழமுரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ்சூழ்ந்து
தாழுங்கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது......... 09

நரம்பொடு கைகள் பிடித்து நங்கைநடுங்க மலையை
உரங்கள் எலாங் கொண்டெடுத்தான் ஒன்பது ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்புகெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது.......... 10

**7. மாற்றுத்திருத்தாண்டகம்**

**திருநாவுக்கரசர் மதம்மாறியமை கேள்வியுற்று சணரால் தூண்டப்பெற்ற அரசன் அவரை வருமாறு தனது மந்திரமரை அனுப்பினான் அவர்கள் நாயனாரை அணுகி இச்செய்தியைக் கூறியபோது பாடப்பெற்றது. இறைவன் திருவடி சேர்ந்தார்க்கு அரசன் தலைவன் அல்லன்**

நாமார்க்குங் குடியல்லோம் நமனைஅஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலைஇல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே என்னாளும் துன்பம் இல்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரநற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே 01

அகலிடமே இடமாக ஊர்க்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகலிடமாம் அம்பலங்கள் பூமிதேவி
உடன் கிடந்தாள் புரட்டாள் பொய்யன்று மெய்யே
இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்
இனியேதுங்குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்
சொற்கேட்க்க கடவோமோ துரிசற்றோமே 02

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற்சேரோம்
மாதேவா மாதேவா என்று வாழத்தி
நீராண்ட புரோததாயம் ஆடப்பெற்றோம்
நீறணியுங் கோலமே நிகழப்பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாய்க் கரையப்பெற்றோம்
பாராண்டு பகடேறித்திரிவார் சொல்லும்
பணிகேட்க்க கடவோமோ பற்றற்றோமே 03

உறவாவார் உருத்திரபல் கணத்தினோர்கள்
உடுப்பன கோவணத்தொடு கீழ் உளவாமன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமைதானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்வோம்
நறவார் பொன் இதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவாயச் சொல்லவல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கொண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற்றோமே 04

என்றுநாம் யாவற்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா யாருமில்லை
சென்றுநாம் சிறுதெய்வஞ் சேர்வோம் அல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினினாற் குறைவுடையோம் அல்லோம் அன்றே
உறுபிணியார் செறலோழித்திடடு ஒடிப்போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே 05

மூவுருவின் முதலுருவாய் இருநான்கான
மூர்த்தியே என்று முப்பத்துமூவர்
தேவர்களும்மிக்கோரும் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனேயென்னும்
நாவுடையார் நமை ஆளவுடையாரன்றே
நாவலந்தீவகத்தினுக்கு நாதரான
காவலரே ஏவி விடுத்தாரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற்றோமே 06

நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினோடு காற்றாகி நெடுவானாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமையாகி
அன்புடையார்க்கு எளிமையதாய் அளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும்யானும்
ஆகின்ற தன்மையனை நன்மையோடும்
பொற்புடைய பேசக்கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே 07

ஈசனைஎவ்வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய்மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற்றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய்கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்

நின்றுண்பார் எம்மை நினையச்சொன்ன
வாசகம் எல்லாம் மறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனா வான்றானாரே 08

சடையுடையான் சங்கக்குழையோர் காதன்
சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி
விடையுடையான் வேங்கை அதள் மேல்ஆடை
வெள்ளி போற் புள்ளியுழை மான்தோல்சார்ந்த
உடையுடையான் நம்மையுடையான் கண்டீர்
உம்மோடும் மற்றுமுளராய் நின்ற
படையுடையான் பணிகேட்க்கும் பணியோம் அல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே 09

நாவார நம்பனையே பாடப்பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவெனறு எமையாள்வான் அமரர்நாதன்
அயனொடுமாற்கு அறிவரியஅனலாய் நீண்ட
தேவாதிதேவன் சிவன் என்சிந்தை சேர்ந்திருந்தான்
தென்திசைக் கோன்தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென்றாலுங்
குணமாகக் கொள்ளோம் எண்குணத் துளோமே 10

## 8. வடதிருமுல்லைவாயில் - தக்கேசி - சுந்தரர் துயர்களையும் தோத்திரம்

திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குஉன் சீருடைக் கழல்கள் என்றுஎண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும் ஊடியும் உறைப்பானாய்த் திரிவேன்
முருகமர் சோலைசூழ் திருமுல்லை வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடு அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 01

கூடிய இலயஞ் சதிபிழையாமைக் கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே அங்கணா் எங்குற்றாய் என்று
தேடியவானோர் சேர்திருமுல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 02

விண்பணிந்தேத்தும் வேதியா!மாதர் வெருவிட வேழமன்று உரித்தாய்
செண்பகச்சோலை சூழ் திருமுல்லை வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றிமாநகர் உடையாய் சங்கிலிக்கா என்கண் கொண்ட
பண்பநின் அடியேன் படுதுயர்!களையாய் பாசுபதா பரஞ்சுடரே 03

பொன்லைங்கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசை பாட
அந்நலங்கமலத் தவிசின்மேல் உறங்கும் அலவன்வந்து உலவிட அள்ளல்
செந்நலங்கழனி சூழ்திருமுல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந்தமிழாற் பாடுவேற்கு அருளாய் பாசுபதா பரஞ்சுடரே 04

சந்தனவேரும் காரகிற் குறடும் தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்து கொண்டுந்தி
வந்திழிபாலி வடகரை முல்லை வாயிலாய் மாசிலாமணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே

மற்றுநான் பெற்றதார் பெறவல்லார் வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையான் மிகைபல செய்தேன்
செற்றுமீ தோடுந் திரிபுரமெரித்த திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 06

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரியவார் குழல் மாமயிற் சாயல்
அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணார் நடமாட லறாத
திணிபொழில் தழுவு திருமுல்லைவாயிற் செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 07

நம்பனே அன்று வெண்ணெய் நல்லூரில் நாயினேன் தன்னை ஆட்கொண்ட
சம்புவே உம்பரார் தொழுதேத்தும் தடங்கடல்நஞ் சுண்ட கண்டா
செம்பொன் மாளிகைசூழ் திருமுல்லை வாயிற் தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 08

மட்டுலாம் மலர்கொண்டு அடியிணை வணங்கும் மாணிதன்மேன் மதியாதே
கட்டுவான்வந்த காலனை மாளக் காலினால் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லைவாயிற் செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 09

சொல்லரும்புகழான் தொண்டமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்டு அருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவும் திருமுல்லைவாயில் நாதனே நரைவிடைஏறி
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே 10

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும் வெருவிட நீண்ட எம்மானைத்
திரைதருபுனல் சூழ் திருமுல்லைவாயிற் செல்வனை நாவல் ஆரூரன்
உரைதருமாலை ஓர் அஞ்சனோடஞ்சும் உள்குளிர்ந்து ஏத்தவல்லார்கள்
நரைதிரை மூப்பு நடலையும் இன்றி நண்ணுவர் விண்ணவர்க்கு அசரச 11

## அதிகாரம் 06

**1. ஆறுகுளம், கிணறு, முதலிய நீர்நிலைகளில் ஆழாமற்காக்கும்
பொது - கௌசிகம் - சம்பந்தர் சம்பந்தரால் ஆற்றிலிட்ட ஏடு எதிரேறியமை
(புனல்வாதில் சமணர் தோற்றமை)**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழக் தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமுந் துயர் தீர்கவே 01

அரியகாட்சியராய் தமது அங்கைசோ
எரியர் ஏறு உகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆரறிவார் அவர் வெற்றியே 02

வெந்த சாம்பல் விரைஎனப் பூசியே
தந்தையார்ஒடு தாயிலார் தம்மையே
சிந்தியா எழுவார் வினைதீர்ப்பரால்
எந்தையார் அவர் எவ்வகையார்கோலோ 03

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டாம்
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று அவைகேட்கத் தக்கார் 04

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்கல்உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே 05

ஆடும்எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழ் அல்லது பாவம் நீங்க
கேடும்பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீராகில்
நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டலாமே 06

கடிசேர்ந்த போது மலரானக் கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டு அங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடி சேர்ந்த காலைஅற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக் கேட்டும் அன்றே 07

வேதமுதல்வன் முதலா விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன்ஒலி மாலைஎன்றே கலிக்கோவை சொல்லே 08

பாராழிவட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேரழியானது இடர்கண்டருள் செய்தல்பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்கும்
போராழி ஈந்த புகழும் புகழுற்ற தன்றே 09

மாலா யவயனும் மறைவல்ல நான் முகனும்
பாலாய தேவர் பகரில் அமுதூட்டல் பேணி
காலாய முந்நீர்க் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு அங்கு அமரர்க்கு அருள் செய்த்தாமே 10

அற்றன்றி அந்தண் மதுரைத்தொகை ஆக்கினானும்
தெற்றென்று தெய்வந்தெளியார் கரைக்கு ஓலை தெண்ணீர்ப்
பற்றின்றி பாங்கு எதிர்வின் ஊரவும் பண்புநோக்கில்
பெற்றொன்றுஉயர்ந்த பெருமான் பெருமானும் அன்றே 11

நல்லார்கள்சேர்புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்துபாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர் உலகு ஆழவும் வல்லர் அன்றே 12

**2. திருவேடகம் - கொல்லி - சம்பந்தர்**
**காவிரியிலே எதிரேறிச் சென்ற ஏட்டை நிறுத்திய பாடல்**

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமலரவை கொடு

மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே 01

கொடிநெடு மாளிகை கோபுரங் குளிர்மதி
வடிவுற அமைதர மருவிய வேடகத்து
அடிகளை அடிபணிந்து அரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள் போய் இல்லைய தாகுமே 02

குண்டலந் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம்பும் மலர்க்கொன்றை வான் மதியணி
செண்டலம்பும் விடைச் சேடனூ ரேடகம்
கண்டு கைதொழுதலுங் கவலைநோய் கழலுமே 03

ஏலமார் தருகுழல் ஏழையோடு எழில்பெறும்
கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்
சாலமா தவிகளும் சந்தனஞ் சண்பகம்
சீலமா ரேடகஞ் சேர்தலாஞ் செல்வமே 04

வரியணி நயனிதன் மலைமகள் மறுகிடக்
கரியினை உரிசெய்த கறையணி மிடற்றினன்
பெரியவன் பெண்ணினோடு ஆண் அலியாகிய
எரியவன் உறைவிடம் ஏடகக்கோயிலே 05

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய வேடகத்து
ஐயனை அடிபணிந் தரற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளிதாகுமே 06

தடவரை எடுத்தவன் தருக்கிறத் தோளடர்
படவிரல் ஊன்றியே பரிந்தவர்க்கு அருள்செய்தான்
மடவரல் எருக்கொடு வன்னியு மத்தமும்
இடமுடைச் சடையினன் ஏடகத் தொருவனே 07

பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தகில்
தன்னுளார் வைகையின் கரைதனில் சமைவுற
அன்னமா அயனுமால் அடிமுடி தேடியும்
இன்னவா றெனவொணா ஏடகத் தொருவனே 08

குண்டிகைக் கையினர் குணமிலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்
வண்டிரைக்கும் மலர்க் கொன்றையும் வன்னியும்
இண்டை சேர்க்கும் சடை ஏடகத்து எந்தையே 09

கோடு சந்தனம் அகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென் றணைதரும் ஏடகத்தொருவனை
நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன்
பாடல் பத்திவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே 10

## 3.திருக்கொள்ளம்பூதூர் - கந்தாரபஞ்சமம் - சம்பந்தர்
## பெருக்கெடுத்து ஓடிய ஆற்றின் மீது ஓடம் செலுத்தியது

கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்
நட்டமாடிய் நம்பனை உள்க
செல்ல வுந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நல்குமே 01

கோட்டகக் கழனிக் கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறை நம்பனை உள்க
செல்ல வுந்துக.................. 02

குலையினார் தெங்குசூழ் கொள்ளம்பூதூர்
விலையி லாட்கொண்ட விகிர்தனை உள்க
செல்ல வுந்துக........................ 03

குவளை கண்மலருங் கொள்ளம்பூதூர்
தவளநீறணி தலைவனை உள்கச்
செல்ல வுந்துக..................... 04

கொன்றை பொன்சொரியுங் கொள்ளம் பூதூர்
நின்ற யுன்சடை நிமலணை உள்கச்
செல்ல வுந்துக.......... 05

ஓடம்வந் தணையுங் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை உள்கச்
செல்ல வுந்துக............. 06

ஆறுவந்தணையுங் கொள்ளம் பூதூர்
ஏறுதாங்கிய இறைவனை உள்கச்
செல்ல வுந்துக.................. 07

குரக்கினம் பயிலுங் கொள்ளம் பூதூர்
அரக்கனைச் செற்ற ஆதியை உள்கச்
செல்ல வுந்துக................. 08

பருவரால் உகளுங் கொள்ளம் பூதூர்
இருவரகாண்பரியான் கழல் உள்கச்
செல்ல வுந்துக................... 09

நீரகக் கழனிக் கொள்ளம் பூதூர்
தேரமண் செற்ற செல்வனை உள்கச்
செல்ல வுந்துக........... 10

கொன்றை சேர்சடையான் கொள்ளம் பூதூர்
நன்றுகாழியுள் ஞானசம்பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல்லார்போய்
என்றும் வானவரோ டிருப்பரே 11

# அதிகாரம் 07

**1 திருநெல்வாயில்ரத்துறை**

**திருஞான சம்பந்தமூர்த்தியின்**

**வழிப்பயணத்துக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம், வழகியமை, வழிப்பயணம் பாதுகாப்பாகவும், தடையின்றியும் நடைபெற.**

**திருநெல்லூரியில் அரத்துலா பண் - பியந்தைக்காந்தாரம்**

எந்தையீசன் எம்பெருமான் ஏறமர்கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறையடிகள் தம்அருளே 01

ஈரவார் சடைதன்மேல் இளம்பிறை அணிந்த எம்பெருமான்
சீருஞ்செல்வமும் ஏத்தாசிதடர்கள் தெழச்செல்வ தன்றால்
வாரிமாமலர் உந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆருஞ்சோலை நெல்வாயில் அரத்துறையடிகள் தம்அருளே 02

பிணிகலந்தபுன் சடைமேல் பிறையணி சிவனெனப்பேணிப்
பணிகலந்து செய்யாத பாவிகள் தொழச்செல்வதன்றால்
மணிகலந்து பொன்னுந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
அணிகலந்த நெல்வாயில் அரத்துறை யடிகள் தம்அருளே 03

துன்னஆடை ஒன்று உடுத்து தூயவெண்ணீற்றி னராகி
உன்னி நைபவர்க் கல்லால் ஒன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணியுந்தி பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
அன்னமாரு நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே 04

வெருகுரிஞ்சு வெங்காட்டில் ஆடியவிமலன் என்றுள்கி
உருகி நைபவர்க்கல்லால் ஒன்றும் கைகூடுவதன்றால்
முருகுரிஞ்சு பூஞ்சோலை மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தருகுரிஞ்சு நெல்வாயில் அரத்துறையடிகள் தம்அருளே 05

உரவுநீர் சடைக்கரநத ஒருவனென்று உள்குளிர்ந் தேத்திப்
பரவி நைபவர்க் அல்லாற் பரிந்துகை கூடுவ தன்றால்
குரவ மாமலர் உந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அரவமாரு நெல்வால அரத்துறை யடிகள்தம் அருளே 06

நீல மாமணிமிடற்று நீறணிசினெப் பேணும்
சீலமாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கோல மாமலர் உந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
ஆலுஞ்சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே 07

செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி இராவணன் அலற
அழுந்த ஊன்றிய விரலான் போற்றியென்பார்க்கு அல்லதருளான்
கொழுங்கனி சுமந்து உந்திகுளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்தும் சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே 08

நுணங்கு நூல்அயன் மாலும் இருவரும் நோக்கரியானை
வணங்கி நைபவர்க் கல்லால் வந்துகை கூடுவ தன்றால்
மணங்கமழ்ந்து பொன்னுந்தி வருபுனல் நிவாமலகு கரைமேல்
அணங்கும் சோலை நெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே 09

சாக்கியப்படுவாரும் சமன்படுவாகளும் மற்றும்
பாக்கியப்படஇல்லா பாவிகள் தொழச் செல்வ தன்றால்
பூக்கமழ்ந்து பொன்னுந்தி பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆர்க்கும் சோலைநெல்வாயில் அரத்துறை யடிகள்தம் அருளே 10

கறையினார் பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம்பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை அடிகள்தம் அருளை
முறைமையாற் சொன்னபாடல் மொழியும் மாந்தர்தம் வினைபோய்
பறையும் ஐயுறவில்லை பாட்டிவை பத்தும்வல் லார்க்கே 11

**2 திருப்பட்டீச்சரம் - சாதாரி - சம்பந்தர்**

**திருமட்டீச்சரத்தடிகள் அருளால் வழிப்பயணத்தின் போதுண்டான வெப்பத்தைத் தணிக்க முத்துப்பந்தர் அருளியமை வினை கழியும், புகழ் ஓங்கும்.**

பாடன்மறை சூடன்மதி பல்வளையோர் பாகமதின் மூன்றோர் கணையால்
கூடஎரியூட்டி எழில் காட்டி நிழல் கூட்டு பொழில் சூழ்பழசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர மேய கடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறிகாட்டி வினை வீடுமவரே 01

நீரின்மலி புன்சடையர் நீளரவு கச்சையது நச்சிலைய தோர்
கூரினமலி சூலமது வேந்தி உடை கோவணமு மானினுரி தோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள் காதல் செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழசை பட்டிசரம் ஏத்தவினை பற்றழியுமே 02

காலைமட வார்கள்புன லாடுவது கௌவை கடியார் மறுகெலாம்
மாலைமண நாறு பழையாறை மழபாடி அழகான மலிசீர்ப்
பாலையென நீறுபுனை மார் பனுறை பட்டிசரமே பரவுவார்
மேலையொரு மால்கடல்கள் போல்பெருகி விண்ணுலகம் ஆளும் அவரே 03

கண்ணின் மிசை நண்ணி யிழிவிப்ப முகமேத்து கமழ் செஞ்சடையினான்
பண்ணின் மிசை நின்றுபல பாணிபட ஆடவல பால்மதியினான்
மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி படடிசர மேபரவுவார்
விண்ணின்மிசை வாழும் இமையோரொடு உடனாத லதுமேவல் எளிதே 04

மருவ முழவதிர மழபாடிமலி மத்த விழவார்க் கவரையார்
பருவமழை பணகவர்செய் பட்டிசரமேய படர் புன்சடையினான்
வெருவமத யானையுரி போர்த்து உமையை அஞ்சவரு வெள்விடையினான்
உருவமெரி கழல்கள் தொழ உள்ளம் உடையாரை அடையா வினைகளே 05

மறையினொலி கீதமொடு பாடுவன பூதமடி மருவி விரவார்
பறைனொலி பெருகநிகழ் நட்டம் அமர் பட்டிசரமேய பனிகூர்
பிறையினொடு மருவியதொர் சடையினிடை ஏற்ற புனல்தோற்ற நிலையாம்
இறைவனடி முறைமுறையின் ஏத்துமவா தீத்தொழில்கள் இல்லர்மிகவே 06

பிறவிபிணி மூப்பினொடு நீங்கிஇமை யோருலகு பேணலுறுவார்
துறவினும் உள்ளம் உடையார்கள் கொடிவீதி அழகாய் தொகுசீர்
இறைவனுறை பட்டிசரம் ஏத்தி எழுவார்கள் வினையேதும் இல்வாய்
நறவ விரையாலும் மொழியாலும் வழியாடு மறவாத அவரே 07

நேசமிகு தோள்வலவன ஆகியிறை வன்மலையை நீக்கியிடலும்
நீசன்விறல் வாட்டி வரை உற்றதுணராத நிரம்பா மதியினான்
ஈசனுறை பட்டிசரம் எத்திஎழுவார்கள் விளை ஏதுமில்லையாய்
நாசமற வேண்டுதலின் நண்ணல் எளிதாம் அமரர் விண்ணுலகமே 08

தூயமலரானும் நெடியானும் அறியார்அவனன் தோற்றநிலையின்
ஏயவகைஆன பதனையாரறிவார் அணிகொண் மார்பின் அகலம்
பாயநல நீறதணிளான் உமைதன் வனாடுமுறைபட்டி சேரமே
மேயவன தீரடியும் ஏத்தஎளிதாகும் நலமேல் உலகமே 09

தடுக் கினை யிடுக்கிமடவார்களோடு பிண்டமது உண்டு உழல்தரும்
கடுப்பொடி உடற்கலசா கத்துமொழி காதல்செய் திடாது கமழ்சேர்
மடைக்கயல் வயற்கொள் மழபாடிநகர் நீடுபழையாறை யதனுள்
படைக்கொடு கரத்தன் மிகுபட்டிசர ஏத்த வினைபற் றறுதலே 10

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறை யதனுள்
பந்தமுயர் வீடுநலபட்டிசர மேயபடர் புன்சடையனை
அந்தண் மறையோர் இனிது வாழ்புகலி ஞானசம்பந்த னணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர் வினை நிற்பதிலவே 11

**3 திருக்கூடலையாற்றூர் - புறநீர்மை - சுந்தரர்**
**பெருமான் அந்தணர் வேடத்தராய்ச் சுந்தரருக்கு திருக்கூடலையாற்றூருக்கு வழிகாட்டியமை**
**வழிதெரியாமல் தடுமாறும் போது உதவும் பாடல்**

வடிவுடை மழுஏந்தி மதகரியுரி போர்த்துப்
பொடிஅணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே 01

வையகமுழு துண்ட மாலொடு நான்முகனும்
பையர விளவல்குற் பாவையொ டும்முடனே
கொய்யணி மலர்ச் சோலைக் கூடலையாற்றூரில்
ஐயனிவ்வழி போந்த அதிசயம் அறியேனே 02

ஊர்தொறும் வெண்டலை கொண்டு உண்பலி இடுமென்று
வார்தருமென் முலையாண் மங்கையொ டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரில்
ஆர்வனிவ் வழிமோந்த அதிசயம் அறியேனே 03

சந்தணவும் புனலுந் தாங்கிய தாழ்சடையன்
பந்தணவும் விரலாள் பாவையாடும் முடனே

கொந்தணவும் பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அந்தணன் வழிபோந்த அதிசயம் அறியேனே 04

வேதியர் விண்ணவரும் மண்ணவருந் தொழநற்
சோதிய துருவாகிச் சுரிகுழல் உமையோடும்
கோதிய வண்டைறையும் கூடலை யாற்றூரில்
ஆதியிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே 05

வித்தக வீணையொடும் வெண்புரிநூல் பூண்டு
முத்தன வெண்முறுவன் மங்கையொடும் உடனே
கொத்தலரும் பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தனிவ்வழி போந்த அதிசயம் அறியேனே 06

மழைநுமை மதியமொடு வாரைவஞ் சடைமேல்
இழைநுழை துகிலல்ருல் ஏந்திழை யானோடும்
குழையணி தீகழ்சோலைக் கூடலை யாற்றூரில்
அழகனிவ் வழிமோந்த அதிசயம் அறியேனே 07

மறைமுதல் வானவரும் மாலயன் இந்திரனும்
பிறைநுதன் மங்கையொடும் பேய்க்கண் முஞ்சூழ்
குறள்படை யதனோடுங் கூடலை யாற்றூரில்
அறவனிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே 08

வேலையி னஞ்சுண்டு விடையது தானேறி
பாலனமென் மொழியாள் பாவையொடும் முடனே
கோலம துருவாகிக் கூடலை யாற்றூரில்
ஆலனிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே 09

கூடலை யாற்றூலிற் கொடியிடை யவளோடும்
ஆடலுகந்தானை அதிசயம் இதுவென்று
நாடிய வின்றமிழால் நாவல ஊரன சொன்ன
பாடல்கள் பத்தும் வலலார் தம்வினை பற்றறுமே 10

**4 திருவையாறு - காந்தாரபஞ்சமம் - சுந்தரர்**

**பொங்கி வழிந்து வேகமாகப் பாய்ந்து கொண்டிருந்த காவேரி பிரிந்து திருவையாற்றை அடைய வழிவிட்டமை.**

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ 01

எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்தென மனத்தீராய்ச்
சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே
கங்கை சடைமேற் கரந்தானே கலைமான் மறியுங் கனல்மழுவும்,
தங்குந் திரைக்கா விரிகோட்டத் தையா றுடையஅடிகளோ. 02

மருவிப் பிரிய மாட்டேன்நான் வழிநின் றொழிந்தேன ஒழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரற் பட்டை கொண்டு பகடாடிக்

குருவி ஓப்பிக் கிளிகடிவார் குழல்மேல் மாலை கொண்டோட்டந்
தரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடையஅடிகளோ. 03

பழகா நின்று பணிசெய்வார் பெற்ற பயனொன் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு வேகபடமொன் றரைச்சாத்தி
குழகா வாழைக் குலைத்தெங்கு கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடையஅடிகளோ 04

பிழைத்த பிழைஒன் றறியேன்நான் பிழையைத் தீரப்பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத்தையா றுடையஅடிகளோ. 05

கார்க்கொள் கொன்றை சடைமேல்ஒன் றுடையாய் விடையாய் கையினால்
மூர்க்கர் புரமூன் றெரிசெய்தாய் முன்னீபின்னீ முதல்வன்நீ
வார்க்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங்கொண்டு
ஆடார்க்குந் திரைக்கா விரிக்கோட்டத்தையா றுடையஅடிகளோ 06

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப் பற்றி உலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள் கணையால் எயில்எய்த செங்கண் விடையாய தீர்த்தன் நீ
மலைக்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங்கொண்டு
அலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய அடிறுகளோ 07

போழும் மதியும் புனக்கொன்றை புனல்சேர் சென்னிப் புண்ணியா
சூழும் அரவச் சுடர்ச்சோதீ உன்னைத் தொழுவார் துயர்போக
வாழும் அவர்கள் அங்கங்கே வைத்த சிந்தை உய்த்தாட்ட
ஆழுந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ 08

கதிர்க்கொள் பசியே ஒத்தேநான் கண்டேன் உம்மைக் காணாதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன்நான் எம்மான் தம்மான் தம்மானே
விதிர்த்து மேகம் மழைபொழிய வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்குந் திரைக்கா விரிக் கோட்டத் தையா றுடைய அடிகளோ 09

கூசி அடியார் இருந்தாலுங் குணம்ஒன்றில்லீர் குறிப்பிலீர்
தேசவேந்தன் திருமாலும் மலர்மேல் அயனுங் காண்கிலாத்
தேசம் எங்குந் தெளிந்தாடத் தெண்ணீர் அருவி கொணர்ந் தெங்கும்
வாசந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ 10

கூடிஅடியார் இருந்தாலுங் குணம்ஒன் றில்லீர் குறிப்பிலீர்
ஊடிஇருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்கும் காண்கிலேன் திருவாரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய அடிகளோ 11

**5 திருக்குருகாவூர் வெள்ளடை - நட்டராகம் - சுந்தரர்**
**சுந்தரர் மற்றும் அடியார்களோடு திருக்குருகாவூருக்குச் செல்லும் வழியில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து பசி, தாகம் தீர்த்தமை. பசிபோக்கும் அற்புதப்பதிகம்**

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்

முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே 01

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்
வாவியிற் கயல்பாய்க் குளத்திடை மடைதோறும்
காவியுங் குவவளையுங் கமலஞ்செங் கழுநீரும்
மேவிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே 02

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநின் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே 03

வெப்பொடு பிணியெல்லாம் தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்
ஒபபுடை ஒளிநீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை
அப்படி அழகாய அணிநடை மடஅன்னம்
மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீயன்றே 04

வரும்பழி வாராமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்
சுரும்புடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண் ணீற்றானே
அரும்புடை மலர்ப்பொய்கை அல்லியும் மல்லிகையும்
விரும்பிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே 05

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே 06

போந்தனை தரியாமே நமன்தமர் புகுந்தென்னை
நோந்தனை செய்தாலும் நுன்னல தறியேன் நான்
சாந்தனை வருமேலுந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட
வேந்தனே குருகாவூர் வேள்ளடை நீயன்றே 07

மலங்கில்நின் அடியார்கள் மனத்திடை மால்தீர்ப்பாய்
சலச்சல மிடுக்குடைய தருமனார் தமர்என்னைக்
கலங்குவான் வந்தாலுங் கடுந்துயர் வாராமே
விலக்குவாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே 08

படுவிப்பாய் உனக்கேஆள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடுபொன் தோலுடுத் துழல்வானே
கெடுவிப்பாய் அல்லாதார் கேடிலாப் பொன் அடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே 09

வளங்கனி பொழில்மல்கு வயல்அணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை உறைவானை
இளங்களை ஆரூரன் வனப்பகை யவள் அப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே 10

திருச்சிற்றம்பலம்

## அதிகாரம் 8

**1 திருவோத்தூர் - பழந்தககராகம்ஸ்ரீ சம்பந்தர் வேணடுதலால் ஆணபனைகள் பெண்பனைகளாயின், இயற்கை வளம் பெருக, தானியம் விளைய,பசிதீர.**

பூத்தேர்ந் தாயன கொண்டு நின்பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங்கால்
ஓத்தூர்மேய ஒளிமழுவா ளங்கைக்
கூத்தீரும்ம குணங்களே 01

இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீரே புள்ளி மானுரி
உடையீரே யும்மை ஏத்து மோத்தூர்ச்
சடையீரே யுமதாளே 02

உள்வோர்போல நொடிமையினார் திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வாழைக்கனி தேன்சொரி யோத்தூர்ச்
கள்வீரே யுமகாதலே 03

தோட்டீரே துத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டீரே அடியார் வினை
ஓட்டீரே யும்மை ஏத்துது மோத்தூர்
நாட்டீரே யருள்நல்குமே 04

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழை யாள்வீர் திருவோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின்றாடுவார்
அழையாமேய அருள் நகுமே 05

மிக்கார்வந்து விரும்பிப்பது லியிடத்
தக்கார்தம் மக்களீரென்
உட்காதா உளரோதிரு வோத்தூர்
நக்கீரே அருள் நகுமே 06

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதாவென்று நலம்புகழ்ந்து
ஓதாதார் உளரோ திருவோத்தூர்
ஆதிரே அருள் நல்குமே 07

என்றான் இம்மலை என்றஅரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதில் எய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை ஏகுமே 08

நன்றார் நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந் திசையெலாம்
ஒன்றாய் யொள்ளெரியாய்மிக வோத்தூர்
நின்றீரே யுமை நேடியே 09

காரமண் கலிங்கத் துவராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம்பால் எயிலெய்தவ னோத்தூர்ச்
சீரவன் கழல் சேர்மினே 10

குரும்பை ஆண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும் புகலியூர் ஞானசம் பந்தன்சொல்
விரும்புவார் வினை வீடே 11

**2 திருக்கோளிலி பண் - நட்டராகம்**

**சுந்தரர் பொருட்டுச் சிவபெருமான் கொடுத்தருளிய நென்மலையை பரவையார் வீட்டுக்கு பூதங்கள் மூலம் அனுப்பி வைத்தமை**

நீளநினைந் தடியேனுமை நித்தலுங்கை தொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப்பணியே 01

வண்ட மருங்குழலாள் நங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புரமூன் றரிசெய்த எம்வேதியனே
தெண்டிரை நீர்வயல்சூழ் திருக்கோளிலி எம்பெருமான்
அண்டமதாயவனே அவையட்டித் தரப்பணியே 02

பாதியோர் பெண்ணை வைத்தாய் படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல்லார் வருத்தம் அது நீயுமறிதியன்றே
கோதில் பொழில்புடை சூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப்பெற்றேன்
ஆதியே அற்புதனே அவையட்டி தரப்பணியே 03

சொல்லுவது தென்உனை நான்தொண்டைவாயுமை நங்கையைநீ
புல்கியிடத்தில் வைத்தாய்க் கொருபூசல் செய்தாருளரே
கொல்லை வளம்புறவிற் குண்டையூர்ச் சிலநெல்லுப்பெற்றேன்
அல்லல்களைந் அடியேற்கு அவைஅட்டித் தரப்பணியே 04

முல்லை முறுவல் உமை ஒருபங்குடை முக்கணனே
பல்லயர் வெண்டலையிற் பலிகொண்டுழல் பாசுபதா
கொல்லை வளம்புற விற் றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல்களைந்து அடியேற்குஅவை அட்டித் தரப்பணியே 05

குரவமருங்குழலாள் உமைநங்கையோர் பங்குடையாய்
பரவைஇவள் வருத்தம் அதுநீயுமறிதியன்றே
குரவமரும் பொழில்சூழ் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை அட்டித் தரப்பணியே 06

எம்பெருமான் உனையே நினைந் தேத்துவன் எப்பொழுதும்
வம்பமருங் குழலாள் ஒருபாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகை சூழ் திருக்கோளிலி எம்பெருமான்
அன்பது வாய்ற்கு அடியேற்கு அவையட்டித் தரப்பணியே 07

அரக்கன்முடி கரங்கள் அடர்த்திட்ட எம்பெருமான்
பரக்கும்அரவல்குலாள் பரவையவள் வாடுகின்றாள்
குரக்கினங்கள் குதிகொள் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கமதாய் அடியெற்கு அவை அட்டித்தரப் பணியே 08

பண்டை அமால்பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும்
கண்டிலரா யவர்கள் கழல்காண்பரி தாயபிரான்
தெணதிரை நீர்வயல்சூழ் திருக்கோளிலி எம்பெருமான்
அண்டமதாயவனே அவை அட்டித்தரப் பணியே 09

கொல்லை வளம்புறவிற் திருக்கொளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திருநாவல ஊரனவன்
நெல்லிட் ஆட்கள் வேண்டி நினைந்தேத்திய பத்தும் வல்லார்
அல்லல்களைந் உலகில் அண்டர்வானுல காள்பவரே 10

**3 திருவையாறு - மேகராகக்குறிஞ்சி**
**இஃது மழைக்குரிய பண்: சம்பந்தர் அருளியது**

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு மேலுந்தி
அலமந்தபோதாக அஞ்சேலென்று அருள்செய்வான அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாடமுழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்துமரமேறி முகில்பார்க்குந் திருவையாறே 01

விடலேறுபடநாகம் அரைக்கசைத்து வெற்பரையன் பாவையோடும்
அடலேநொன்றதுவேறி அஞ்சொலீர் பலியென்னும் அடிகள்கோயில்
கடலேறித்திரை மோதிக்கா விரியின் உடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிங்கஞ் செழுமுத்தங் கீன்றலைக்குந் திருவையாறே 02

கங்காளர் கயிலாயமலையாளர் கானப்பேராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர் விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழில் நுழைந்து கூர்வாயால்இறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குரு பைங்கானல இரைதேருந் திருவையாறே 03

ஊன்பாயு முடைதலை கொண்டு ஊரூரின்பலிக்குழல்வார் உமையாள் பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார் தழலுருவர் தங்குங் கோயில்
மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலருந் திருவையாறே 04

நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கு நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த தத்துவனார் தங்குங் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும் பொழில் அணைந்த கமழ்தார் வீதி
தேரோடும் அரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறே 05

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம் நறுங்கொன்றை சடைக்கணிந்த புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென்று அரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே 06

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கிவரு புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம்படி தொட்ட சிலையாளி மலையாளி சேருங்கோயில்

குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு கண்வளருந்திருவையாறே

அஞ்சா தேகயிலாயமலை எடுத்த அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள்நெரிய அடர்த்த னுக்கருள்புரிந் வதமைந்தா் கோயில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ இளமேதி இரிந்தங்கு ஓடிக்
செஞ்சாலிக் கதிர்உழக்கிச் செழுங்கமல வயல்படியுந் திருவையாறே 08

மேலோடி விசும்பணவி வியனிலத்தை மிகஅகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாதவகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக் குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே 09

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு சாக்கியருங் குணம் ஒன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே ஆளாமின்மேவித் தொண்டீர்
எண்டோளர் முக்கண்ணர் எம் ஈசர் இறைவர் இனிது அமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள் வந்தலைக்குந் திருவையாறே 10

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம் பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையாம் இவைபத்து இசையுங்கால் ஈசனடிஏத்துவார்களம்
தன்னிசையோடு அமருலகிற் தவநெறி சென்று எய்துவர் தாழாதன்றே 11

**4 திருநனிபள்ளி - பியந்தைக்காந்தாரம்**

**சம்பந்தர் பாலையை நெய்தலாக்கியது வரட்சி நீங்கும், மழைபெய்யும் ஓதுவீராக**

காரைகள் கூகைமுல்லை களவாகை யீகைபடர்தொடரி கள்ளிகவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடமர்ந்த சிவன்மேய சோலைநகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதிகொள்ள வாளைகுதிகொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயன்மேதிவைகும் நனிபள்ளிபோலு நமர்காள் 01

சடையிடைபுக் கொடுங்கி உளதங்கு வெள்ளம் வளர்திங்கள் கண்ணியயலே
இடையிடை வைத்ததொக்கு மலர்தொத்துமாலை இறைவனிடம் கொள்பதிதான்
மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து மணநாறு நீலமலரும்
நடையுடை அன்னம்வைகு புனலம்படப்பை நனிபள்ளிபோலு நமர்காள் 02

பெறுமலர் கொண்டு தொண்டர் வழிபாடு செய்யல் ஒழிபாடிலாத பெருமான்
கறுமலர் கண்டமாகளை விடமுண்டகால் இடமாய காதநகர் தான்
வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோனகொம்பின் விடுபோதலர்ந்த் விரைசூழ்
நறுமல அல்லிபுல்லி ஒலிவண்டுறங்கு நனிபள்ளிபோலு நமர்காள் 03

குளிர்தரு கங்கைதங்குசடைமாடிலங்கு தலைமாலை யோடுகுலவி
ஒளிர்தரு திங்கள்சூடி உமைபாகமாக வுடையானுகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட பெடைவண்டு தானுமுரல
நளிர்தரு சோலைமாலை நரைகுருகு வைகு நனிபள்ளிபோலும் நமர்காள். 04

தோடொரு காதனாகி ஒருகாதிலங்கு சுரிசங்கு நின்றுபுரளக்
காடிட மாகநின்று கனலாடும்எந்தை இடமாயகாதல்நகர்தான்

வீடுடன் எய்துவார்கள் விதினன்றுசென்று வெறிநீர்தெளிப்ப விரலால்
நாடுடனாடு செம்மை யொலிவெள்ளமாரு நனிபள்ளிபோலு நமர்காள்

மேகமொடோடுதிங்கண் மலராவணிந்து மலையான் மடந்தை மணிபொன்
ஆகமொர் பாகமாக அனலாடும் எந்தை பெருமான் அமர்ந்தநகர்தான்
ஊகமொடு அமந்தி உகளுஞ் சிலம்ப கிலுந்தி ஒண்பொனிடறி
நாகமொடு ஆரம்வாரு புனல்வந் தலைக்கும் நனிபள்ளிபோலு நமர்காள் 06

தகைமலி தண்டுசூலம் அனலுமிழ்நாகங் கொடுகொட்டி வீணைமுரல
வகைமலி வன்னிகொன்றை மதமத்தம் வைத்தபெருமானுகந்த நகர்தான்
புகைமலி கந்தமாலை புனைவார்கள் பூசல்பணிவார்கள் பாடல்பெருகி
நகைமலி முத்திலங்கு மணல்சூழ் கிடக்கை நனிபள்ளிபோலு நமர்காள் 07

வலமிகு வாளன் வேலன் வளைவாள் எயிற்று மதியாஅரக்கன் வலியோடு
உலமிகு தோள்கள் ஒல்கவிரலால் அடர்த்த பெருமானுகந்த நகர்தான்
நிலமிகு கீழுமேலு நிகராதுமில்லை யெனநின்ற நீதியதனை
நலமிகு தொண்டர் நாளும் அடிபரவல்செய்யு நனிபள்ளிபோலு நமர்காள் 08

நிறவுருஒன்று தோன்றி எரியொன்றி நின்றதொரு நீர்மைசீர்மை நினையார்
அறவுருவேதநாவன் அயனோடுமாலும் அறியாத வண்ணநகர்தான்
புறவிரிமுல்லை மௌவல் குளிர்பிண்டி புன்னை புனைகொன்றை துன்றுபொதுளி
நறவிரிபோது தாது புதுவாசநாறு நனிபள்ளிபோலு நமர்காள் 09

அனமிகு செல்குசோறு கொணர்கென்று கையிலிட உண்டுபட்ட அமணும்
மனமிகு கஞ்சிமண்டை அதிலுண்டுதொண்டர் குணமின்றி நின்றவடிவும்
வினைமிகு வேதநான்கும் விரிவித்தநாவின் விடையானு கந்தநகர்தான்
நனமிகு தொண்டர்நாளும் அடிபரவல்செய்யு நனிபள்ளிபோலு நமர்காள் 10

கடல்வரை ஓதமல்கு கழிகானல் பானல்கமழ் காழிஎன்று கருதப்
படுபொருள் ஆறுநாலு முளதாகவைத்த பதியான ஞானமுனிவன்
இடுபறையொன்றவத்தர் பியன்மேலிருந்து இன்னிசையால் உரைத்தபனுவல்
நடுவிருள் ஆடும்எந்தை நனிபள்ளிஉள்க வினைகெடுதல் ஆணைநமதே 11

**5 திருக்கச்சூராலக்கோயில் - கொல்லிக்கௌவாணம் - சுந்தரர் நாயனாருக்கு சிவனார் யாசித்து அன்னம் வழங்குதல்**

முதுவாஓரிகதற முதுகாட்டெரி கொண் டாடன் முயல்வானே
மதுவார்கொன்றைப் புதுவீள்சூடும் மலையான்மக தன்மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார்கவலாரே
அதுவேஆமாறிது வோகச்சூர் ஆலக்கோயில் அம்மானே 01

கச்சேர்அரவொன் றரையில் அசைத்துக் கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென்று
உச்சம்போதா ஊரூர் திரியக் கண்டால் அடியா உருகாரே
இச்சை அறியோம் எங்கள்பெருமான் ஏழேழ்பிறப்பும் எனையாள்வாய்
அச்சம் இல்லாக்கச்சூர் வடபால் ஆலக்கோயில் அம்மானே 02

சாலக்கோயில் உளநின்கோயில் அவைஎன் றலைமேற்கொண்டாடி
மாலைத்தீர்ந்தேன் வினையுந் துரந்தேன் வானோர் அறியா நெறியானே
கோலக்கோயில் குறையாக்கோயில் குளிர்பூங் கச்சூர் வடபாலை
ஆலக்கோயிற் கல்லால் நிழற்கீழ் அறங்கட் டுரைத்த அம்மானே

விடையுங் கொடியுஞ்சடையும் உடையாய் மின்னேர் உருவத் தொளியானே
கடையும்புடைசூழ் மணிமண்டபமுங் கன்னிமாடங் கலந்தெங்கும்
புடையும்பொழிலும் புனலுந் தழுவிப் பூமேற் றிருமா மகள்புல்கி
அடையுங் கழனிப் பழனக் கச்சூர் ஆலக்கோயில் அம்மானே 04

மேலைவிதியே வினையின்பயனே விரவார்புரம் மூன்று எரிசெய்தாய்
காலையெழுந்து தொழுவார் தங்கள் கவலைகளைவாய் கறைக்கண்டா
மாலைமதியே மலைமேன் மருந்தே மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப் பழனக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே 05

பிறவாயிறவாய் பேணாய்மூவாய் பெற்றம் ஏறிப்பேய்சூழ்தல்
துறுவாய்மறவாய் சுடுகாடென்றும் இடமாக்கொண்டு நடமாடி
ஒறுவாய்த் தலையிற் பலிநீகொள்ளக் கண்டால் அடியார் உருகாரே
அறவே ஒழியாய் கச்சூர்வடபால் ஆலக்கோயில் அம்மானே 06

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும்பொருளாக் கொள்வானே
மெய்யே எங்கள் பெருமான் உன்னை நினைவார் அவரை நினைகண்டாய்
மையார் தடங்கண் மடந்தைபங்கா கங்கார் மதியஞ் சடைவைத்த
ஐயா செய்யாய் வெளியாய் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே 07

ஊனைப் பெருக்கி உன்னை நினையா தொழிந்தேன் செடியேன் உணர்வில்லேன்
கானக் கொன்றை கமழ மலருங் கடிநா றுடையாய் கச்சூராய்
மானைப்புரையும் மடமென்மடனோக்கி வாள்ஞ்ச அமறைத்திட்ட
ஆனைத்தோலாய் ஞானக்கண்ணாய் ஆலக்கோயில் அம்மானே 08

காதல்செய்து களித்துப் பிதற்றிக் கடிமாமலர் இட்டுஉனையேத்தி
ஆதல்செய்யும் அடியார் இருக்க ஐயங்கொள்வது அழகிதே
ஓதக்கண்டேன் உன்னைமறவேன் உமையாள்கணவா எனையாள்வாய்
ஆதற்பழனக்கழனிக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே 09

அன்னமன்னும் வயல்சூழ் கச்சூராலக் கோயில் அம்மானே
உன்னமுன்னு மனத்தாரூரன் ஆரூரன்பேர் முடிவைத்த
மன்னுபுலவன் வயனாவலர்கோன் செஞ்சொல் வன்நாவன்றொண்டன்
பன்னுதமிழ் நூன்மாலை வல்லார் அவரெந்தலைமேற் பயில்வாரே 10

## அதிகாரம் 9

**1 உடலுறுநோய் பிணிவினைகளாயின தீர**
**மந்திரமாவது பக்கம் 88**

**2 கொல்லிமளவனின் மகளது முயலகன் நோய்தீர்த்தல்**
**பாச்சிலாச்சிராமம் - சம்பந்தர்**
**பண் - தக்கராகம்**

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ ஆரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோலமெலாஞ்செய்து பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே 01

கலைபுனைமானுரிதோலுடை ஆடை கனல்சுடரால் இவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள் இவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சிராமத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையைவாட இடர்செய்வதோ இவரீடே 02

வெஞ்சுடர் ஆடும்வர் துஞ்சிருள் மாலை வேண்டுவர் பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தரு பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச் சிதைசெய்வதோவர்சீரே 03

கனமலர்க்கொன்றை அலங்கல் இலங்கனல் தருதூமதிக் கண்ணீ
புனமலர்மாலை அணிந்தடிகாய புனிதர் கொலாம் இவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தரு பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோஇவர்மாண்பே 04

மாந்தர்தம்பால் நறுநெய் மகிழ்ந்தாடி வளர்சடைமேற் றுபுனல்வைத்
மோந்தைமுழாக் குழறாளமொர்வீணை முதிரவோர்வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச் சிறுபூதத்தர் பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
சாந்தணிமார்பரோ இதையலைவா இடர்செய்வதோஇவரீடே 05

நீறுமெய்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண்ணா லுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி யைவிரற்கோவண ஆடை
பால் தருமேனியர்பூதத்தர் பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையைவாடஇடர்செய்வதோஇவரீடே 06

பொங்கிளநாகம் ஓர் ஏகவடத்தோடு ஆமைவெண்ணூல்புனை கொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய குழகர்கொலாஇவரென்ன
அங்கிளமங்கை ஓர்பங்கினர் பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்ச திர்செய்வதோஇவர்சார்வே 07

ஏவலத்தால் விசயற்கருள்செய்து இராவணனை ஈடழித்து
மூவரிலும்முதலாய் நடுவாயமூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும்எழிற்பாச்சிலாச்சிலாச்சிராமத் துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழைவாடச் சிதைசெய்வதோஇவர்சேர்வே 08

மேலதுநான்முகன் எய்தியதில்லை கீழதுசேவடிதன்னை
நீலதுவண்ணனும் எய்தியதில்லை எனவிவர் நின்றதும் அலால்
யாவர்களும்பரவும் எழிற்பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழைவாடச் சிதைசெய்வதோஇவர்சேர்வே 09

நாணொடுகூடிய சாயினரேனும் நகுவார் அவரிருபோதும்
ஊணொடுகூடிய உட்குநகையால் உரைகளவை கொளவேண்டா
ஆணொடுபெண் வடிவாயினர் பாச்சிலாச்சிராமத் துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப் புனைசெய்வதோ இவர்பொற்பே 10

அகமலிஅன்பொடு தொண்டர்வணங்க ஆச்சிராமத் துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ்ஞான சம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரகிலா வினைதானே 11

## 3 திருவதிகைவீரட்டானம் - கொல்லி

## சூலநோய் நீங்க அப்பர் பாடியது

கூற்றாயினவாறு விலக்க இலீர் கொடுமைபல வெய்தன நான் அறியேன்
ஏற்றாயடிக்கே இரவும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கிமுடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில வீரட்டானத் துறையம்மானே 01

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்இதுஒப்பது கண்டறியேன் வயிற்றோடு துடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவ தனைநலிகாமற் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் எனீர் அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே 02

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண் தலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டுமெய் பூசவல்லீர்பெற்றமேற்றுகந்தீர் சுற்றும்
வெண்டலைகொண்டு
அணிந்தீரடிகேள் அதிகைக்கெடில வீரட்டானத் துறையம்மானே 03

முன்னம் அடியேன் அறியாமையினால் முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்காளும்பட்டேன் சுடுகின்றது சூலை தவர்த்அருளீர்
தன்னையடைந்தார் வினைதீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடையார் அதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 04

காத்தாள்பவர் காவல் இழந்தமையாற் கரைநின்றவர்கண்டு கொள்என்றுசொல்லி
நீத்தாயகயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனலம் அதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 05

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசைபாடன் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னைமறந் தறியேன் உன்னாமம் என்னாவின் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வ உடலுள்ளுறு சூலை தவிர்த் தருளாய்
அலந்தேன்அடியேன் அதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 06

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும் ஒருவர்தலைகாவல் இலாமையினால்
வயந்தே உமக்காட்செய்து வாழலுற்றால் வலிக்கின்றது சூலை தவிர்த்து அருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே பறித்துப்புரட்டி அறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடியேனதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 07

வலித்தேன்மனைவாழக்கை மகிழ்ந்தடியேன் வஞ்சமனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணையாரும் இல்லைச் சங்கவெண் குழைக்காதுடை
எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தினை
அலுத்தேன்அடியேன் அதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 08

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர் புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென நிவற்றை நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிகர் ளும்மை இனித் தெளியார் அடியார்படுவது இது வேயாகில்
அன்பே அமையும் அதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 09

போர்த்தாய் அங்கொர் ஆனையி னீருரிதோல் புறங்காடரங்கா நடமாட வல்லாய்
ஆர்த்தான் அரக்கன்றனை மால்வரைக்கீ ழடர்த்திட்டு அருள்செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால் என்வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக்கெடில வீரட்டானத் துறை அம்மானே 10

**4 திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்**

**காந்தாரம் - சுந்தரர்**

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவிவெடிபடக் கரையொடுந்
திரை கொணர்ந்தெற்றும்
அன்னமாங்காவிரி அகன்கரை உறைவார் அடியிணை தொழுதெழும்
அன்பராம் அடியார்
சொன்னவாறறிவார் துருத்தியார் வேள்விக்குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமாறு எம்பெருமானை என்னுடம்படும் பிணி
இடர்கெடுத்தானை 01

கூடுமாறுள்ளன கூடியுங் கோத்துங் கொய்புனஏனலோ டைவனஞ்சிதறி
மாடுமா கோங்கமே முருதமேபொருது மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமாகாவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலேன் எமபெருமானைப் பழவினை உள்ளன பற்றறுத் தானை 02

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார் கொழுங்கனிச்
செழும்பயன் கொண்டுகூட்டெய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும் போகரும் யோகரும்
புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
சொல்லுமா றறிகிலேன் எம்ருெமானைத் தொடர்ந் தடுங் கடும்பிணித்
தொடர்வறுத்தானை 03

பொறியுமா சந்தனத் துண்டமோடகிலும் பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக் கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை அருவினை உள்ளன ஆசறுத் தானை 04

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும் பொன்மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புனல் ஈண்டி எண்டிசை யோர்களும் ஆடவந்திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெருமானை உற்றநோய் இற்றையே உறவொழித் தானை 05

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும் பொன்மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி ஆடுவார் பாவந்தீர்த் அஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
இகழுமா றறிகிலேன் எம்பெருமானை இழித்தநோய் இம்மையே ஒழிக்கவல் லானை 06

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும் வருடியும் வணக்கியும் மராமரம்
பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் காம்பீலி சுமந்தொளிர்
நித்திலங் கைபோய்

விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
உரையுமா றறிகிலேன் எம்பெருமானை உலகறி பழவினை அறவொழித்தானை 07

ஊருமா தேசமே மனம்உகந் துள்ளிப் புள்ளினம் பலபடிநது ஒண்கரை உகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் கவரிமா மயிர்சுமந் தொண்பறிங்கு இடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஆருமா றறிகிலேன் எம்பெருமானை அம்மைநோய் இம்மையே ஆசறுத் தானை 08

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தாமரை
இலங்குமார் முத்தினோ டினமணி இடறி இருகரைப் பெருமரம் பீழ்ந்து கொண்டெற்றிச்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமா றறிகிலேன் எம்பெருமானை மேலைநோய் இம்மையே வீடுவித் தானை 09

மங்கையோர் கூறுகந் தேறுகந்தேறி மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி அன்றிமற் றறியான் அடியவர்க் கடியவன் தொழுவன் ஆரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுதுதம் நாவின்மேற் கொள்வார் தவநெறிசென் றமருலகம்ஆள் பவரே 10

**5 திருமாகறல் - திருவராகம் - பண் - சாதாரி - சம்பந்தர்**
**வினைதீர்க்கும் மருந்து௵ எலும்பு முறிவு நெறிவு௵ இளம்பிள்ளை வாதம்௵ பக்கவாதம் குணமடையும்**

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளை ஆடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண்மாடமலி நீடுபொழின் மாகற லுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையி னான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள் வினைகள் தீருமுடனே 01

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி யாடல்கவின் எய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசுமலி மாகற லுளான்
இலையின்மலி வேல்நுணைய சூலம்வலனேந்தியெரி புன்சடையினுள்
அலைகொள் புனலேந்து பெருமானடியை ஏத்த வினை அகலு மிகவே 02

காலையொடு துந்துபிகள் சங்குகுழல் யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள் ஏத்திமகிழ் மாகற லுளான்
தோலையுடைபேணி யதன்மேலோர் சுடர்நாகமசையா அழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை யேத்த வினை பறையு முடனே 03

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள் உந்தியெழின் மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனலாடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி செஞ்சடையின் அடியையே
நுங்கள்வினை தீரமிகவேத்தி வழிபாடுநுகரா எழுமினே 04

துஞ்சுநறுநீலம் இருள்நீங்க ஒளிதோன்று மதுவார் கழனிவாய்
மஞ்சுமலி பூமபொழிலின் மயில்கள் நடமாடன்மலி மாகற லுளான்
வஞ்சமத யானையுரி போர்த்து மகிழ்வான் ஓர்மழுவாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடியாரை நலியா வினைகளே 05

மன்னுமறை யோர்களொடு பல்படிமம் ஆதவர்கள் கூடியுடனாய்
இன்னவகையால் இனிதிறைஞ்சியிமையோரில் எழுமாகற லுளான்

மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள் கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கஉயர் வானுலகம் ஏறலெளிதே 06

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரி கானல் மதுவார்கழனி மாகறலுளான் எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை அஞ்சியடையா வினைகள் அகலுமிகவே 07

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடுசெய்கை மிகமாதவர்கள் ஓதிமலிமாகற லுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு கச்சையுடை பேணி யழகார்
பூசுபொடி யீசனென ஏத்த வினை நிற்றலில போகுமுடனே 08

தூயவிரி தாமரைகள் நெய்தல் கழுநீர் குவளை தோன்ற மதுவுண்
மாலுமலரானும் அறியாமைஎரியாகி உயர்மாகற லுளான்
சாயவிரலூன்றிய இராவணன் தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுகழேத்தும் அடியார்கள் வினையாயினவும் அகல்வ தெளிதே 09

காலில் நலபங்கழல்கள் கநீண்முயின் மேலுணர்வு காமுறவினார்
மாலுமலரானும் அறியாமை எரியாகி உயர்மாகற லுளான்
நாலுமெரிதோலுமுரி மாமணிய நாகமொடு கூடியுடனாய்
ஆலும் விடையூர்தி யுடையடிகள் அடியாரை அயடையா வினைகளே 10

கடைகொள் நெடுமாடமிக ஓங்கு கமழ்வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி அரனையடிகூடு சம்பந்த னுரையால்
மடைகொள்புனல் ஓடுவயல் கூடுபொழின் மாகற லுளா னடியையே
உடையதமிழ் பத்துமுணர்வார் அவர்க்கள் தொல்வினைகள் ஒல்குமுடனே 11

## அதிகாரம் 10

**1 கண்ணொளி மங்காதிருக்க**

**திருவொற்றியூர் - தககேசி**

**சுந்தரர் தீருவொற்றியிலிருந்து திருவாருருக்குப்புறப்பட்டபோது சங்கிலிக்கு அளித்த சபதம் தவறியமையால் இருகண்களும் மறைந்தன அவற்றை மீளத்தருமாறு பாடியது.**

அழுக்குமெய்கொடுன் திருவடிஅடைந்தேன் அதுவும்நான்படப்பால தொன்றானால்
பிழுக்கைவாரியும் பால்கொள்வர் அடிகேள் பிழைப்பனாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லால் மற்றுநான் றியேன் மறுமாற்றம்
ஒழுக்களன்கணுக் கொருமருந்துரையாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே 01

கட்டனேன் பிறந்தேன் உனக்காளாய்க் காதற்சங்கிலி காரணமாக
எட்டினால் கழுந்தி திருமூர்த் ஏன் செய்வான் அடியேன் எடுத்துரைக்கேன்
பெட்டனாகிலுந் திருவடிப் பிழையேன் பிழைப்பனாகிலுந் திருவடிக்கடிமை
ஒட்டினேன் எனைநீசெய்வ தெல்லாம்மொற்றியூரெனு ஊருறைவானே 02

கங்கைதங்கிய சடையுடைக்கரும்பேகட்டி யேபலர்க்குங் களைகண்ணே
அங்கைநெல்லியின் பழத்திடை யமுதேயத்தாவென்னிட ஆர்க்கெடுத் துரைக்கேன்
சங்குமிப்பியுஞ் சலஞ்சல முரலவயிரமுத்தொடு பொன்மணி வரன்றி
ஒங்குமாகடல் ஓதம்வந்துலவும் ஒற்றியூரெனும் ஊருறைவானே 03

ஈன்றுகொண்டதோர் சுற்றமொன் றன்றால் யாவராகி என்அன்புடை யார்கள்
தோன்றநின்றருள் செய்தளித் திட்டாற் சொல்லுவாரை ல்லாதன சொல்லாய்
மூன்றுகண்ணுடையாய் அடியேன்கண் கொள்வதே கணக்கு வழக்காகில்
ஊன்றுகோலென்க் காவதொன் றருளாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே 04

வழித்தலைப்படுவான் முயல்கின்றேன் உன்னைப்போல் என்னைப்பாவிக்க மாட்டேன்
சுழித்தலைப்பட்ட நீரதுபோலச் சுழல்கின்றேன் சுழல்கின்ற தென்னுள்ளம்
கழித்தலைப்பட்ட நாயதுபோல ஒருவன்கோல்பற்றிக் கறகறவிழுக்கை
ஒழித்துநீ அருளாயின செய்யாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே 05

மானைநோக்கியர் கண்வலைப்பட்டு வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித்
தேனை ஆடிய கொன்றையினாய் உன்சீலமுங்குண முஞ்சிந்தியாதே
நானுமித்தனை வேண்டுவதடி யேனுயிரொடுந் நரகத் தழுந்தாமை
ஊனமுள்ளன தீர்த்தருள்செய்யாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே 06

மற்றுத்தேவரை நினைந்துனை மறவேன் எஞ்சினாரொடு வாழவுமாட்டேன்
பெற்றிருந்து பெறாதொழிகின்ற பேதையேன் பிழைத்திட்டதை அறியேன்
முற்றுநீயெனை முனிந்திடஅடியேன் கடவதென்னுனை நான்மறவேனேல்
உற்றநோயுறு பிணிதவிர்த் தருளாய் ஒற்றியூரெனும் ஊருறைவானே 07

கூடினாய் மலைமங்கையை நினையாய் கங்கையாயிர முகமுடையாளைச்
சூடினாய் என்று சொல்லிய புக்காற்றொழும்ப னேனுக்குஞ் சொல்லலுமாமே
வாடிநீயிருந் தென்செய்தி மனனே வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி
ஊடினால் இனி ஆவதொன்றுண்டே ஒற்றியூரெனும் ஊருறைவானே 08

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய் மைந்தனே மணியே மணவாளா
அகத்திற் பெண்டுகள் நான்ஒன்றுசொன்னால் அழையேற் போகுருடா வெனத் தரியேன்
முகத்திற்கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன் முக்கணா முறையொ மறையோதீ
உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும் ஒற்றியூரெனும் ஊருறைவானே 09

ஓதம்வந் துலவுங் கரை தன்மேல் ஒற்றியூஉறை செல்வனைநாளும்
ஞாலந்தான பரவப்படுகின்ற நான்மறை அயங்கம் ஓதியநாவன்
சீலந்தான பெரிதும் மிகவல்ல சிறுவன் வன்றொண்டன் ஊரனுரைத்த
பாடல்பத்திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே 10

**2 திருவெண்பாக்கம் - சீகாமரம் - சுந்தரர்**
**சிவபெருமான உள்ளிருந்து உளோம் போகீர் என்று கூறி ஊன்றுகோல் கொடுத்தருளியது**

பிழையுள்ன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதேபடலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளாயே என்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்பொகீர் என்றானே 01

இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணம் என்பேன்
அடையுடையன் நம்மடியான் என்றவற்றைப்பாராதே
விடையுடையன் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தொல்
உடையுடையான் எனையுடையான் உளோம்போகீர் என்றானே 02

செய்வினையொன் றறியாதேன் றிருவடியேசரண் என்று
பொய்யடியேன் பிழைத்திடுனும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தாயோ வென்னப் பரிந்தென்னை
உய்யவருள் செய்யவல்லான் உளோம் போகீர் என்றானே 03

கம்பமருங் கரியுரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன் சேயிழையோ எடுடனாகி
நம்பியிங்கே இருந்தீரேஎன்று நான்கேட்டலுமே
உம்பர்தனித்துணையெனக்கு உளோம்போகீர் என்றானே 04

பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடைமேற் பொலிந்திலங்க
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகமாஎருதேறி
துன்னியிரு பாலடியார் தொழுதேத்த அடியேனும்
உன்னமதாய்க் கேட்டலுமே உளோம்போகீர் என்றானே 05

கண்ணுதலாற் காமனையுங் காய்ந்த திறற் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேல் தீமலர்ந்த கொன்றையினான்
கண்மணியை மறைப்பித்தா இங்கிருந்தாயோ என்ன
ஒண்ணுதலி பெருமானார்உளோம் போகீர் என்றானே 06

பார்நிலவு மறையோரும் பத்தர்களும் பணிசெய்யத்
தார்நிலவு நறுங்கொன்றைச் சடையனார் தாங்கரிய
கார்நிலவு மணிமிடற்றீர் இங்கிருந்தீரே என்ன
ஊரரவம் அரைக்கசைத்தான் உளோம்போகீர் என்றானே 07

வாரிடங்கொள்வன முலையாள் தன்னோடு தமயானத்துப்
பாரிடங்கள் பலசூழ்ப் பயின்றாடும் பரமேட்டி
காரிடங்கொள் கண்டத்தன் கருதுமிடந் திருவொற்றி
ஊரிடங்கொண் டிருந்தபிரான் உளோம் போகீர் என்றானே 08

பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ் இருவென்று
சொன்ன வெனைக் காணாமே சூளறவு மிகழ்க்கீழே
என்னவல்ல பெருமானே யிங்கிருந்தாயோ என்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோமபோகீர் என்றாளே 09

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்க ளெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயிலிருந்தா யோவென்ன
ஊன்றுவதோர் கோல் அருளி உளோம்போகீர் என்றானே 10

ஏராரும் பொழில் நிலவு வெண்பாக்கம் இடங்கொண்ட
காராரும் மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடும்
சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில்லைத்த
ஆரூரன் தமிழ்வல்லார்க்கு அடையாவல் வினைதானே 11

**3 திருவாரூர் - செந்துருத்தி - சுந்தரர்**
**சுந்தரர் வலக்கண் பெற்றமை**

மீளா அடிமை உமக்கேஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத்தீப்போல் உள்ளே கனன்று முகத்தானல் மிகவாடி

ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே 01

விற்றுக் கொள்வீர் ஒற்றிஅல்லேன் விரும்பிஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த ஆதில்லை கொத்தைஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்டான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே 02

அன்றின் முட்டா தடையுஞ் சோலைஆரூர் அகத்தீரே
கன்றுமுட்டி உண்ணச்சுரந்த காலியவைபோல
என்றுமுட்டாப் பாடும அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் வீழ்ந்தால் வாழ்ந்து போதீரே 03

துருத்திஉறைவீர் பழனம்பதியாச் சோற்றுத்துறைஆள்வீர்
இருக்கை திருவா ரூரேஉடையீர் மனமேஎனவேண்டா
அருத்தியுடைய அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்து போதீரே 04

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோதிரு வாரூர்
எந்தம் அடிகேள்து வேயாமாறுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே 05

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப்புரிபுன் சடையீரே
தனத்தால் இன்றித் தாந்தரம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே 06

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமாறுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே 07

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே 08

பேயோ டேனும்பிறிவொன் நின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவாரூரீர் வாழ்நது போதீரே 09

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டானம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே 10

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவரகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பே ராரூரன்

பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூா முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே 11

**4 திருக்கச்சியேகம்பம் - தக்கேசி -சுந்தரர்**
**சுந்தரர் இடக்கண்பெற்றது**

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை ஆதியைஅமரர் தொழுதேத்தும்
சீலந்தான்பெரிதும் உடையானைச் சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார்குழல் ஆளுமைநங்கை என்றுஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக் ஊகாணக்கண் அடியேன்பெற்றவாறே 01

உற்றவர்க் குதவும் பெருமானை ஊர்வதொன்றுடை யானும்பர் கோனைப்
பற்றினார் கென்றும் பற்றவன் றன்னைப் பாவிப்பார்மனம் பாவிக்கொண்டானை
அற்றமில்புகழ் ஆளுமைநங்கையா தரித்துவழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக் கம்பனெம்மானைக் காணக்கண் அடியேன்பெற்ற வாறே 02

திரியுமுப்புரந் தீப்பிழம்பாகச் செங்கண்மால்விடை மேல் திகழ்வானைக்
கரியினீருரி பொர்த்துகந்தானை காமனைக்கனலா விழித்தானை
வரிகொள்வெள்வளை ஆளுமைநங்கை மருவியேத்தி வழிபடப்பெற்ற
பெரியகம்பனை யெங்கள்பிரானைக் காணக்கண் அடியேன்பெற்றவாறே 03

குண்டலந்திகழ் காதுடையானைக் கூற்றுதைத்தகொடுந் தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையி னானை வாளராமதி சேர்சடையானைக்
கெண்டையந்தடங் கண்ணு மைநங்கை கெழுமி யேத்தி வழிபடப்பெற்ற
கண்டநஞ்சுடைக் கம்பனெம்மானைக் காணக்கண் அடியேன்பெற்றவாறே 04

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை வேலைநஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லறீர்த்தருள் செய்யவல் லானை அருமறையவை அங்கம்வல் லானை
எல்லையில்புகழ் ஆளுமைநங்கைஎன்றுமேத்தி வழிபடப்பெற்ற
நல்லகம்பனை யெங்கள்பிரானைக் காணக்கண் அடியேன்பெற்ற வாறே 05

திங்கள்தங்கியசடையுடை யானைத் தேவதேவனைச் செழுங்கடல் வளரும்
சங்கவெண் குழைக் காதுடை யானைச் சாமவேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டுமருவி யேத்தி வழிபடப்பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் மானைக் காணககண் அடியேன்பெற்ற வாறே 06

விண்ணவர்தொழுது ஏத்தநின்றானை வேதந்தான் விரித்தோத வல்லானை
நண்ணீம்னார்க்கென்று நல்லவன் தன்னைநாளுநாம் உகக்கின்ற பிரானை
எண்ணில்தொல்புகழ் ஆளுமை நங்கைஎன்று மேத்திவழிபடப்பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்ப னெம்மானைக் காணக்கண் அடியேன்பெற்ற வாறே 07

சிந்தித்தென்றும் நினைந்தெழுவார்கள் சிந்தையிற்றிகழுஞ் சிவன்றன்னைப்
பந்தித்தவினைப் பற்றறுப்பானைப் பாலொடானஞ்சும் ஆட்டுகந்தானை
அந்தமில்புகழ் ஆளுமைநங்கை ஆதரித்து வழிபடப்பெற்ற
கந்தவார்சடைக்கம்ப னெம்மானைக் காணக்கண் அடியேன்பெற்றவாறே 08

வரங்கள் பெற்றுழல் வாளரக்கர்தம் வாலியபுர மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன்றன் பெருவேள்வி நிரந்தரஞ் செய்தநிட் கண்டகனைப்
பரந்த தொல்புகழ் ஆளுமை நங்கை பரவியேத்தி வழிபடப்பெற்ற
கரங்கள் எட்டுடைக்கம்ப னெம்மானைக் காணக்கண் அடியேன்பெற்ற வாறே 09

எள்கலின்றி இமையவர் கோனைஈசனைவழிபாடு செய்வாள்போல்
உள்ளத் துள்கியுகந் துமைநங்கை வழிபடச்சென்று நின்றவாகண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிடவ ஞ்சிவெருவியோடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக் காணக்கண அடியேன்பெற் வாறே 10

பெற்றமேறுகந்து ஏறவல்லானைப் பெரியஎம்பெருமான் என் றெப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக் காணக்கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தஎம்மானைக் குளிர்பொழிற் அறிருநாவலாரூரன்
நற்றமிழ் இவையீரைந்தும் வல்லார் நன்னெறி யுலகெய்துவர் தாமே 11

## அதிகாரம் 11

**1 மரித்தவர் உயிர்த்தெழுதல் அதிசக்திவாய்ந்த அற்புதத் திருப்பதிகங்கள்**
**சடையாயாய் எனுமால் பக்கம் 14**

**2 திருமயிலாப்பூர் - சீகாமரம் - சம்பந்தர்**
**தொழில் நிரந்தரம் பெறலாம்**

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் 01

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓணம் விழாவும் அருந்தவர்கள்
உய்ப்பனவுங்கா ணாதே போதியோ பூம்பாவாய் 02

வளைக்கைமட நல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்கரத்தான் றொல்கார்த்திகைநாள்
தளத்தேந்திள முலையார்தை யலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் 03

ஊர்திரைவேலை உலாவுமாமயிலைக்
கூர்தருவேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தருசோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய் 04

மைப்பூசு மொண் கணம்டநல்லார் மாமயிலைக்
கைப்பூசுநீற்றான் கபாலீச் சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசு வெண்புழுக்கநேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோபூம்பாவாய் 05

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டு கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆனேறூரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய் 06

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனிஉத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் 07

தண்ணாவரக் கன்றோள் சாய்த்து கந்ததா ளினான்
கண்ணார் மயிலைக்கபாலீச்சரம் அமர்ந்தான்
பண்ணார் பதிணென் கணங்கள்தம் அட்டமி நாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய் 08

நற்றாமரை மலர்மேல் நான்முகனு நாரணனும்
உற்றாங்குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரம் அமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய் 09

உரிஞ்சாய வாழ்க்கைஅமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக கியர்களடுத் துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்தகபாலீச் சரம அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய் 10

கானமர் சோலைக் கபாலீச் சரம் அமாந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத்தவ ரோடும் வாழ்வாரே 11

**3.பொது - இந்தளம் - அப்பர்**
**விடந்தீர்த்த திருப்பதிகம் பாம்புதீண்டயிற்ந்த மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்தது எந்தவகையான நஞ்சையும் நீக்கிவல்லது**

ஒன்றுகொலா அவர்சிந்தை உயர்வரை
ஒன்றுகொலாம் உயரும் மதிசூடுவர்
ஒன்றுகொலாம் உடுவெண்டலை இகையது
ஒன்றுகொலாம் அவர் ஊவதுதாமே 01

இரண்டுகொலாம் இமையோர் தொழுபாதம்
இரண்டுகொலாம் இலங்குங்குழை பெண்ணாண்
இரண்டுகொலாம் உருவஞ்சிறுமான்மழு
இரண்டும்கொலாம் அவர் எய்தினதாமே 02

மூன்றுகொலாம் அவர்கண் ணுதலாவன
மூன்றுகொலாம் அவர்சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொலாங் கணைகையது வின்னாண்
மூன்றுகொலாம் புரம்எய்தனதாமே 03

நாலுகொலாம் அவர்தம்முகமாவன
நாலுகொலாஞ் சனனம்முதற்றோற்றமும்
நாலுகொலாம் அவரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாம் மறைபாடின தாமே 04

அஞ்சுகொலாம் அவர் ஆடரவின்படம்
அஞ்சுகொலாம் அவர்வெல்புலனாவன
அஞ்சுகொலாம் அவர்கா யப்பட்டான்தலை
அஞ்சுகொலாம் அவர் ஆடினதாமே 05

ஆறுகொலாம் அவர் அங்கம்படைத்தன
ஆறுகொலாம் அவர் தம்மகனார் முகம்
ஆறுகொலாம் அவர் தார்மி சைவண்டின்கால்
ஆறுகொலாஞ்சுவை ஆக்கினதாமே 06

ஏழுகொலாம் அவர் ஊழிபடைத்தன
ஏழுகொலாம் அவர் கண்ட இருங்கடல்
ஏழுகொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழுகொலாம் இசைஆக்கினதாமே 07

எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்
எட்டுக்கொலாம் அதவர்சூடும் இனமலர்
எட்டுக்கொலாம் அவர் தோளிணையாவன
எட்டுக்கொலாந்திசை ஆக்கினதாமே 08

ஒன்பதுபோல்வர் வாசல்வகுத்தன
ஒன்பதுபோல்வர் மார்பினின் நூலிழை
ஒன்பதுபோலவர்கோலக்குழற்சடை
ஒன்பதுபோலவர்பாரிடந்தானே 09

பத்துக்கொலாம் அவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாம் எயிறுந் நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர் காயப்பட்டான்றதலை
பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே 10

**04.திருப்புககொளியூர்அவிநாசி - குறிஞ்சி - சுந்தரர்**
**முதலையுண்ட பாலகனை மீட்டது**

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாஎன்றுன்னையே உள்குகின்றேன் உணர்ந்துள்ளத்தால்
புற்றாடரவாபுக்கொளியூரவிநாசியே
பற்றாகவாழ்வேன் பசுபதியே பரமேட்டியே 01

வழிபோவார்தம்மோடும்வந்துடன்கூடியமாணிநீ
ஒழிவதழகோசொல்லாய் அருளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப்புக் கொளியூரிற்குளத்திடை
இழியாக்குளித்தமாணி என்னைக்கிறிசெய்ததே 02

எங்கேனும்போகினும் எம்பெருமானைநினைந்தக்கால்
கொங்கேபுகினுங் கூறைகொண் டாறலைப்பார்இலை
பொங்காடவா புக்கொளி யூரவிநாசியே
எங்கோனே உனை வேண்டிக்கொள்வேன் பிறவாமையே 03

உரைப்பார் உரைஉகந்துள்கவல் லார்தங்கள்உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும் அந்தமும் ஆமாயினாய்

புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே 04

அரங்காவ தெல்லாமாயிடு காடதுஅன்றியும்
சரங்கோலை வாங்கி வரிசிலை நாணியிற்சந்தித்துப்
புரங்கோடஎய்தாய் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே 05

நாத்தானும் உனைப்பாடல் அன்றிநவிலா தெனாச்
சோத்தென்று தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய்
பூத்தாழ்சடையாய் புக்கொளி யூரவிநாசியே
கூத்தா உனக்குநான் ஆட்பட்ட குற்றமுங் குற்றமே 06

மந்திகடுவனுக் குண்பழம்நாடி மலைப்புறம்
சந்திகள் தோறுஞ்சலபுட்பம் இட்டுவழிபடப்
புந்திஉறைவாய்புக் கொளி யூரவிநாசியே
நந்திஉனை வேண்டிக் கொள்வேன்நரகம் புகாமையே 07

பேணாதொழிந்தேன் உன்னையலாற்பிறதேவரைக்
காணாதொழிந்தேன் காட்டுதி யேல்இன்னங் காண்பன்நான்
பூணாண் அரவா புக்கொளி யூரவிநாசிலே
காணாத கண்கள் காட்டவல் லகறைக் கண்டனே 08

நள்ளாறுதெள்ளாறு அத்துறை வாய்எங்கள நம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் தோலை விரும்பினாய்
புள்ளேறு சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணியென் னைக்கிறி செய்ததே 09

நீரேற ஏ தேறிம் நிமிர் புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறி யைப்புக்கொளி யூரவிநாசியைக்
காரேறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லைத் துன்பமே 10

## அதிகாரம் 12

**கடுங்குளிர், வெப்பம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி, ஆழிப்பேரலை, காட்டுவிலங்கின் சீற்றம், நவக்கிரகதோசம் என்றின்னோரன்ன இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தைத் தவிர்க்கவூ ஆயுள்பலம் பெற, சிரசுபீடைகள் நீங்க, கோளறுப்பதிகம் - பியந்தைக்காந்தாரம் - சம்பந்தர்**

**1 மங்கையற்கரசியார், குலச்சிறை நாயனார் ஆகியோரின் அழைப்பை ஏற்று சம்பந்தர் பாண்டி நாட்டுக்குப் புறப்படும்போது அப்பரின் அச்சுறுத்தலுக்கு விடையாக பாடப்பெற்றதுவூ அது நாம் எமது வாழ்விலே சந்திக்கும் பிரச்சனைகள் அனைத்துக்கும் மந்திரமும் தந்திரமும் மருந்துமாய் அமைவது**

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள் கங்கைமுடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி சனிபாம்பு இரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே 01

என்பொடுகொம்பொடாமை இவைமார்பிலங்க எருதேறிஏழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடிவந்தென் உளமேபுகுந்த அதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறும் உடனாயநாள்கள் அவைதாம்
அன்பொடுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே 02

உருவளர்பவளமேனி ஒளிநீறணிந்து உ மையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள் முடிமேலணிந்துஎன் உளமேபுகுந்தஅதனால்
திருமகள்கலையதூர்தி செயமாதுபூமிதிசை தெய்வமானபலவும்
அருநெதிநல்ல நல்லஅவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே 03

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்துமறையோதும் எங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்து என்உளமேபுகுந்த அதவனால்
கொதியுறுகாலன் அங்கி நமனோடுதூதர் கொடுநோய்கள் ஆனபலவும்
அதிகுணநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே 04

நஞ்சணிகண்டன் எந்தை மடவாள்தனோடும்விடையேறு நங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிநதுஎன் உளமேபுகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னுமிகையானபூதம் அவையும்
அஞ்சிடுநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே 05

வாள்வரி அதளதாடைவரிகோவணத்தர்மடவாள் தனோடுமுடனாய்
நான்மலர்வன்னிகொன்றை நதிசூடிவந்து என் உளமேபுகுந்தவனால்
கோளரிஉழுவையோடு கொலையானைகேழல் கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே 06

செப்பிளமுலை நன்மங்கை ஒருபாகமாக விடையேறு அசல்வனடைவார்
ஒப்பிளமதியும்ப்பும் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அஃதனால்
வெப்பொடுகுளிரும் வாதம் மிகையான பித்தும் வினயானவந்து நலியா
அப்படிநல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே 07

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து மடவாள் தனோடுமுடனாய்
வாள்மதிவன்னிகொன்றை மலர்சூடிவந்தென் உளமே புகுந்தஅதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்தனோடும் இடரானவந்துநலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே 08

பலபலவேடமாகும் பரனாரிபாகன் பசுவேறும் எங்கள்பரமன்
சலமகளோருடு எக்குடு முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனான்
மலர்மிசை யோனும் மாலுறையோடுதேவர் வருகாலமான பலவும்
அலைகடன்மேருநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே 09

கொத்தலர் குழலியோடு விசயற்குநல்கு குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேலணிந்தென் உளமேபுகுந்த அதனால்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மைதிடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியார் அவர்க்குமிகவே 10

தேனமர்பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செமபொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான ஞானமுனிவன்
தானுறுகோளும் நாளும் அடியாரைவந்து நலியாதவண்ண உரைசெய்
ஆனசொன் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர்ஆணைநமதே

## 2 பொது - தனிக்குறுந்தொகை - அப்பர்
## சுண்ணாம்பறையுள் விட்டு பூட்டியபோது வேகாதிருந்தமை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே 01

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே 02

ஆளானார்க் காளானாரை அடைந் துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளாதசுரையோ தொழும்பர்செவி
வாளாமாய்ந்து மண்ணாகிக் கழிவரே 03

நடலைவாழ்வு கொண் டென்செய்திர்நாணிலீர்
சடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந் தூர்முனி பண்டமே 04

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக்கொண் டரன் நாம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே யிரையாகிக் கழிவரே 05

குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர்நின்றதொர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே 06

வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே 07

எழுதுபாவை நல்லார்திறம் விட்டுநான்
தொழுதுபோற்றி நின்றேனையுஞ் சூழ்ந்துகொண்டு
உழுதசால்வழியே உழுவான்பொருட்டு
இழுதைநெஞ்சம் இதன்படு கின்றதே 08

நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்கமிக்வர் பூவும் நீருங்கண்டு
நக்குநிற்பர் அவர்தம்மை நாணியே 09

விறகில்யி தீயினன்பாலிற்படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

உறவுகோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன் நிற்குமே 10

**3 திருநீலகண்டப்பதிகம் - வியாழக்குறிஞ்சி - சம்பந்தர்**
**கடுங்குளிரால் உண்டான பனிப்பிணி நீங்கியது**

அவ்வினைக்கிவ் வினையா மென்றுசொல்லும் அஃதறிவீர்
உய்வினைநாடாது இருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினைசெய்து எம்பிரான்கழல்போற்றுதும் நாமடியோம்
செய்வினைவந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 01

காவினையிட்டும் குளம்பலதொடடுங் கனிமனத்தால்
ஏவினையால் எயின்மூன்றெரித்தீர் என்றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடிபோற்றுது நாமடியோம்
தீவினைவந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 02

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையுமெல்லாம்
விலைத்தலைவணங் கொண்டெமையாண்ட விரிசடையீர்
இலைத்தலைச்சூழ்மும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 03

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்றிருபொதுந் தொழப்படும் புண்ணியரேர்
கண்ணிமையாதன மூன்றுடையீருங் கழலடைந்தோம்
திண்ணியதீவினை தீண்டபெறாதிரு நீலகண்டம் 04

மற்றிணையில்லா மலைதிரண்டன்னதிண் தோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டு கேளாதொழிவதுந்தன்மை கொல்லோ
சொற்றுணைவாழ்க்கை துறந்துந்திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத்தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 05

மறக்குமனத்தினை மாற்றியெம்மாவியை வற்குறுத்திப்
பிறப்பில்பெருமான திருந்தடிக்கீழ்ப் பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடு வந்துமையேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 06

கருவைக்கழித்திட்டு வாழ்க்கைகடிந்துங் கழலடிக்கே
உருகிமலர்கொடு வந்துமையேத்து நாமடியோம்
செருவிலரக்கனைச் சீரிலடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 07

நாற்றமலர்மிசை நான்முகன்நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றம் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றதாம் வினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம் 08

சாக்கியப்பட்டுஞ் சமணுருவாகி உடையொழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப்போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ்கொன்றைப் புரிசடையீா அடிபோற்றுகின்றோம் .
தீக்குழித்தீவினை தீண்டப்பெறாதிரு நீலகண்டம் 09

பிறந்தபிறவியிற் பேணியெஞ்செல்வன் கழலடைவான்
இறந்தபிறவி யுண்டாகிஇமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்கோனொடுங் கூடுவரே 10

## 4 திருத்தாண்டகம் - அப்பர் இடர் கெடுக்கும் பதிகம்

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சேநீவா வீண்டொளிசேர்கங்கைச் சடையாயென்றும்
சுடரொளியாய் உள்விளங்குசோதீயென்றும் தூநீறுசேர்ந்திலங்கு தோளாவென்றும்
கடல்விடமதுண்டி ருண்டகண்டாவென்றுங் கலைமான்மறியேந்து கையாவென்றும்
அடல்விடையாய் ஆரமுதேஆதீயென்றும் ஆரூராஎன்றென்றே அலறாநில்வே 01

செடியேறுதீவினைகள் தீரும்வண்ணஞ் சிந்தித்தேநெஞ்ச மேதிண்ணமாகப்
பொடியேறுதிருமேனியுடையாயென்றும் புரந்தரன்றன்தோ துணித்தபுனிதாவென்றும்
அடியேனையாளாக்கொண்டாயென்றும் அம்மானே ஆருரெம்அமரசேயென்றும்
கடிநாறுபொழிற்கச்சிக்கம்பாவென்றுங் கற்பகமேயென்றென்றே கதறாநில்லே 02

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சேநீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன்ல அகிட்டு மெழுக்கும் இட்டுப்பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையினாற்கும்பிட்டுக்கூத்துமாடிச் சங்கராசயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர்செஞ்சடையெம் ஆதீயென்றும் ஆரூராவென்றென்றே அலறாநில்லே 03

பண்ணியமும் நன்னெறியும் ஆவதெல்லாம் நெஞ்சமே இதுகண்டாய்பொருந்தக்கேள்நீ
நுண்ணியவெண்ணூல் கிடந்தமார்பாஎன்றும் நுந்தாதவொண்சுடரே என்றுநாளும்
விண்ணியங்கு தேவர்களும்வேதநான்கும் விரைமலர்மே நான்முகனும் மாலுங்கூடி
எண்ணரியதிருநாமம் உடையாய்என்றும் எழிலாரூராவென்றே ஏத்தாநில்லே 04

இழைத்தநாள் எல்லைகடப்பதன்றால் இரவினொடுநண்பகலும் ஏத்திவாழ்த்திப்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோய்என்றும் பிஞ்ஞகனேமைஞ்
ஞவிலுங்கண்டாவென்றும்
அழைத்தலறி அடியேனுன்அரணங்கண்டாய் அணியாரூரிடங்கொண்ட அழகாவென்றும்
குழற்சடையெங்கோனென்றுங்கூறுநெஞ்சே குற்றமில்லையென் மேனான்கூறினேனே 05

நீப்பரியபல் பிறவிநீக்கும்வண்ணம் நினைந்திருந்தேன்காண் நெஞ்சேநித்தமாகச்
சேம்பிரியாவெல் கொடியினானேயென்றும் சிவலோகநெறிதந்த சிவனேயென்றும்
பூப்பிரிய நான்முகனு புள்ளின்மேலைப்புண்டரிக கண்ணானும் போற்றியென்னத்
தீப்பிழம்பாய் நின்றவனேசெல்வமல்குந்திருவாரூரா வென்றே சிந்திநெஞ்சே 06

பற்றிநின்றபாவங்கள்பாற்ற வேண்டிற் பரகதிக்குக்குச்செல்வ தொருபரிசுவேண்டில்
சுற்றிநின்றசூழ் வினைகள்வீழ்க்கவேண்டிற் சொல்லுகேன்கேள் நெஞ்சே துஞ்சாவண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயேயென்றும் உன்னையல்லாலொருதெய்வம்
உள்கேனென்றும்
புற்றரவக்கச்சார்த்த புனிதாவென்றும்பொழிலாரூரா வென்றே போற்றாநில்லே 07

மதிதருவன் நெஞ்சமே உஞ்சுபோகவழியாவதிது கண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியே ஆரமுதேயாதீயென்றும் அம்மானேயாரூரெம் ஐயாவென்றும்
துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச் சூழும்வலஞ்செய்து தொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா கற்பகமே என்றெ கதறாநில்லே 08

பாசத்தைப்பற்றறுக்கலாகுநெஞ்சே பரஞ்சோதீபண்டரங்காபாவநாசா
தேசத்தொளிவிளக்கே தேவதேவே திருவாரூர்த் திருமூலட்டானாவென்று
நேசத்தைநீபெருக்கி நேர்நின்றுள்கி நித்தலுஞ்சென்றடி மேல்வீழ்ந்துநின்று
ஏசற்றுநின்றுமையோ இறேர்யெ என்றுஏம்பெருமானென்றென்றே ஏத்தாநில்லே 09

புலன்களைந்தால் ஆட்டுண்டுபோதுபோக்கிப் புறம்புறமேதிரியாதே போதுநெஞ்சே
சலங்கொள் சடைமுடியுடையதலைவா வென்றுந்தக்கன்செய்பெரு வேள்விதகர் யென்றும்
இலங்கையர் கோன்சிரநெரித்தவிறைவா வென்றுமெழிலாரூரிடங்கொண்ட எந்தாயென்றும்
நலங்கொள் அடியென்தலை மேல்வைத்தாயென்றும் நாடோறும்நவின்றேத்தாய் நன்மையாமே10

**5 திருநள்ளாறு - பழந்தக்கராகம் - சம்பந்தர்**
**அனல்வாதத்தின்போது தீயிலிட்ட ஏட்டில் எழுதப்பெற்ற திருப்பதிகம்**
**எதிர்பாராத இடரில் நின்றும் பிழைக்க சனி 8, 7:.1:.2, 4 பாதியாதிருக்க**

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பென்னகலம்
பாகமார்த்தபைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவணஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே 01

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண் ஓர்பாலுடையன்
ஏடுடையமேலுலகோடு ஏடழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம் பெருமான் மேயது நள்ளாறே 02

ஆன்முறையால் அற்றவெண் ணீறாடி அணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பததர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான நம்பெருமான் மேயது நள்ளாறே 03

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல்பெய் தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம் பொற்பாத நிழ்ற்சேர
நல்கவல்ல நம்பெருமான் ஏமேயது நள்ளாறே 04

ஏறுதாங்கி யூர்தி பேணிஏர் கொளிளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னி மேலோர் இளமதியஞ் சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பினிரை கொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே 05

திங்களுச்சி மேல்விளங்குந்தேவன் இமையோர்கள்
எங்களுச்சி எம்மிறைவன் என்றடியே எயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்அடியார்கட் கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே 06

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித் திகழ்தருகண்டத் துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே 07

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண் ணீறாடுவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பான்மதியஞ்சூடி
நட்டமாட நம்பெருமான் மேயது நள்ளாறே 08

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுடனேயொடுக்கி
அண்ணலாகாவண்ணனீல் நீல் ஆரழல்போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென்று எள்கவலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே 09

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறிசெல்லன்மின்
முசுவண்டார் கொன்றை சூடி மும்மதிலும்முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயதுநள்ளாறே 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழிஞானசம்பந்தன் நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவ்ரோடு உலகில் உறைவாரே 11

**6 திருநள்ளாறு - சாதாரி - சம்பந்தர்**

**கூன் பாண்டியான் சபைமுன்னே பரமசிவனே பரம்பொருள் என்னும் உண்மையை அனல்வாதம் மூலம் நிலைநாட்ட ஓதி ஏட்டை எரியாது காத்தது**

தளிரிளவள ரொளிதனதெழில் தருதிகழ்மலைமகள்
குளிரிளவள ரொளிவனமுலையிணையவை குலவலின்
நளிரிளவள ரொளிமருவுநள்ளாறர் தந்நாமமே
மிளிரிளரெரியிடில் இவைபழுதிலை மெய்ம்மையே 01

போதமர்தருபுரி குழலெழின்மலை மகள்பூணணி
சீதமதணிதருமுகிழி ளவனமுலை செறிதலின்
நாதமதெழிலுருவனைய நள்ளாறர் தந்நாமமே
மீதமதெரியினில் இடிலிவைபழுதிலை மெய்ம்மையே 02

இட்டுறு மணியணியிணர்புணர்வள ரொளியெழில்வடம்
கட்டுறு கதிரிளவனமுலையிணை யொடுகலவலின்
நட்டுறு செறிவயன்மருவுநள்ளாறர் தந்நாமமே
இட்டுறு மெரியினில் இடில்இவை பழுதிலைமெய்ம்மையே 03

மைச்சணி அரியரிநயனிதொன்மலை மகள்பயனுறு
கச்சணிகதிரிளவன முலையவை யொடுகலவலின்
அச்சணிமிடறுடை அடிகள் நள்ளாறர்தந்நாமமே
மெச்சணியெரியினில் இடில் இவைபழுதிலை மெய்ம்மைய 04

பண்ணியன் மலைமகள்கதிர் விடுபருமணியணிநிறக்
கண்ணியல் கலசமதனமுலையிணை யொடுகலவலின்
நண்ணிய குளிர்புனல்புகுதுநள்ளாறர் தந்நாமமே
விண்ணிய லெரியினில் இடில்இவைபழு திலைமெய்ம்மையே 05

போதுறுபுரி குழன்மலை மகளிளவளர் பொன்னணி
சூதுறுதளிர் நிறவனமுலையவை யொடுதுதைதலின்
தாதுறு நிறமுடையடிகள் நள்ளாறர்தந்நாமமே
மீதுறு மெரியினில் இடில்இவைபழுதிலை மெய்ம்மையே 06

கார்மலி நெறிபுரிகுழன் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலையுடைய நள்ளாறர்தந்நாமமே
ஏர்மலி யெரியினில்இடில்இவை பழுதிலைமெய்ம்மையே 07

மன்னியவள ரொளிமலைமகள் தளிர்நிறமதமிகு
பொன்னியன் மணியணி கலசம தனமுலைபுணர்தலின்
தன்னியல் தசமு கனெரிய நள்ளாறர்தந்நாமமே
மின்னிய லெரியினில் இடில்இவைபழுதிலை மெய்ம்மையே 08

கான்முக மயிலியன் மலைமகள் கதிர்விடு கனமிகு
பான்முகமியல் பணையிணைமுலை துணையொடு பயிறலின்
நான்முகன் அரிஅறிவரிய நள்ளாறர்தந்நாமமே
மேன்முக வெரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே 09

அத்திரநயனி தொன்மலைமகள் பயனுறுமதிசயச்
சித்திரமணியணி திகழ்முலை யிணையொடு செறிதலின்
புத்தரொடமணர் பொய்பெயரு நள்ளாறர்தந்நாமமே
மெய்த்திரளெரியினில் இடில்இவை பழுதிலைமெய்ம்மையே 10

சிற்றிடையரிவை தன்வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிறமுறு கழுமலநகர் ஞானசம்பந்தன்
கொற்றவன் எதிரிடைஎரியினில் இட இவைகூறிய
சொற்றெரி யொருபதும் அமறிபவர் துயரிலர் தூயரே 11

## அதிகாரம் 13

**1 உலகப்பொயம்மை, வாழ்க்கைப்பொய்ம்மை, மனிதப்பொய்ம்மை இவையொழிந்து இன்புற்று வாழ**

**திருக்கோடிகா - நட்டராகம் - சம்பந்தர்**

இன்றுநன்று நாளைநன்று என்று நின்றவிச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப்போக விட்டுப்போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதிவிரிபுனல்
கொன்றை துன்றுசென்னியான் கோடிகாவுசேர்மினே 01

அல்லல் மிக்கவாழ்க்கையை யாதரித்திராதுநீர்
நல்லதோர் நெறியினை நாடுதுந்நடம்மினே
வில்லையன்ன வாணுதல்வெள்வளை யொர்பாகமாம்
கொல்லை வெள்ளை யேற்றினான் கோடிகாவுசேர்மினே 02

துக்கமிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்துநீர்
தக்கதோர் நெறியினைச் சார்தல் செய்யப்போதுமின்
அக்கணிந் தரைமிசை யாறணிந்த சென்னிமேல்
கொக்கிற கணிந்தவன் கோடிகாவு சேர்மினே 03

பண்டுசெய்த வல்வினை பற்றக் கெடும்வகை
உண்டுமக்குரைப்பன் தான் ஒல்லை நீரெழுமினோ
மண்டுகங்கை செஞ்சடைவைத்துமா தொர்பாகமாக்
கொண்டுகந்த மார்பினான் கோடிகாவுசேர்மினே 04

முன்னை நீர்செய்பாவத்தான் மூர்த்திபாதஞ் சிந்தியாது
இன்ன நீரிடும்பையின் மூழ்கிறீரெழும்மினே
பொன்னை வென்றகொன்றையான் பூதம்பாடஆடலான்
கொன்னவிலும் வேலினான் கோடிகாவுசேர்மினே 05

ஏவமிக்க சிந்தையோடின்ப மெய்தலாமெனப்
பாவமெத் தனையுநீர் செய்தொரு பயனிலைக்
காவன்மிக்கமா நகர்காய்ந்து வெங்கனல்படச்
கோவமிக்க நெற்றியான் கோடிகாவுசேர்மினே 06

மற்றிவாழ்க்கை மெய்யெனும் மனத்தினைத் தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின் சேவடிபணிந்து வந்தெழுமினோ
வெற்றி கொள் தசமுகன் விறல்கெடவிருந்ததோர்
குற்றமில் வரையினான் கோடிகாவு சேர்மினே 07

மங்குநோ யுறும்பிணி மாயும்வண்ணஞ் சொல்லுவன்
செங்கண்மால் திசைமுகன் சென்றளந் துங்காண்கிலா
வெங்கண்மால் விடையுடை வேதியன் விரும்புமூர்
கொங்குலாம் வளம்பெழிற் கொடிகாவு சோமினே 08

தட்டொடு தழைமயிற் பீலிகொள் சமணரும்
பட்டுடை விரிதுகி லினார்கள்சொற் பயனிலை
விட்டபுன் சடையினான் மெதகும்முழவொடும்
கொட்டமைந்த ஆடலான கோடிகாவு சோமினே 09

கொந்தணி குளிர்பொழிற் கோடிகாவுமேவிய
செந்தழல் உருவனை சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலியுளாய கேள்விஞானசம்
பந்தன தமிழ் வல்லார் பாவமான பாறுமே 10

**2 திருத்தூங்கானைமாடம் - பழந்தக்கராகம் - சம்பந்தர்**

ஒடுங்கும்பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாயவாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும்மிடங்கருதி நின்றீரெல்லாம் அடிகளடிநிழற் கீழாளாம் வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங் கெழுமனைகடோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத்தடங்கோயில் சேர்தூங்கானைமாடந் தொழுமின்களே 01

பிணிநீரசாதல்பிறத்தல் இவைபிரியப் பிரியாதபேரின்பத்தோடு
அணிநீரமேலுக மெய்தலுறில் அறிமின் குறைவில்லைஆனேறுறுடை
மணிநீலகண்டமுடைய பிரான்மலைமகளுந்தானு மகிழ்ந்துவாழும்
துணிநீர்க்கடந்தைத் தடங்கோயில்சேர்தூங்கானை மடந்தொழுமின்களே 02

சாநாளும் வாழ்நாளுந்தோற்றமிவை சலிப்பாய வாழ்ககைஒழியத்தவம்
ஆமாறறியா தலமந்துநீர் அயர்ந்துங் குறைவில்லை ஆனேறுடைப்

பூமாணலங்கலிலங்கு கொன்றை புனல் பொதிந்த புன்சடையினானுறையும்
தூமாண்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானைமாடந் தொழுமின்களே

ஊன்றும்பிணி பிறவிகேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கைஒழியத்தவம்
மான்றுமனங்கருதி நின்றீரெல்லாம் மனந்தரிந்து மண்ணின்மயங்காதுநீர்
மூன்றுமதிலெய்த மூவாச்சிலை முதல்வர்க்கிடம் போலு முகில்தோய்கொடி
தோன்றுங்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே 04

மயநீர்மையில்லாத தோற்றம்மிவைமரணத் தொடொத்தழியு மாறாதலால்
வியநீரமேலுக மெய்தலுறின் மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர வோங்கியநாமங்களால் ஓவாது நாளுமடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந்தொழுமின்களே 05

பன்னீர்மைகுன்றிச் செவிகேட்பிலா படர்நோக்கிற் கண்பவளந்நிற
நன்னீர்மைகுன்றித திரைதோலொடு நரைதோன்றுங் காலநமக்காதன்முன்
பொன்னீர்மைதுன்றப் புறந்தோன்று நற்புனல் பொதிந்த புன்சடையினானுறையும்
தொன்னீர்க்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந்தொழுமின்களே 06

இறையூண்டு களோடிடுக்கணெய்தியிழிப் பாயவாழ்க்கையொழியத்தவம்
நிறையூணெறி கருதிநின்றீரெல்லாநீள்கழலே நாளுநினைமின்சென்னிப்
பிறைசூழலங்கல் இலங்குகொன்றைபிணையும் பெருமான்பிரியாதநீர்த்
துறைசூழ்கடந்தைத் தடங்கோயில்சேர்லுதூங்கானை மாடந்தொழுமின்களே 07

பல்வீழ்ந்து நாத்தளர்ந்துமெய்யில்வாடிப்பழிப் பாய வாழ்க்கை யொழியத்தவம்
இல்சூழி ங்கருதி நின்றீரெல்லாம் இறையே பிரியாதெழுந்துபோதும்
கல்சூழரக்கன்கதறச் செய்தான்காதலியுந்தானுங் கருதிவாழும்
தொல்சீர்க்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானைமாடந தொழுமின்களே 08

நோயும்பிணியும் அருந்துயரம் நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்
வாயுமனங் கருதிநின்றீரெல்லாமலர்மிசைய நான்முகனுமண்ணும்விண்ணும்
தாயவடியளந்தான் காணமாட்டாத் தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங்கடந்தைத் தடங்குகோயில்சேர் தூங்கானைமாடந்தொழுமின்களே 09

பகடூர்பசிநலிய நோய்வருதலாற் பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
முகடூர்மயிர்கடிந்த செய்கையாரும் மூடுது வராடையரு நாடிச்சொன்ன
திகடீர்ந்தபொய்ம் மொழிகடேறவேண்டா திருந்திழையுந்தானும் பொருந்திவாழும்
துகடீர்கடந்தைத்தடங் கோயில்சேர் தூங்கானை மாடந்தொழுமின்களே 10

மண்ணார்முழவ திரும் மாடவீதிவயற்காழி ஞானசம்பந்தனல்ல
பெண்ணாகடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ் சுந் தூங்கானைமாடமேயான்
கண்ணார்கழல் பரவு பாடல்பத்துங் கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோருலகத்து மேவிவாழும் விதியதுவே யாகும்வினைமாயுமே 11

**3 திருவாரூர் - திருத்தாண்டகம் - அப்பர்**

**திருவாரூரில் உழவாரப்பணி செய்யும்போது பொன்னும், மணியும், இரத்தினமும், தோன்றவும் அவற்றைக் கணக்கொடுக்காது தூரவீசினார்**

பொய்ம்மாயப் பெருங்கடலிற்புலம்பா நின்றபுண்ணியங்காள்தீ வினைகாள்
திருவேநீங்கள்

இம்மாயப் பெருங்கடலை அரித்துத்தின்பீர்க் கில்லையே கிடந்ததுதான்
யானேல்வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ணலாரூர்த் தடங்கடலைத் தொடர்ந் தோரையடங்
கச்செய்யும்
எம்மான்றன் அடித்தொடர்வான் உழிதர்கின்றேன் இடையிலேன் கெடுவீர்காளிட
றேன்மின்னே 01

ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர்வேண்டிற்றொருவீர் வேண்டீரீண்டிவ் அவனியெல்லாம்
உம்பரமேயும் வசமே யாக்கவல்லீர்க் கில்லையே நுகர்போகம் யானேல்வானோர்
உம்பெருமாய் ஊழியுமா யுலகேழாகிஒள்ளாரூர்நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமானாய் நின்றவரனைக்காண்பேன் றடைப் படுவேனாக்கருதித்
தருக்கேன்மின்னே 02

சில்லுருவிற் குறியிருத்தி நித்தல்பற்றிச் செழுங்கணானோக்கு மிது வூக்கமன்று
பல்லுருவிற்றொழில் பூண்டபஞ்சபூதப் பளகீரும் வசமன்றே ரெபாரே லெல்லாம்
சொல்லுரு விற் சுடர்மூன்றாய் உருவமூன்றாய்த் தூநயனமூன்றாகியாண்டவாரூர்
நல்லுருவிற் சிவனடியேஅடைவேனும்மானமைப் புண்ணேன் கமைத்து நீர்நடமின்களே 03

உன்னுருவிற் சுவை யொளியூறோசைநாற்றத் துறுப்பினதுகுறிப்பாகும் ஐவீர்நுங்கள்
மன்னுருவத்தியற்கைகளால் வைப்பீர்க்கையோ வையகமே போதாதே யானேல்வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னுகுன்றைப் புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப்
புகுந்தென்சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத் தலைப்படுவேன் றுலைப்படுப்பான்
தருக்கேன்மின்னே 04

துப்பினை முன்பற்றறா விறலேமிக்க சோர்வுபடுசூட்சியமே சுகமேநீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ்வுலகமெல்லாம் உழறுமிது குறைமுடிப்பீர்க்கரிதேயென்றன்
வைப்பினைப் பொன்மதிலாரூர் மணியைம் அவைகன் மணாளனை யெம்பெருமானை
வானோர்தங்கள்
அப்பனைச்செப்பிடவடைவேனும்மால் நானும் ஆட்டுணேன் ஒட்டந் தீங்கலையேன்
மின்னே 05

பொங்குமதமானமே யார்வச்செற்றக்குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெருமா நிலத்தின் எல்லையெல்லாம் உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதேயானேல்
அங்கமலத்தயனொடு மாலாகில் மற்றுமதற்கப்பா ஒன்றாகி அறியவொண்ணாச்
செங்கனகத்தனிக் குன்றைச் சிவனையாரூர்ச் செல்வனைச் சேர்வேனும்மாற்
செலுத்துணேனே 06

இடர்பாவ மெனமிக்க துக்கவேட்கை வெறுப்பே யெனறனை வீருமுலகையோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள் குறிநின்ற தமையாதேயானேல் வானோர்
அடையார்தம் புரமூன்றுமெரி செய்தானையமரர்கடம் பெருமானை யரனையாரூர்
உடையானைக்கடுகச் சென்றடைவேனும்மால் ஆட்டுணேன் ஓட்டந் தீங்கலையேன்
மின்னே 07

விரைந்தாளு நல்குரவேசெல்வேபொல்லா வெகுட்சியே மகிழ்ச்சியேவெறுப்பேநீங்கள்
நிரந்தோடிமா நிலத்தை அரித்துத்தின்பீர்க் கில்லையே நுகர்போகம் யானேல்வானோர்
கரைந்தோடவரு நஞ்சைஅமுது செய்தகற்பகத்தைத் தற்பரதுதைத் திருவாரூரில்
பரஞ்சோதிதனைக் காண்பேன்படேனும் பண்பிற்பரிந்தோடியோட்டந்து பகட்டேன்
மின்னே 08

மூள்வாய தொழிற்பஞ்சேந்திரிய வஞ்ச முகரிகாண் முழுதுமிவ்உலகையோடி
நாள்வாயுநும் முடைய மம்மராணை நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல்வாணேன்
நீள்வான முகடதனைத் தாங்கிநின்ற நெடுந்தூணைப் பாதாளக் கருவையாரூர்
ஆள்வானைக் கடுகச் சென்றடைவேனும்மால் ஆட்டுணேன் ஓட்டந்தீங்கலையேன்
மின்னே 09

சுருக்கமொடு பெருக்கநிலைநித்தல்பற்றித் துப்பறையென்றனைவீர்
இவ்வுலகையோடிச்
செருக்கிமிகைச் செலுத்திஉமசெய்கைவைகல் செய்கின்றீர்க்கமையா
தேயானேன்மிக்க
தருக்கிமிகவரை யெடுத்தவரக்க னாகந்தளரவடி யெடுத்த வன்றன்பாடல்கேட்டு
இரக்கமெழுந்தருளிய வெம்பெருமான்பாதத்திடையிலேன் கெடுவீர்காளிடறேன்
மின்னே 10

## 4 திருக்கொண்டீச்சரம் - திருநேரிசை - அப்பர்

வரைகிலேன் புலன்களைந்தும் வரைகிலாப்பிறவிமாயப்
புரையிலே அடங்கிநின்றுபுறப்படும் வழியுங்காணேன்
அரைகயிலே மிளிந்நாகத்தண்ணலே அஞ்சலென்னாய்
திரையுலாம் பழனவேலித்திருக் கொண்டீச்சரத்துளானே 01

தொண்டனேன் பிறந்துவாளாதொல் வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமே சுமந்துநைந்துபோர்வ தோர்வழியுங்காணேன்
அண்டனே அண்டவாணா அறிவனே அஞ்சலேன்னாய்
தெண்டிரைப் பழனஞ்சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துளானே 02

கால்கொடுத் தெலும்புமூட்டிக்கதிர் நரம்பாக்கையார்த்துத்
தோலுடுத் துதிரமட்டித்தொகு மயிர்மேய்ந்தகூரை
ஓலெடுத் துழைஞர் கூடியொளிப் பதற்கஞ்சுகின்றேன்
சேலுடைப் பழனஞ்சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துளானே 03

கூட்டமாஐய்வர் வந்துகொடுந் தொழிற்குணத்தராகி
ஆட்டுவார்க் காற்றகில்லேன் ஆடரவசைத்தகோவே
காட்டிடையரங்கமாக ஆடியகடவுளேயோ
சேட்டிரும் பழனவேலித்திருக் கொண்டீச் சரத்துளானே 04

பொக்கமாய் நின்றபொல்லாப் புழுமிடைமுடைகொளாக்கை
தொக்குநின்றைவர் தொண்ணாற்றறு வருந்துயக்கமெய்த
மிக்குநின்றிவர்கள் செய்யும்வேதனைக்கு அலந்துபோனேன்
செக்கரே திகழும்மேனித் திருக்கொண்டீச் சரத்துளானே 05

ஊனுலாமுடை கொள்ஆக்கையுடை கலமாவதென்றும்
மானுலா மழைக்கணார்தம் வாழ்க்கையை மெய்யென்றெண்ணி
நானெலாமினைய காலநண்ணிலேன் எண்ணமில்லேன்
தேனுலாம் பொழில்கள்சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துளானே 06

சாணிருமடங்கு நீண்டசழக் குடைப்பதிக்குநாதர்
வாணிகர்ஐவர் தொண்ணூற்றறு வருமயக்கஞ்செய்து
பேணிய பதியினின்றுபெயரும் போதறியமாட்டேன்
சேணுயர்மாட நீடுதிருக் கொண்டீச் சரத்துளானே 07

பொய்ம்மறித் தியற்றிவைத்துப் புலால்கமழ்பண்டம்பெய்து
பைம்மறித்தியற்றியன்ன பாங்கிலாக்குரம்பைநின்று
கைம்மறித்தனைய ஆவிகழியும் போதறியமாட்டேன்
செந்நெறிச் செலவுகாணேன்றிருக் கொண்டீச் சரத்துளானே 08

பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க்கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்தநாளும் மெலிவொடுமூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளுங் குறிக்கோளிலாதுகெட்டேன்
சேலுலாம்பழனவேலித் திருக்கொண்டீச்சரத்துளானே 09

வரைதரு கருமென்கூந்தல் விளங்கிழை வேலொண்கண்ணாள்
வெருவரவிலங்கைக் கோமான் விலங்கலை யெடுத்தலுான்று
பருவரையனைய தோளும் முடிகளும் பாறிவீழத்
திருவிர லூன்றினானே திருக்கொண்டீச் சரத்துளானே 10

## அதிகாரம் 14

**1 அடியார்க்கு அடியானாகும் பேறு பெறுதல்**
**திருத்தொண்டத்தொகை**
**கொல்லிகௌவா - சுந்தரர்**

தில்லைவாள் அந்தணர் தம்அடியார்க்கும் அடியேன்றிரு நீலகண்டத்துக்
குயவனார்க்கடியேன்
இல்லையேயென்னாத இயற்பகைக்கும் அடியேன் இளையான்றன்
குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிக வல்லமெய்ப்பொருளுக்கடியேன் விரிபொழில்சூழ்குன்றையார்
விறன்மிண்டற்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார்அமர் நீதிக் கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே 01

இலைமலிந்த வேல் நம்பியெறிபத்தற்கடியேன் ஏனாதி நாதன்றனடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பிகண்ணப் பற்கடியேன் கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள் வள்ளன்மானக்கஞ்சாறனெஞ் சாதவாட்டாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்தபுனன் மங்கைஆனாயற கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே 02

மும்மையாலுல காண்டமூர்த்திக்கு மடியேன்முருகனுக்கும் உருத்திரபசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப்போவாற்கு மடியேன்றிருக்குறிப்புத் தொண்டர்தம்மடியார்க்கு
மடியேன்
மெய்ம்மையே திருமேனிவழிபடா நிற்கவெகுண்டெழுந்த தாதையைமழு வினாலெறிந்த
அம்மையானடிச் சண்டிப்பெருமானுக்கடியேனாரூரனாரூரில்ம்மானுக்காளே 03

திருநின்ற செம்மையேசெம்மையாக் கொண்டதிருநாவுக் கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச் சிறைதனடியார்க்கு மடியேன்பெருமிழலைக் குறும்பற்கும்
பேயர்க்குமடியேன்
ஒருநம்பியப் பூதியடியார்க்குமடியேனொலிபுனல் சூழ்சாத்தமங்கை
நீலநக்கற்கடியேன்
அருநம்பி நமிநந்தியடியார்க்கு மடியேனாரூரனாரூரிலம் மானுக்காளே 04

வம்பறாவரிவண்டு மணநாறமலருமதுமலர் நற்கொற்றையானடியலாற்பேணா
எம்பிரான் சம்பந்தனடியார்க்கு மடியேனேயர்கோன்கலிக்கா மனடியார்க்குமடியேன்

நம்பிரான்றிரு மூலனடியார்க்குமடியேனாட்ட மிகுதண்டிக்குமூர்க்கற்கு மடியேன்
அம்பரான் சோமாசிமாறனுக்கு மடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே

வார்கொண்டவன முலையாளுமைபங்கன் கழலேமறவாதுகல் லெறிந்தசாக்கியற்கு மடியேன்
சீர்கொண்டபுகழ் வள்ளல்சிறப்புலிக்கு மடியேன்செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டற்கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவாற்கு மடியேன்கடற்காழிக் கணநாதனடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன்களத்தைக் கோனடியேனாரூரனா ரூரிலம்மானுக்காளே 06

பொய்யடிமையில்லாதபுலவர்க்கு மடியேன்பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச் சோழற்கடியேன்
மெய்யடியானர சிங்கமுனையரையற்கடியேன் விரிதிரைசூழ்கடனாகையதிபத் தற்கடியேன்
கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன் கலியன் கழற்சத்திவரிஞ்சையர் கோனடியார்க்கு மடியேன்
ஐயடிகள்காடவர் கோனடியார்க்கு மடியேனாரூரனாரிலம்மானுக்காளே 07

கறைக்கண்டன் கழலடியேகாப்புக் கொண்டிருந்தகணம்புல்ல நம்பிக்குங்காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையானெல்வேலி வென்றநின்ற சீர்நெடுமாறனடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவளமிருளகற்றுஞ் சோதித்தொன்மயிலை வாயிலானடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பிமுனையடுவாற் கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே 08

கடல்சூழ்ந்த வுலகெலாங்காக்கின்ற பெருமான்காடவர் கோன்கழற்சிங்கனடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்ததார் நம்பியிடங்கழிக்குந் தஞ்சைமன்னவனாஞ் செருத்துணை தன்னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்தபுலிய தண்மேலரவாடவாடி பொன்னடிக்கேமனம் வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பிகோட்புலிக்கு மடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே 09

பத்தராய்ப்பணிவார்க் ளெல்லார்க்குமடியேன் பரமனையேபாடுவாரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச்சிவன் பாலேவைத்தார்க்குமடியேன் திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்
முப்போதுந்திருமேனி தீண்டுவார்க்கடியேன் முழுநீறுபூசியமுனிவர்க்கு மடியேன்
அப்பாலுமடிச்சார்ந்த வடியார்க்குமடியே னாரூரனாரூரிலம் மானுக்காளே 10

மன்னியசீர்மறை நாவனின்றவூர்ப்பூசல்வரிவளையாள் மானிக்குநேசனுக்கு மடியேன்
தென்னவனாயுல காண்டசெங்கணார்க்கடியேன் திருநீலகண்டத்துப்பாணனார்க் கடியேன்
என்னவனாமரனடி யேயடைந்திட்டசடையனிசை ஞானிகாதலன்றிரு நாவலூர்க்கோன்
அன்னவனா மாரூரனடிமையேட்டுவப் பாராரூரிலம்மானுக்கன் பராவாரே 11

## 2 திருவாலங்காடு - பழம்பஞ்சுரம் - சுந்தரர்

முத்தாமுத்திதர வல்லமுகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தாசித்தித் திறங்காட்டுஞ் சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர் பலர்போற்றும்பரமா பழையனூர்மேய
அத்தாவாலங் காடாவுன் அடியார்க்கடியேன் ஆவேனே 01

பொய்யே செய்துபுறம் புறமேதிரிவேன்றன்னைப் போகாமே
மெய்யேவந்திங் கெனையாண்டமெய்யா மெய்யர்மெய்ப்பொருளே
பையாடரவமரைக் கசைத்த பரமாபழையனூர்மேய
ஐயாவாலங் காடாவுன் அடியார்க் கடியேனாவேனே 02

தூண்டா விளக்கினற்சோதிதொழுவார் தங்கள்துயர்தீர்ப்பாய்
பூண்டாயெலும்பைப் புரமூன்றும்பொடியாச் செற்றபுண்ணியனே
பாண்டாழ் வினைகளவைதீர்க்கும் பரமாபழையனூர்மேய
ஆண்டா ஆலங்காடாவுன் அடியார் கடியேனாவேனே 03

மறிநேரொண் கண்மடநல்லார்வலையிற் பட்டுமதிமயங்கி
அறிவேயழிந் தேனையாநான் அறிவேமையார் கண்டமுடையானே
பறியாவினைகளவை தீர்க்கும்பரமா பழையனூர்மேய
ஆலங்காடாவுன்அறிவே அடியார்க்கடியேனாவேனே 04

வேலங்காடு தடங்கண்ணார் வலையுட்பட்டுன்னெறிமறந்து
மாலங்காடிமறந் தொழிந்தேனமணியே முத்தேமரகதமே
பாலங்காடீ நெய்யாடீபடர்புன் சடையாய்பழையனூர்
ஆலங்காடாவுன் அடியார்க்கடியேனாவேனே 05

எண்ணார் தங்கள் எயிலெய்த எந்தாயெந்தைபெருமானே
கண்ணாயுல கங்காக்கின்ற கருத்தா திருத்தலாகாதாய்
பண்ணாரிசைகளது கொண்டு பலரு மேத்தும்பழையனூர்
அண்ணாவாலங் காடாவுன் அடியார்க் கடியேனாவேனே 06

வண்டார் குழலியுனம நங்கைபங்கா கங்கைமணவாளா
விண்டார் புரங்களெரி செய்தவிடையாய வேதநெறியானே
பண்டாழ் வினைகள பலதீர்க்கும்பரமா பழையனூர்மேய
அண்டா ஆலங்காடாவுன்னடியார்க் கடியேனாவேனே 07

பேழ்வாயர வினணையானும் பெரியமலர் மேலுறைவானும்
தாழாதுன்றன் சரண்பணியத் தழலாய்நின்ற தத்துவனே
பாழாம்வினை களவை தீர்க்கும் பரமாபழைய னூர்தன்னை
ஆள்வாய் ஆலங்காடாவுன் அடியார்க் கடியயேனாவேனே 08

எம்மானெந்தை மூத்தப்பனேழேழ் படிகாலெமையாண்ட
பெம்மானீமப் புறங்காட்டிற்பேயோடாடல் புரிவானே
பன்மாமலர்களவை கொண்டுபலருமேத்தும் பழையனூர்
அம்மாவாலங் காடாவுன் அடியார்க் கடியேனாவேனே 09

பத்தர்சித்தர் பலரேத்தும்பரமன் பழையனூர்மேய
அத்தனாலங் காடன்றன்அடிமைத் திறமேஅன்பாகிச்
சித்தர்சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார் பரமனடியே பணிவாரே 10

# அதிகாரம் 15

**1 திருவடிப்பேறு கிடைத்தல்**

**திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம் - அப்பர்**

**அப்பர் திருச்சத்திமுற்றப் பதியில்இப்பதிகத்தைப் பாடி பூவாரடிச் சுவடென்மேன் பொறித்துவை என்றலும் சிவபெருமான் அவரை நல்லூருக்குவா என்றருளிச் செய்தார்**

கோவாய் முடுகியடுதிறற்கூற்றங் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவாடென்மேற்பொறித்துவை போகவிடில்
மூவாமு முப்பழிமூடுங்கண்டாய் முழங்குந்தழற்கைத்
தேவாதிருச் சத்திமுற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே 01

காய்ந்தா யனங்கனுடலம் பொடிபடக்காலனைமுன்
பாய்ந்தாயுயிர் செகப்பாதம்பணிவார் தம்பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பாயடியேற் கருளாயுன்னன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்திமுற்றதுறையுஞ் சிவக்கொழுந்தே 02

பொத்தார் குரம்பைபுகுந்தைவர் நாளும்புகலழிப்ப
மத்தார்தயிர் போன்மறுகுமென் சிந்தைமறுக்கொழிவி
அத்தா வடியேனடைக்கலங் கண்டாயமரர்கள்தம்
சித்தா திருச்சத்திமுற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே 03

நில்லாக் குரம்பைநிலையாக் கருதியிந்நீணில்த்தொன்று
அல்லாக்குழி வீழ்ந்தயர்வுறுவேனை வந்தாண்டுகொண்டாய்
வில்லேர்புருவத்துமையாள் கணவாவிடிற்கெடுவேன்
செல்வா திருச்சத்திமுற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே 04

கருவுற்றிருந்துன் கழலேநினைந் தேன்கருப்புவியில்
தெருவிற்புகுந் தேன்றிகைத்தடியேனைத் திகைப்பொழிவி
உருவிற்றி கழுமுமையாள்கணவா விடிற்கெடுவேன்
திருவிற்பொலி சத்திமுற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே 05

வெம்மை நமன்றமர்மிக்குவிரவி விழுப்பதன்முன்
இம்மையுன்றாளென்றனெஞ் சத்செழுதிவையீங்கிகழில்
அம்மையடியேற் கருளுதியென்பது இங்காரறிவார்
செம்மை தருசத்திமுற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே 06

விட்டார் புரங்களொருநொடிவேவவொர் வெங்கணையால்
சுட்டாயென் பாசத்தொடர் பறுத்தாண்டுகொடும்பிபம்பும்
மட்டார் குழலிமலைமகள் பூசைமகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சத்திமுற்றத் துறையுஞ்சிவக்கொழுந்தே 07

இகழ்ந்தவன் வேள்வியழித்திட்டிமையோர் பொறையிரப்ப
நிகழ்ந்திடவன்றே விசயமுங்கொண்டது நீலகண்டா
புகழ்ந்த வடியேன்றன்புன்மைகடீரப் புரிந்துநல்காய்
திகழ்ந்த திருச்சத்திமுற்றத் துறையுஞ்சிவக்கொழுந்தே 08

தக்கார்வமெய்திச் சமணத்விர்ந்துன்றன் சரண்புகுந்தேன்
எக்காதலெப்பயனுன திறமல்லாலெனக்குளதே
மிக்கார்திலையுள் விருப்பாமிகவடமேரு வென்னும்
திக்கா திருச்சத்திமுற்றத் துறையுஞ்சிவக்கொழுந்தே 09

பொறித்தேரரக்கன் பொருப்பெடுப்புற் றவன்பொன்முடிதோள்
இறத்தாளொரு விரலூன்றிட்டலற விரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய் கொடியேன்செய்குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய் திருச்சத்திமுற்றத் துறையுஞ்சிவக்கொழுந்தே 10

**2 திருநல்லூர் - திருத்தாண்டகம் - அப்பர்**

**நாயனாரின் வேண்டுகோளுக்கு இணங்க உன்னுடைய நினைபதனை முடிக்கின்றோம் என்று சொல்லி தம்முடைய திருவடியை அவருடைய சிரசின்மேல் சூட்டியருளினார்- சிவபெருமான்**

நினைந்து ருகுமடியாரைநைய வைத்தார்நில்லாமேதீ வினைகணீங்கவைத்தார்
சினந்திருகுகளிற்றுரிவைப் போர்வைவைத்தார் செழுமதியின்றளிர் வைத்தார்
சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத்தேறத்துற்றஇன மலர்கள்போத விழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம் பெருமானார்
நல்லவாறே 01

பொன்னலத்தநறுங் கொன்றைசடை மேல்வைத்தார் புலியுரியினதள் வைத்தார்
புனலும்வைத்தார்
மன்னலத்த திரடோண்மேன்மழுவாள் வைத்தார்வார் காதிற் குழை வைத்தார்
மின்னலத்த நுண்ணிடையாள்பாகம் வைத்தார்வேழத்தினுரி வைத்தார் வெண்ணூல்
வைத்தார்
நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம்பெருமானார்
நல்லவாறே 02

தோடேறு மலர்க்கொன்றை சடைமேல்வைத்தார் துன்னெருக்கின் வடம்வைத்தார்
துவலைசிந்தப்
பாடேறுபடு திரைகளெரியவைத்தார் பனிமத்தமலர் வைத்தார் பாம்பும் வைத்தார்
சேடேறு திருநுதன்மேனாட்டம் வைத்தார்சிலைவைத்தார் மலைபெற்ற மகளைவைத்தார்
நாடேறு திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 03

வில்லருளி வருபுருவத் தொருத்திபாகம் பொருத்தாகிவிரி சடைமேலருகிவைத்தார்
கல்லருளிவரி சிலையா வைத்தாரூராக் கையிலாயமலை வைத்தார்கடவூர்வைத்தார்
சொல்லருளியற நால்வர்க்கறியவைத்தார் சுடுசுடலைப்பொடி வைத்தார்துறவிவைத்தார்
நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார்
நல்லவாறே 04

விண்ணிரியுந்திரி புரங்களெரியவைத்தார் வினைதொழுவார்க் கறவைத்தார்
துறவிவைத்தார்
கண்ணெரியாற் காமனையும்பொடியா வைத்தார் கடிக்கமலமலர் வைத்தார்
கைலைவைத்தார்
திண்ணெரியுந் தண்புனலுமுடனே வைத்தார்திசை தொழுதுமிசையமரர் திகழ்ந்துவாழ்த்தி
நண்ணரிய திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 05

உற்றுலவுபிணியுலகத் தெழுமைவைத்தார் உயிர்வைத்தாருயிர் செல்லுங் கதிகள்வைத்தார்
மற்றமரர்கணம்வைத்தார் அமரர்காணாமறைவைத்தார் குறைமதியம் வளரவைத்தார்
செற்றமலியார்வ மொடுகாமலோ பஞ்சிறவாதநெறிவைத்தார் துறவிவைத்தார்
நற்றவர்சேர் திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 06

மாறுமலைந் தாரரணமெரியவைத்தார் மணிமுடிமேலர வைத்தாரணி கொண்மேணி
நீறுமலிந்தெரியாடல்நிலவவைத்தார் நிலயம்வைத்தார் நெற்றி மேற்கண் வைத்தார்நிலயம்வைத்தார்
ஆறுமலைந்தறு திரைகளெறிய வைத்தார் ஆவத்தாலடியமரர் பரவவைத்தார்
நாறுமலர்த் திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 07

குலங்கண்மிகு மலைகடல்கண்ஞாலம் வைத்தார்குருமணி சேரரவைத்தார் கோலம்வைத்தார்
உலங்கிளருமரவத்தினுச் சிவைத்தாருண்டருளிவிடம் வைத்தாரெண்டோள் வைத்தார்
நிலங்கிளரும் புனல்கனல் உளநிலம் வைத்தார்நிமிர் விசுபின்மிசை வைதார் நினைந்தாரிந்தாள்
நலங்கிளருந் திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 08

சென்றுருளுங்க கதிரிரண்டும் விசும்பில்லைத்தார் திசைபத்துமிரு நிலத்திற்றிருந்த வைத்தார்
நின்றருளியடியமரர் வணங்கவைத்தார் நிறைதவமுமறை பொருளுநிலவ வைத்தார்
கொன்றருளிக் கொடுங்கூற்றம் நடுங்கியோடக்குரை கழற்சேவடிவைத்தார் விடையும் வைத்தார்
நன்றருளுந் திருவடியென்தலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 09

பாம்புரிஞ்சிமதி கிடந்துதிரைகளேங் கப்பனிக்கொன்றை சடைவைத்தார் பணிசெய்வானோர்
ஆம்பரிசுதமக் கெல்லாமருளும் வைததார்அடுசுடலைப் பொடிவைத்தார் அழகும்வைத்தார்
ஓம்பரியவல் வினைநோய்தீர வைத்தார் உமையையொரு பால்வைத்தாருகந்துவானோர்
நாம்பரவுந் திருவடியென்றலை மேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே 10

குலங்கிளரும் வருதிரைகளேழும் வைத்தார்குருமணி சேர்மலைவைத்தார் மலையைக்கையால்
உலங்கிளர வெடுத்தவன் தோண்முடியுநோவ வொருவிரலாலுறவைத்தார் இறைவாவென்று
புலம்புதலும் அருளொடு போர்வாளும் வைத்தார்புகழ்வைத்தார் புரிந்தாளாக்கொள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென்றலை மேல்வைத்தார்தல்லூரெம் பெருமானார் நல்வாறே 11

**3 திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம் - அப்பர் நாயனாரின் தோளிலே சூலக்குறியும்இடபக்குறியும் பொறிக்கப்பெற்றமை**

பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவிகாப்ப தற்கிச்சையுண்டே லிருங்கூற்றகல
மின்னாருமூ விலைச்சூலமென்மேற் பொறிமேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட்டூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே 01

ஆவாசிறு தொண்டனென்னினைந்தா னென்றரும்பிணிநோய்
காவாதொழியிற் கலக்குமுன்மேற்பழி காதல்செய்வார்

தேவாதிருவடி நீறென்னைப் பூசுசெந்தாமரையின்
பூவார் கடந்தையுட்டூங்கானைமாடத் தெம்புண்ணியனே 02

கடவுந்தி கிரிகடவாதொழியக்க யிலையுற்றான்
படவுந்திரு விரலொன்றுவைத்தாய்பனிமால் வரைபோல்
இடபம்பொறித் தென்னையேன்று கொள்ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுட்டூங்கானை மாடத்தெந்தத்துவனே 03

**4 திருவதிகைவீரட்டானைம் - கொல்லிக்கொவாணம் சுந்தரர் நாயனார் உறசுகத்திலிருந்தபோது திருவீரட்டநாதாசிரசின்மீது திருவடி பதித்தமை**

தம்மானை அறியாத சாதியார் உளரே சடைமேற்கொள் பிறையானை
விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்உடையானை விடையானைக்
கறைகொண்டகண்டத்
தெம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடும்என்னும் ஆசையால்
வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போலியானே 01

முன்னேஎம் பெருமானை மறந்தென்கொல்மறவாதொழிந்தென்கொல்
மறவாத சிந்தையால் வாழ்வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்குன்றமே
ஈசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னேஎன் அத்தாஎன் றமரரால் அமரப் படுவானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னேஎன் எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போலியானே 02

விரும்பினேற் கெனதுள்ளம் விடகிலா விதியே விண்ணவர்தம் பெருமானே
மண்ணவர்நின் றேத்தும்
கரும்பேஎன் கட்டியே என்றுள்ளத்தால் உள்கிக் காதல்சேர் மாதராள்
கங்கையாள் நங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும் வரிஅரவும் உடன்துயில
வைத்தருளும் எந்தை
இரும்புனல்வந் தெறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போ லியானே 03

நாற்றானத் தொருவனை நானாய பரனை நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின் தலையானைக் கடுங்கலுழிக்
கங்கைநீர் வெள்ள
ஆற்றானைப் பிறையானை அம்மானை எம்மான் தம்மானை யாவர்க்கும்
அறிவரிய செங்கண்
ஏற்றானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போ லியானே 04

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவும் உடையானை அதிகைமா
நகருள்வாழ் பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயில்அன்ன மொழியாள் சடையிடையிற்
கயலினங்கள் குதிகொள்ளக் குலவி

வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி மறிகடலை இடங்கொள்வான்
மலையாரம்வாரி
ஏந்துநீர் எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போ லியானே 05

மைம்மானமணிநீல கண்டத்தெம் பெருமான் வல்லேனக் கொம்பணிந்த
மாதவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்பும் தடுமாறுஞ்சடையானைத்
தாழ்வரைக்கை வென்ற
வெம்மான மதகரியின் உரியானை வேதவிதியானை வெண்ணீறு சண்ணித்தமேனி
எம்மானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போ லியானே 06

வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு மிகஇரங்கி அருள்புரிந்து
வீடுபே றாக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத் தெண்டோள்
எம்பொருமனைப் பெண்பாகம் ஒருபால்
செய்தானைச் செக்கர்வான் ஒளியானைத் தீவாய் அரவாடு சடையானைத்
திரிபுரங்கள் வேவ
எய்தானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போ லியானே 07

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை பொடியாடு திருமேனி நெடுமாறன்
முடிமேல்
தென்னானைக்குடபாலின் வடபாலின் குணபாற் சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள் தம்பெருமானைக்கருமானின் உரியானை அதிகை
மாநகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போலியானே 08

திருந்தாதவாள் அவுணர் புரமூன்றும் வேவச்சிலைவளைவித் தொருகணையால்
தொழில்பூண்ட சிவனைக்
கருந்தாள மதகளிற்றின் உரியானைப் பெரிய கண்மூன்றும் உடையானைக்
கருதாத அரக்கன்
பெருந்தோள்கள் நாலைந்தும் ஈரைந்து முடியும் உடையானைப் பேயுருவ
மூன்றுமுற மலைமேல்
இருந்தானை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன்போலியானே 09

என்பினையே கலனாக அணிந்தானை எங்கள் எருதேறும் பெருமானை இசைஞானி
சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன் வன்றொண்டன் ஆரூரன்
மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கும் அறிவரிய அத்தர் பெருமானை அதிகைமா
நகருள்வாழ்பவனை
என்பொன்னை எறிகெடில வடவீரட்டானத் துறைவானை இறைபோதும்
இகழ்வன் போலியானே 10

# அதிகாரம் 16

## 1 முத்தியடைதல்

### திருத்தாண்டகம் - அப்பர் - திருப்புகலூர்

### அப்பர் இப்பாடலைப்பாடி சிவன் திருவடி அடைந்தார்

எண்ணுகேனென் சொல்லியெண்ணுகேனோ எம்பெருமான்றிருவடியே யெண்ணினல்லால்
கண்ணிலேன்மற் றோர்களை கணில்லேன்கழலடியேகைதொழுது காணினல்லால்
ஒண்ணுளேஒன்பது வாசல்வைத்தாய் ஒக்கவடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியாஉன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே 01

அங்கமேபூண்டாய் அனலாடினாயஆதிரையாயஆல் நிழலாய் ஆனேறூர்ந்தாய்
பங்கமொன்றில்லாத படர்சடையினாய் பாம் போடுதிங்கள் பகை தீர்த்தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்சமுத்திரத்தினஞ் சுண்டுசாவாமூவாச்
சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன் திறிருப்புகலூர்மேவியதேவதேவே 02

பையரவக்கச்சையாய் பால்வெண்ணீற்றாய் பளிக்குக்குழையினாய் பண்ணார் இன்சொல்
மைவிரவுகண்ணாளைப் பாகங்கொண்டாய் மான்மறிகையேந்தினாய் வஞ்சக்கள்வர்
ஐவரையுமென்மேற் றரவறுத்தா யவர்வேண்டுங்காரியமிங் காவதில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே 03

தெருளாதார் மூவெயிலுந்தீயில்வேவச் சிலைவளைத்துச் செங்கணையாற் செற்றதேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந்தீர்ப்பாய் மருந்தாய்ப்பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்றும்
அருளாகியாதியாய் வேதமாகி யலர்மேலானீர்மேலா னாய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே 04

நீரேறு செஞ்சடைமேல்நிலாவெண்டிங்கள் நீங்காமை வைத்துகந்த நீதியானே
பாரேறுபடுதலையிற் பலிகொள்வானே பண்டரங்கற் காய்ந்தானே பாவநாசா
காரேறுமுகிலனைய கண்டத்தானே கருங்கைக்களிற்றுரிவை கதறப் போர்த்த
போரெறே உன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே 05

விரிசடையாய் வேதியனே வேதகீதா விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்
திரிபுரங்க ளெரிசெய்த தேவதேவே திருவாரூர்த் திருமூலட்டான மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகாளத்தாய் வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தாயென்றும்
புரிசடையாய் உன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே 06

தேவார்ந்ததேவனைத் தேவரெல்லாந் திருவடிமேல் அலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடி நட்டமாடி நான்முகனுமிந்திரனும் மாலும்போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய் கழுக்குன்றத்துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே 07

நெய்யாடி நின்மலனேநீலகண்டா நிறைவுடையாய்மறைவல்லாய் நீதியானே
மையாடுகண்ட மடவாள்பாகத்தானே மான்றோலுடையாய் மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடு கூவிளங்கொன்றைமாலை கொண்டடியேன் நானிட்டுக்கூறிநின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே 08

துன்னஞ்சேர் கோவணத்தாய்தூய நீற்றாய்துதைந்திலங்கு வெண் மழுவாள்கையிலேந்தித்
தன்னையுந் தண்மதியும்பாம்பும் நீருஞ்சடைமுடிமேல் வைத்துகந்த தன்மையானே

அன்னநடைமடவாள் பாகத்தானே அக்காரம் பூண்டானே ஆதியானே
பொன்னங்கழலடிக்கே போதுகின்றேன பூம்புகலூர்மேவிய புண்ணியனே

ஒருவனையுமல்லா துணராதுள்ளம் உணர்ச்சித்தடுமாற்றத் துள்ளேநின்ற
இருவரையுமூவரையு மென்மேலேவியில்லாத தரவறுத்தாய்க் கில்லேனேலக்
கருவரைசூழ் கானலிலங்கைவேந்தன் கடுந்தேர்மீதோடாமைக் காலாற்செற்ற 10
பொருவரையாய் உன்னடிக்கே போதுகின்றேன்பூம்புகலூர்மேவிய புண்ணியனே

**2 காதலாகிக்கசிந்து என்ற பாடல் பக்கம் 2**

**3 திருவஞ்சைக்களம் - இந்தளம் - சுந்தரர்**
**சுந்தரர் வெள்ளை யானையில் திருக்கைலாயம் சென்றமை**

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே சடைமேற்கங்கை வெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல் கொண்டசைத்ததென்னே அதன்மேற்கத நாகக்கச் சார்த்ததென்னே
மலைக்குந்நிகர் ஒப்பன வன்திரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அலைக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே 01

பிடித்தாட்டிஓர் நாகத்தைப் பூண்டதென்னே பிறங்குஞ்சடை மேற்பிறை சூடிற்றென்னே
பொடித்தான் கொண்டு மெய்ம்முற்றும் பூசிற்றென்னே புகரேறுகந்தேறல் புரிந்ததென்னே
மடித்தோட்டந்து வன்திரை எற்றியிடவளர் சங்கம் அங்காந்துமுத்தஞ்சொரிய 02
அடித்தார் கடலங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே

சிந்தித்தெழு வார்க்குநெல் லிக்கனியே சிறியார்பெரியாமனத் தேறல்உற்றால்
முந்தித்தொழுவார் இறவார் பிறவார் முனிகள்முனியே அமரர்க்கமரா
சந்தித்தடமால் வரை போல்திரைகள் தணியாதிட றுங்கடலங்கரைமேல் 03
அந்தித்தலைச் செக்கர்வானே ஒத்தியால் அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே

இழைக்கும்எழுத்துக்குயிரே ஒத்தியால் இலையே ஒத்தியால் உனையே ஒத்தியால்
குழைக்கும்பயிர்க்கோர்புயலே ஒத்தியால் அடியார்தமக்கோர்குடியே ஒத்தியால்
மழைக்குந்நிகர் ஒப்பன வன்திரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண் 04
டழைக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே

வீடின்பயனென் பிறப்பின்பயனென் விடையேறுவதென் மதயானை நிற்கக்
கூடும்மலை மங்கை ஒருத்தியுடன் சடைமேற்கங்கை யாளைநீ சூடிற்றென்னே
பாடும் புலவர்க் கருளும் பொருளென் நிதியம்பல செய்த கலச்செலவில் 05
ஆடுங்கடலங் கரைமேல் மகோதை அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே

இரவத்திடு காட்டெரியாடிற்றென்னே இறந்தார் தலையிற்பலி கோடல்என்னே
பரவித்தொழு வார்பெறுபண்டம்என்னே பரமாபரமேட்டி பணித்தருளாய்
உரவத்தொடு சங்கமொடிப்பிமுத்தம் கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரிகொண் 06
டரவக்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே

ஆக்கும்அழிவும் ஐயநீ என்பன்நான் சொல்லுவார் சொற் பொருளவை நீஎன்பன்நான்
நாக்கும்செவி யுங்கண்ணும் நீஎன்பன்நான் நலனேஇனி நான்உனை நன்குணர்ந்தேன்
நோக்கும்நிதியம்பல எத்தனையும் கலத்திற்புகப் பெய்துகொண்டேறநுந்தி
ஆர்க்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே

வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன விளங்குங்குழைக் காதுடை
வேதியனே
இறுத்தாய் இலங்கைக்கிறை யாயவனைத் தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தாய்கடல் நஞ்சமு துண்டுகண்டம் கடுகப்பிர மன்தலை யைந்திலும் ஒன்றறுத்தாய்
கடலங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக்களத்தப்பனே 08

பிடிக்குக்களி றேஒத்தியால் எம்பிரான் பிரமற்கும் பிரான் மற்றை மாற்கும்பிரான்
நொடிக்கும்மள விற்புரம் மூன்றெரியச் சிலைதொட்டவனேஉனை நான்மறவேன்
வடிக்கின்றன போற்சில வன்திரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டடிக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே 09

எந்தம்அடிகள் இமையோர்பெருமான் எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண்கடலங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனை
மந்தம்முழ வுங்குழலும் இயம்பும் வளர்நாவலர் கோன்நம்பி யூரன்சொன்ன
சந்தம்மிகு தண்டமிழ் மாலைகள் கொண்டடிவீழவல்லார் தடுமாற்றிலரே 10

**4 திருக்கயிலாயம் - பஞ்சமம் - சுந்தரர்**
**சுந்தரர் சிவன் அனுப்பிய வெள்ளையானையில் ஏறிக்கையிலாயம் சென்றமை**

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே 01

ஆனை உரித்தபகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை அருள் புரிந்தான் நொடித்தான் மலை உத்தமனே 02

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டன் எனை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோ நெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே 03

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தஎன்னை அதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரம்அல்லதொரு
வேழம் அருள் புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே 04

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே 05

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன்னாடர் முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பரம் அல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே 06

நிலைகெட விண்அதிர நிலம்எங்கும் அதிர்ந்தசைய
மலையிடையானைஏறி வழியேவருவேன் எதிரே
அலைகடலால் அரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே 07

அரவொலி ஆகமங்கள் அறிவார் அறிதோத்திரங்கள்
விரவியவேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே 08

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே 09

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான் மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன் சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே 10

((முத்தி முற்றிற்று)

## அதிகாரம் 17

**சைவநெறி தழைத்தோங்கவும், சமணம், சாக்கியம் கிறித்த - இச்லாம் பிரமணியம் முதலிய பரசமய இருள் நீங்கவும்**

**சம்பந்தர் அருளிய பதிகங்களில் வரும் 9ஆம் 10ஆம் பாடல்கள் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதையும் சைவசமயமே முழுமுதற் சமயம் என்பதையும் உணர்த்தா நிற்கும்**

**1 திருநீற்றுப்பதிகம், தென்னாட்டில் மறுசமயங்கள் அடியோடு மாழச்செய்த அற்புத மந்திரம் இதுவாகும் திருவாலவாய் - காந்தாரம் - சம்பந்தர்**

மந்திரமாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தரமாவது நீற துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான்றிருநீறே 01

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர்தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மைதவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல்வயல் சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே 02

முத்திதருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பரவவினியது நீறு
சித்திதருவது நீறு திருவாலவாயான்றிருநீறே 03

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு

மாணத்தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான்றிருநீறே 04

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசஇனியது நீறு பெருந்தவத்தோர்களுக்கொல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயான்றிருநீறே 05

அருத்தமதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந்தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகுமாளியை சூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே 06

எயிலதுவட்டது நீறு இருமைக்குமுள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப்பொலிதரு சூலத்தாலவாயான்றிருநீறே 07

இராவணன்மேலதுநீறு எண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
அராவணங்குந் திருமேனி ஆலவாயான்றிருநீறே 08

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கள் தங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்கும் இன்பந்தருவதுநீறு
ஆலமதுண்டமிடற்றெம் ஆலவாயான்றிருநீறே 09

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளார் ஏத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்தும் ஆலவாயான்றிருநீறே 10

ஆற்றலடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே 11

**2 சம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர் வைத்த தீ சம்பந்தர் ஏவலால் பையவே சென்று கூன் பாண்டியனைப் பற்றியது - (சூலைநோய்)**

**திருஆலவாய் -பண் - கௌசிகம்**

செய்யனேதிருவாலவாய்மேவிய
ஐயனேஅஞ்சலேன்றருள்செய்யெனைப்
பொய்யராம் அமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே 01

சித்தனே திருவாலவாய் மேவிய
அத்தனேம் அஞ்சலென்றருள்செய்யெனை
எத்தராம் அமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்தென்னன்பாண்டியற்காகவே 02

தக்கன்வேள்ளிவிதகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்கனே அஞ்சலென்றருள்செய்யெனை
எக்கராம் அமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே 03

சிட்டனே திருவாலவாய் மேவிய
அட்டமூர்த்தியனே அஞ்சலென்றருள்
துட்டராம் அமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்தென்னன்பாண்டியற்காகவே 04

நண்ணலார்புரமூன்றெரியாலவாய்
அண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
எண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியல் தமிழ்ப்பாண்டியற்காகவே 05

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையும்
அஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்தென்னன்பாண்டியற்காகவே 06

செங்கண்வெள்விடையாய்திருவாலவாய்
அங்கணா அஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல்
பங்கமிதென்னன்பாண்டியற்காகவே 07

தூர்த்தன்வீரந் தொலைத்தருளாலவாய்
ஆத்தனே அஞ்சலென்றருள்செய்யெனை
ஏத்திலா அமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திவன்தென்னன் பாண்டியற் காகவே 08

தாவினானயன அறானறியாவகை
மேவினாய்திருவாலவாயாயருள்
தூவிலாஅமணர்கொளுவுஞ்சுடர்
பாவினான்தென்னன்பாண்டியற்காகவே 09

எண்டிசைக்கெழில ஆலவாய்மேவிய
அண்டனே அஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராம் அமணர் கொளுவுஞ்சுடர்
பண்டிமன்தென்னன்பாண்டியற்காகவே 10

அப்பனாலவாய் ஆதிஅருளினால்
வெப்பந்தென்னவன் மேலுறமேதினிக்
கொப்பஞானசம் பந்தனுரைபத்தும்
செப்பவல்லவர் தீதிலாச்செல்வரே 11

**3 சமணரின் கொடுமையால் பிளையாருக்கு ஏதும் நடந்துவிடுமோ என அஞ்சிய மங்கையற்கரசியாருக்கு ஆறுதல் கூறிய மிகத் துணிச்சலான பதிகம்.**

மானினேர் விழிமாதராய் வழுதிக்குமா பெருந்தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்று நீபரிவெய்திடேல்

ஆனைமா மலையாதியாய விடங்களிற் பலவல்லல்சேர்
ஈனர்கட்கெளியேன லேன்திருவாலவாய் அரனிற்கவே 01

ஆகமத்ளதாடு மந்திரங்களமைந்த சங்கதபங்கமாப்
பாகதத்தொடுரைத்து ரைத்தசனங்கள் வெட்குறுபக்கமா
மாகதக்கரி போற்றிரிந்து புரிந்துநின்றுணுமாசுசேர்
ஆகதர்க் கெளியேனலேன்றி ருவாலவாயரனிற்கவே 02

அத்தகு பொருளுண்டுமில்லையு மென்றநின்றுவர்க் கச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்துவாதி லழிந்தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க் கெளியேன் அலேன்றிருவாலவாய் அரனிறகவே 03

சந்துசேனனும் இந்து சேனனுந் தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனுமுதலதாகிய பெயர்கொளா
மந்திபோற்றிரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா
அந்தகர்க் கெளியேனலேன் றிருவாலவாய் அரனிறகவே 04

கூட்டினார் கிளியின் விருத்த முரைத்ததோ் ஒலியின்றொழிற்
பாட்டுமெய் சொலிபம் பக்கமே செலுஎக்கர்தங்களைப்பலலறம்
காட்டியேவருமா டெலாங்கவர் கையரைக் கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெளி யேனலேன்றி ருவாலவாய் அரனிற்கவே 05

கனகநந்தியும் புட்பநந்தியும்ப பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங் குனகநந்தியுந்திவணநந்தியு மொழிகொளா
அனகநந்தியர் மதுவொழிந்து அவமேதவம் புரிவோமெனும்
சினகருக் கெளியேனலேன்றி ருவாலவாய் அரனிற்கவே 06

பந்தணம்மவை யொன்றிலம் பரிவொன்றிலம் மெனவாசக
மந்தணம் பலபேசிமாசறு சீர்மையின்றிய நாயமே
அந்தணம் மருகந்தணம் மதுபுத்தணம் மதுசித்தணச்
சிந்தணர்க் கெளியேனலேன்றிரு வாலவாய் அரனிற்கவே 07

மேலெனக் கெதிர்இல்லையென்ற அரக்கனார் மிகைசெற்றதீப்
போலியைப் பணியக்கிலா தொரு பொய்த்தவங் கொடுகுண்டிகை
பீலிகைக் கொடு பாயிடுக்கி நடுக்கியே பிறர்பின்செலும்
சீலிகட் கெளியேனலேன்றி ருவாலவாய் அரனிற்கவே 08

பூமகற்கு மரிக்குமோர்வரு புண்ணியன் னடிபோற்றிலார்
சாமவத்தையி னார்கள்போல் தலையைப்பறித் தொரு பொய்த்தவம்
வேமவத்தை செலுத்தி மெய்ப் பொடியட்டிவாய் சகதிக்குநேர்
ஆமவர்க்கெளி யேனலேன் றிருவாலவாய் அரனிற்கவே 09

தங்களுக்குமசாக்யர்க்குந் தரிப்பொணாத நற்சேவடி
எங்கணாயக னேதாழிந்திடுக்கேமடுத் தொருபொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியே புலவோர்களைப் பழிக்கும்பொலா
அங்கதர்க் கெளியேனலேன் றிருவாலவாய் அரனிற்கவே 10

எக்கராம் அமண்கையருக்கெளி யேனலேன்ற திவாலவாய்ச்
சொக்கனென்னு ளிருக்கவே துளங்கும்முடித் தென்னன்முன் இவை

தக்கசீர்ப்புகலிக்கு மன்றமிழ்நாதன் ஞானசம்பந்தன்வாய்
ஓக்கவே யுரைசெய்தபத்தும் உரைப்பவர்க்கு இடரில்லையே 11

**4 அனல்வாதம் புனல்வாதங்களில் சமணரைத் தோற்கடித்தபின்னர் 8000 சமணர் கழுவேறிறினர் எல்லாவற்றுக்கும் உடனிருந்து அருள்பாலித்த திருவாலவாயண்ணலை போற்றிப் பாடியது**

**திருவிராகம் - கௌசிகம் - சம்பந்தர்**

வீடலால வாயிலாய் விழுயார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே 01

பட்டிசைந் தவல்குலாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாளொரு த்தியாக்
கொட்டிசைந்த வாடலாய் கூடலால வாயிலாய்
எட்டிசைத்த மூர்த்தியா யிருந்தவா றிதென்னையே 02

குற்றம்நீ குணங்க ணீகூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தாடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீபுகழ்ந் துமுன் னுரைப்பதென் முகம்மனே 03

முதிருநீர் சடைமுடி முதல்வநீ முழுங்கழல்
அதிரவீசி யாடுவாய் அழகனீ புயங்கநீ
மதுரன்நீ மணாளனீ மதுரையால வாயிலாய்
சதுரனீ சதுர்முகன் கபாலமேந்து சம்புவே 04

கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின் றுமுன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையிற் றேர்வதில்லை தேவரே 05

பொன்றயங்கிலங்கொளி ந்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய் பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய் கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலே நினைப்பதே உநியமமே 06

ஆதியந்த மாயினாய் ஆலவா யிலண்ணலே
சோதியந்த மாயினாய் சாதியுள்ளொர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையாற் கிளர்தருக் கினார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே 07

கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடற்
றுறையிலங்கை மன்னனைத் தோளடர வூன்றினாய்
மறையிலங்கு பாடலாய்ம் துரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே 08




திருவள்ளுவர் அச்சகம், பருத்தித்துறை வீதி, நல்லூர். தொ.பே: 021 222 2181